# கலைச்செல்வி

மகளிர் மலர்



ஆவணி-1960.

25 சதம்.

# மக்கள் வைத்தியசாலை

## கே. கே. எஸ். வீதி, சுன்னுகம்.

### ஸ்தாபிதம் 28-11-58

மக்கள் நன்மையையும், வசதியையும். சுகாதார வாழ்க்கையையும் நோக்கமாகக் கொண்ட சிறந்த வைத்தியசாலை இதுவே

*தினந்தோறும் திறக்கப்படும் நேரம்*
*காலை 7-30 தொடக்கம் மாலை 9 மணி வரை*

*உயர்தர சிகிச்சை பெற உதவுமிடம்*
மக்கள் வைத்தியசாலையே.

WE POSSESS ALL LATEST PATENT MEDICINES FOR SALE

SERVICE AVAILABLE DAY AND NIGHT
OUR MOTTO IS SERVICE

MEDICAL OFFICER ALWAYS AVAILABLE

# PEOPLE'S DISPENSARY

## CHUNNAKAM

(MANAGING PROPRIETOR : MR. K. S. KANDIAH)

போன்: 281 தந்தி: "ஜுவெல்லர்ஸ்"

மதிப்பிற் சிறந்த வைரங்கள்
அழகிற் சிறந்த ஆபரணங்கள்

யாவற்றிற்கும்

ஈழத்திருநாட்டில்
இணையற்ற ஸ்தாபனம்

# தங்க மாளிகை

யாழ்ப்பாணம்

நம்பிக்கை! நாணயம்! நயம்!
உத்தரவாதம்!

பெற்ற நகைகளை 32 வருடங்களாகச் செய்தளித்து
அமோக ஆதரவுபெற்ற
இலங்கை இந்தியாவின்
மிகப்பெரிய நகை வைர வியாபாரிகள்

# எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

யாழ்ப்பாணம்

கிளைகள்: கொழும்பு, திருச்சி, சென்னை, காயல்பட்டணம்

# S. SINNATHURAI & BRO.,



786 கல்கி பீடி

Importers & Exporters.

Sole Agents for

## 786 Kalki Beedies

நீங்கள்
உல்லாசமாகப்
புகைப்பதற்கு

## 786 கல்கி பீடிகள்

**திறம் பீடிப் புகையிலை, பீடி இலை.**

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

## சி. சின்னத்துரை அன் பிறதர்,

**39, K. K. S. ரேட் : : யாழ்ப்பாணம்.**

---

**கிளை:**

44, 3ம் குறுக்குத் தெரு : . கொழும்பு.

---

தொழிற்சாலை:

118/12, ஆட்டுப்பட்டித் தெரு : : கொழும்பு.

ஏ.
கே.
எஸ்.
அன்
ச
ன்
ஸ்

போன்.

519

*

உங்கள்
அபிமானத்திற்கும்
அன்பிற்கும்

உரிய

நகை
வைர வியாபாரிகள்

நகை மாளிகை

63, 65, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்

கலை: 2 | சார்வரி-ஆவணி | காட்சி: 7

# மகளிர் மலர்

பொருளடக்கம்.

**கதை**

காப்பு
பிராயச்சித்தம்
எது அழகு?
நல்லமுத்து.

**கட்டுரை.**

ஓவியக்கலை,
கனகிபுராணம்.
சிறுவர்களும் திரைப்படமும்

**தொடர்கதை:**

உனக்காக, கண்ணே

**பிற:**

வணக்கம்
உங்கள் கருத்து
"பட் பட்"
வழி தெரிந்தது.
வளருந்தமிழ்
அறிவுவளர்ச்சிப் போட்டி

கோடையிலே இளைப்பாறி
குளிர்தரு பானங்கள் குடிப்போம்.

உயர்தர மூலப்பொருட்களினால், சுகாதார
முறைப்படி தயாரிக்கப்பட்ட சிறந்த,

இனிமையான குளிர்பானங்கள்.

எல்லா
வைபவத்திற்கும்
ஏற்ற
பானங்கள்!

ஸ்ரீ முருகன் சோடா தொழிற்சாலை,
நீர்வேலி.


சுத்தமாக

சுகாதாரமுறைப்படி

நவீன இயந்திரங்களினால்

விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு

தயாரிக்கும்

# பேபி  மார்க்



# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

தயாரிப்பாளர்

**சுப்பிரமணியன் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

**ராஜா ஸ்ரோர்ஸ்**

போன்: 372

2/B, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தந்தி: ESVES

# உங்கள்

## பிற்காலத்தைப் பற்றிச் சிந்தித்தீர்களா ?.

வாழ்க்கை எப்பொழுதுமே இன்பகரமாயிராது. இப்போதைய குறைந்த வருவாயில் நீங்கள் செட்டாகச் செலவழித்து, மகிழ்ச்சியோடு உங்கள் காலத்தைக் கடத்திஞலும், உங்கள் உயிருக்குயிரானவர்களிடமிருந்து, விதி, திடீரெனச் சதிசெய்து, உங்களைப் பிரித்து விடலாம். அப்பொழுது உங்களை நம்பியிருப்பவர்களை யார் காப்பாற்றுவார்கள் ?. அவசியமான செலவுகளுக்கு அவர்கள் யாரிடமிருந்து பணம் பெறுவது ?.

## எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்.

அவரவர் வருமானத்துக்கு ஏற்ற வகையில் சேமித்துப், பிற்கால நெருக்கடியைத் தவிர்ப்பதற்கேற்ற வழிகாட்டி, உதவத் தயாராய் இருக்கிறோம்.

### நடைமுறையில் உள்ள திட்டங்கள்:-

* ஆயுள், கல்வி வேதனம், விவாக ஆதாரநிதி,
* மோட்டார், * தொழிலாளி நஸ்டஈடு,
* நெருப்பு முதலிய இன்சூரன்ஸ், * மாதத்தவணைச் சேமிப்புநிதிகள்,
* அழைப்புப்பணங்கள் அறவிடப்படாத விவாக, அந்தியகால சேம [லாபநிதிகள்,
* காலவரையறுக்கப்பட்ட வைப்புநிதிகள் முதலியன.

## சேர்ந்தோர்க்குச் சேர்ந்துள்ள திட்டத்துக்குத் தக்கதாக விசேட கடன் வசதி செய்து கொடுக்கப்படும்.

விவரங்களுக்கு எழுதுங்கள் :

# இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டெட்.

280 இரண்டாம்மாடி, இராசா கட்டடம்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி ;–526. தந்தி:– " இனிக்கோ "

# வணக்கம்

நாம் முன்பு அறிவித்ததைப் போலவே, இம்மாத இதழை மகளிர் மலராக வெளியிடுகின்றோம். "கலைச்செல்வி" வாசகர்களுக்குப் பழக்கமான "உமா", "யாழ் நங்கை" ஆகியோரும் பிரபல எழுத்தாளரான 'புதுமைப் பிரியை' யும், புதிய எழுத்தாளர்களான 'பவானி', திருமதி. மக்கான் ஆகியோரும் மலருக்கு மணமூட்டுகின்றனர். வேறு பல பெண் எழுத்தாளர்களின் படைப்புகள், பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. இனி வரும் இதழ்களில் அவை வெளியிடப்படும். இம் மலர் பற்றிய கருத்தை நேயர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை எழுத்தாளர்கள் தாம் எழுதுபவற்றுள் மிகச் சிறந்தவற்றை 'கலைச்செல்வி'க்குத்தான் அனுப்பி வைக்கின்றார்கள் போல் தெரிகின்றது. அடுத்து வரும் இதழ்களில் நாம் வெளியிடவிருக்கும் செ. கணேசலிங்கன், சு. வே., இ. நாகராஜன், ச. ப. ச, சிவகுமாரன், தீவான், கசின், மு. தளையசிங்கம், வ. அ. இராசரத்தினம், ஈழத்துச்சோமு, முருகையன், திமிலைத்துமிலன், ராஜபாரதி, முதலியவர்களின் படைப்புகளைப் படித்தால், நாம் கூறுவதை நிச்சயம் ஆதரிப்பீர்கள். ஆமாம். இனி வரும் ஒவ்வொரு இதழும் ஒரு சிறந்த கலைப் பொக்கிஷமாக, இலக்கியப் பேழையாக விளங்கப் போகின்றது.

நகைச் சுவைக் கட்டுரைப் போட்டியின் மூலம், பல புதிய எழுத்தாளர்களைக் கண்டுபிடித்துக் கைதூக்கிவிடலாம் என நினைக்கின்றோம். எழுத்துலகில் தனியொளியுடன் திகழ விரும்பும் இளைஞர்கள், இந்தப் புதிய துறையில் தம் கைவண்ணத்தைக் காட்ட ஆரம்பிக்கலாம்.

மாணவர் திட்டம் பற்றி விசாரித்துப் பலர் கடிதம் எழுதியுள்ளனர். சில நடைமுறைக் கஷ்டங்களினால் ஷி திட்டம் சற்று மாற்றியமைக்கப் பட்டுள்ளது. இலங்கையிலுள்ள இளைஞர்களையும் மாணவர்களையும் ஸ்தாபன ரீதியாக ஒன்று சேர்க்கும் நமது பணியில் முதற்படியாக 'கலைச்செல்வி இளைஞர் மன்ற' த்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளோம். இது பற்றிய விபரங்கள் அடுத்த இதழில் வெளியாகின்றன.

# உங்கள் கருத்து.

**கடன்பட்டார் நெஞ்சம்!**

''பட்ட கடன்'' இவ்வருடத்தில் இதுவரை வெளியான சிறுகதைகளில் சிறந்தது. மூன்று தடவை படித்து விட்டேன். ஆனால் முடிவு இயற்கை யானதல்ல. அவ்விதம் முடித்திருக்க வேண்டியதில்லை. பொதுவாக, ''சொக்கனி''ன் பார்வை கூர்மையா கிக்கொண்டு வருகின்றது. இப்போது தான் வாழ்வைச் சரியான கண் ணோட்டத்தில் பார்க்க ஆரம்பித்திருக் கிறார்.

யாழ்ப்பாணம். இளங்கீரன்,

**வளர்ச்சி! மகிழ்ச்சி!**

ஆடி இதழில் 'மன்று கிழார்' இலங்கைப் பத்திரிகைகளின் சரித் திரத்தைச் சிறிதும் குறையின்றி எழுதி அப்பத்திரிகைகளைப் பற்றி இரத்தினச் சுருக்கமாக விமர்சனமும் எழுதி வெளியிட்ட கட்டுரை பெரி தும் பாராட்டிற்குரியது. தமிழர்கள் எல்லாருக்கும், சிறப்பாகச் சிந்தனை யாளர்க்கும் மிகவும் உபயோகமா னது என்பது என் கருத்து. இந்த இதழில் வெளிவந்த எல்லா விஷ யங்களுமே குறைவற்று விளங்குகின் றன.

பாதுக்கை, க. சிவகுருநாதன்

**தேட வந்த செல்வி**

கல்கி, விகடன்களை வாசித்து விட்டுப் பின் அவற்றைத் தேடுவ தில்லை. உங்கள் ''செல்வி''யில் கனகி புராணம், பத்திரிகை வளர்ச்சி ஆதிய கட்டுரைகள் வருவதினால், கலைச்செல் வியை விடாது சேர்த்து வைக்கச் செய்கின்றீர்களே!

சுண்டிக்குளி. விடிவெள்ளி

**சுவையூர்!**

பேட்டிக் கட்டுரை (அகிலன்) எழுத்தாளர் அறிமுகங்கள், கலைவிமர் சனங்கள் என்பன நல்ல அம்சங் கள். கேள்வி பதிலும், கடிதங் களுக்கு எழுதப்படும் பதிற் குறிப் புகளும் மிகச் சுவையானவை.

கோப்பாய். ச. ப. சர்மா

**தில்லி கண்ட செல்வி**

''கலைச்செல்வி'' இதழ்கள் ஒழுங் காகக் கிடைத்து வருகின்றன. தற் காலப் புதுப் படைப்புக்களோடேயே, தற்கால இலக்கிய ஆய்வுகளையும் வெளியிட்டுவரும் ''செல்வி''யின் பணி பாராட்டத்தக்கது.

புது டில்லி சாலை இளந்திரையன்

**எல்லார்க்கும் நல்லளாய்!**

ஆடி மாதக் ''கலைச்செல்வி''பெற் றேன். ஆரம்பமுதல் இறுதிவரை அனைத்தையுமே வாசிக்கத் தூண்டி யது. வகுப்பிலேயே வாசித்து மாண வர்களை மகிழ்வித்தேன். அண்ணாமலை நகரிலே, இடது சாரிகள், நான் நினைப்பவை, ஈழத்துப் பத்திரிகை வளர்ச்சி என்பவை என் உள்ளம் கவர்ந்த கட்டுரைகள்,

குரும்பசிட்டி த. பொன்னுத்துரை B.A.

**ஓ! வியக்(கும்)கலை**

மட்டக்களப்பு பொது நூல் நிலை யத்தில், கலைச்செல்வியில் ஓவியக் கலை என்ற கட்டுரையை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆழமான கருத்துடன் பழமையிலிருந்து புது மையைப் புது நோக்கோடு ஆராய்ந் திருப்பது போற்றுதற்குரியது.

புளியடிக்குடா ஆ. கெந்தீஸ்வரன்

**துணி(வு)மணிகள்!**

பெண்களை இடதுசாரிகளாக்கி பெண்குலம் வாழ பெண்மணிகளின் பெருமையை இவ்வளவு துணிவுடன் எடுத்தியம்பிய ''அநுசுயா'' அவர் களுக்கு என் அன்பின் நன்றி.

வேலணை கிழக்கு இரா. சிவசந்திரன்.

## எங்கள் நன்றி.

# வாழ்த்துரை

பழைய பூந்தோட்டம்,
யாழ்ப்பாணம், 25. 7. 60.

திரு. சி. சரவணபவன்,
நிர்வாக ஆசிரியர், "கலைச்செல்வி"

பேரன்புடையீர்,

வணக்கம். தங்கள் இலக்கியப் பத்திரிகை "கலைச் செல்வி"யை தவறாது படித்து மகிழ்ச்சி யுறுகிறேன். தங்கள் சேவை பாராட்டத்தக்கது. "கலைச்செல்வி" மென் மேலும் வளர்ச்சியுற்று தமிழன்பர்களின் மனதைக் கவர்ந்து அன்பும், அறிவும், பண்பும் மிக்க ஒரு தமிழினத்தை உருவாக்க அரிய சேவை செய்யும் என்பது எனது நம்பிக்கை.

கலைச்செல்விக்கு இறைவனது ஆசியை வேண்டி எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

இங்ஙனம்
மகேஸ்வரி - ஸ்ரீகாந்தா

## செல்வி. சந்திரோதயம் மூத்ததம்பி.

திருமதி நீலா சத்தியலிங்கம், செல்வி திரிபுரசுந்தரி குமாரசாமி, செல்வி சியாமளா நடராசா முதலிய நடனமணிகளால் யாழ்ப்பாணத்தின் புகழ் நாளுக்கு நாள் ஓங்கி வருகின்றது. இவர்களைப்போல் தாமும் சிறந்த நடனமணிகளாக விளங்க வேண்டுமென்ற விருப்பத்துடன் நடனக்கலையைத் திறமையுடன் கற்றுவருகின்றார்கள் மாணவிகள் பலர். சின்னஞ்சிறு வயதிலேயே தன் நடனத் திறமையால் பலரையும் கவர்ந்துவரும் செல்வி சந்திரோதயம் மூத்ததம்பி அவர்களது நடனத்தோற்றத்தை அட்டையில் வெளியிட்டுள்ளோம். இவருடைய தந்தையாராகிய திரு. மூத்ததம்பி அவர்கள் யாழ்ப்பாணம் வித்தியா கந்தோரில் கட்டட நிர்மாண மேற்பார்வையாளராகக் கடமையாற்றுகின்றார். செல்வி சந்திரோதயம் திருநெல்வேலி 'கலாலய" த்தில் நடனம் பயின்று வருகின்றார். கலையுள்ளம் படைத்த மூத்ததம்பி தம்பதிகள் ஈன்றெடுத்த இக் கலைச்செல்வி, இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் தன் புகழ்க்கொடியைப் பறக்கவிடுவார் என்று நம்புகின்றோம்.

நகைச்சுவையும் நல்ல கருத்தும் கலந்தென்றும்
பகையுணர்ச்சி மாய்க்கும் "பட் பட்"

# பட் பட்

—தாண்டவக்கோன்—

W. அருளையா, எலகம வீதி, பதுளை.

கே: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் ஏன் தமிழரசுக் கட்சியுடன் மோதிக் கொண்டு திரிகின்ருர்?

ப: மற்றக் கட்சிகளுடன் மோதுவது தன் கௌரவத்திற்கு இழுக்கு என்று கருதுவதால்!

கே. நான் படிக்கும் பாடங்கள் சில நாள் சென்றபின், மனதில் பதிவதில்லை. காரணம் என்னவோ?

ப: மனம் ஓர் அதிசய போட்டோ கருவி. அதில் உருவங்கள் பதிவதைப்போல் எழுத்துக்கள் பதிவதில்லை. கவலைப்பட்டு பிரயோசனம் இல்லை. 'பிலிமை' மாற்றிப் பாருங்கள் பலன் கிட்டலாம்!

பெ. அருள்பிரதாசன், பரமேஸ்வரக் கல்லூரி, திருநெல்வேலி.

கே: A, B யின் தகப்பனர். ஆனல் B, A யின் மகன் அல்ல. அப்படியானல் என்ன முறையென்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

ப: மகள் முறையென்று!

கே: ஒரு ஆங்கில மாதத்தையும் ஒரு தமிழ் மாதத்தையும் சேர்த்தால் அந்தச் சொல் ஒரு அறிவாளியைக் குறிக்கும். அந்த மாதங்கள் எவை?

ப: Mayதை!

M. M. ஹனிபா, கம்பளை

இலங்கையர்கோன் முதலியோர் தமிழ் நாட்டுப் பத்திரிகைகளில் எழுதினர்கள். சமீப காலத்தில் ஈழத்துச் சிறுகதையாசிரியர்களின் படைப்புக்கள் ஏதாவது பிரபல தாய்நாட்டுப் பத்திரிகைகளில் வெளிவந்தனவா?

ப: 'பிரபல பத்திரிகைகள்' என்று எவற்றைக் குறிப்பிடுகின்றீர்களோ தெரியவில்லை. நான் படிக்கும் பத்திரிகைகளில் எழுதிவரும் எழுத்தாளர்களைக் குறிப்பிடுகின்றேன். சரஸ்வதி, தாமரை, ஆகியவற்றில் டொமினிக் ஜீவா, டானியல், எச். எம். பி, வ அ. இராசரத்தினம் செ. கணேசலிங்கன் ஆகியோரின் கதைகளும், கலைமகள், கண்ணன், அமுதசுரபி ஆகியவற்றில் அருள் செல்வநாயகத்தின் கதைகளும், கங்கை, கலைக்கதிர் ஆகியவற்றில் அன்புமணியின் கதைகளும், குமுதம், கல்கண்டு ஆகியவற்றில் ஜோவலன் வாஸின் கதைகளும் 'உமா'வில் கோசுதாவின் கதைகளும் "புதுமை"யில் சிற்பியின் கதைகளும் வெளியாகியுள்ளன. இவற்றைவிட, ஈழத்திலுள்ள பன்னிரண்டு சிறுகதையாசிரியர்களின் கதைகளைத் தொகுத்து, சென்னை பாரி நிலையத்தினர் ஒரு நூலும் வெளியிட்டுள்ளனர்.

ம. வ. கானமயில்நாதன், வட்டு—மேற்கு, வட்டுக்கோட்டை.

கே: நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் இந்திய எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாங்கி ஈழத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் திங்களிதழான "கதம்பம்" பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

களைப் போன்று சிறப்பாக வெளியிடும் ஆசிரியரைப் பாராட்டத்தான் வேண்டும். திறமையும் எழுத்தாற்றலும் நிறைந்த எழுத்தாளர்கள் பலர் இலங்கையிலிருக்கும் போது, அவர்களைப் புறக்கணித்துவிட்டு, இந்திய எழுத்தாளர்களுக்கு மண்டியிடுவதன் மர்மம் என்ன என்பதுதான் தெரியவில்லை. 'உண்டியும் உறையுளும் இங்கே, உன் மனக்கருத்தங்கே" என்று விதுரனைப் பார்த்துத் துரியோதனன் கேட்டானமே, அதே கேள்வியைத்தான் நாமும் கதம்பம்' ஆசிரியரிடம் கேட்க வேண்டுமோ?

கே. குஷிநாதன், களபூமி காரைநகர்.

கே: பகையுணர்ச்சி மாய்க்கும் பட்பட் எவ்வித வினக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது!

ப: தினமும் நூற்றுக்கணக்கான வினக்கள் வந்து குவிகின்றபடியால், கலைச்செல்வியில் வெளியாகும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பப்படுகின்ற வினக்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது!

இரா. பரமசிவம், மெயின் வீதி, பண்டாரவளை.

கே: நாரிப்பிடிப்பு எதனல் உண்டாகின்றது?

ப: பெண்ணுசையினல்!! நாரி என்ருல் பெண்; பிடிப்பு என்ருல் ஆசை!

செ. சுந்தரலிங்கம், கட்டுவன், தெல்லிப்பழை,

கே: சன்னியாசிகள் ஏன் காவி வஸ்திரம் தரிக்கிருர்கள்?

ப: தாங்கள் பாவத்தின் காவிகள் (காவுபவர்கள்) என்பதைக்காட்டுவதற்கோ, என்னவோ?

கே: இலங்கை அழகு போட்டியில் அநேக தமிழ்ப் பெண்கள் கலந்து கொள்வதில்லை. ஏன்?

ப: 'நாகரிகத்தின் உச்சிக்கு வந்துவிட்டோம்' என்று எவ்வளவுதான் அவர்கள் கத்தினுலும் மற்றைய ஆடவர்களின் முன் நீச்சலுடையில் நிற்கின்ற அளவுக்கு அவர்கள் முன்னேறவில்லை. வாழ்க அவர்களின் பிற்போக்கு!

கே: இலங்கை அரசியல் வானில் வெண்மதி போல் விளங்குபவர் யார்?

ப: நமது மகா தேசாதிபதி சேர் ஒலிவர் குணத்திலகா அவர்கள். வானத்து வெண்மதி தேய்ந்து வளரும். ஆனல் மகாதேசாதிபதியவர்களின் தலை(மை)யோ அன்றும் இன்றும் ஒரேமாதிரி ஒளி வீசிக்கொண்டிருக்கிறது!

இளங்குமரன், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

கே: இதுவரையில் தமிழில் அதிகமான நாவல்கள் எழுதியவர் யார்?

ப:- சமீபத்தில் காலமான திருமதி. வை. மு. கோதைநாயகியம்மாள் என்ற பெண் எழுத்தாளர். இவர் "ஜகன் மோகினி" என்ற மாத இதழின் ஆசிரியையாக இருந்தவர்.

கே: டாக்டர் மு. வ. அவர்களின் "நெஞ்சில் ஒரு முள்" நவீனத்தைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: டாக்டரின் மற்றைய நாவல்களைப் போலவே, நல்ல தெள்ளிய தமிழ் நடையில் அமைந்திருக்கின்றது. கதையமைப்பிலும் பார்க்க, போதனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. "முள்" விஷயம் கொஞ்சம் உறுத்தத்தான் செய்கின்றது!

இராணிப்க. சதாசிவம். சுதுமலை, மானிப்

பாய்.

கே: யார் இந்த நாவேந்தன்? எங்கள் தொகுதித் தமிழரசு மேடைகளில் கனல் கக்கப் பேசுகிருரே?

ப: தொழிலுக்காக ஆசிரியர் பதவி வகிக்கும் இவர் தொண்டிற்காக எழுத்துத் துறையிலும் பேச்சுத்துறையிலும் ஈடுபட்டுள்ளார். நண்பர்களுடன் உரையாடும் பொழுது ஹாஸ்யமாகப் பேசுவர். யாராவது கூட்டத்திற்கு பேச அழைத்தால், தன் பழைய சைக்கிள் வண்டியைத் தள்ளிக்கொண்டு வந்து அமைதியாகப் பேசிவிட்டுத் திரும்பிச்செல்லும் பண்பாளர். தமிழரசுக் கட்சிக்காகப் பல ஆண்டுகள் உழைத்து வருகின்ருர்.

முல்லைக் கொடியோன், மாவுசா எஸ்டேட், மடுல்கலை.

கே: "கலைச்செல்வி"யில் ஏன் சரித்திரத் தொடர்கதைகள் பிரசுரமாவதில்லை?

ப: தரமுள்ள சரித்திரக் கதைகள் கிடைக்காததால்! இலங்கைச் சரித்திரத்தில் எத்தனையோ சுவையான சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதிலும், அவற்றைக் கோவையாக்கி, கற்பனைக் கலைவையுடன் வாசகர்கட்கு அளிக்க இலங்கை எழுத்தாளர்கள் முன்வராதிருப்பது விந்தையாக இருக்கின்றது; வேதனையும் தருகின்றது.

செல்வி. சரஸ்வதி, சுழிபுரம்.

கே: கட்டப்பொம்மன், பாகப்பிரிவினை, படிக்காத மேதை முதலிய படங்களில் சிவாஜியின் திறமையான நடிப்பிற்குப் பின் அவரை உலக நடிகர் என்கிருர்கள் இந்தியாவிலிருந்து வரும் என் நண்பர்கள். இதைப்பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: உலக நடிப்பு மேதையாக சிவாஜி போற்றிக் கொண்டாடப்படும் நாள் வெகு தூரத்திலில்லை. சிவாஜியுடன் ஒருதடவையாவது நடிக்கமாட்டோமா என்று இப்பொழுதே ஹொலிவூட்டிலுள்ள சில நடிகைகள் ஏங்கத்தொடங்கி விட்டார்களாம், ஆனல் இந்தி நடிகராகிய ஜோகருக்கு மட்டும் இது தெரியவில்லை. ஒரு பெரிய கலைஞரைத் திட்டுவதனல் தன் மதிப்பு உயருமென்று நினைக்கிருரோ!

ந. பரமகுரு தோருந்தோட்டம், மானிப்பாய்.

கே: கலைசெல்விக்கு எதிராக கலைச்செல்வனை வெளியிட்டால் அதன் முடிவு என்னவாகும்?

ப: அமெரிக்க ருெக்கெற்ருகும்!

மா. இரகுநாதன், பண்ணுகம் தெற்கு, பண்ணுகம்.

கே: இலங்கையில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னேறுமா?

ப: எவ்வித உருப்படியான கொள்கையுமற்ற, பதவி வேட்டையாளர் நிறைந்த கட்சிகள் ஒருகாலும் முன்னேறமுடியாது. இலங்கை தி. மு. க. வினருக்கு ஒரேயொரு கொள்கை தான் உண்டு. எப்படியாவது பதவிக்கு வந்துவிடவேண்டும் என்பது தான் அது.

செ. சண்முகலிங்கம், வேலணை கிழக்கு, வேலணை.

கே: இலங்கையில் தமிழ் பேசும் படித்த மாணவ, மாணவிகள் எதிர்காலம் என்ன செய்யப் போகின்ருர்கள்?

ப: "தன்கையே தனக்குதவி" என்பதை நன்கு உணர்ந்தவர்கள், வேளாண்மைசெய்யும் வீரர்களாக விளங்கப் போகின்ருர்கள், "கோழி மேய்த்தாலும் கோறணமேந்திலை மேய்க்கவேண்டும்" என்ற புது

மொழியைச் சிரமேல் தாங்குபவர்கள், இன்ரர்வியூவிற்காக, அடிக்கடி கொழும்பிற்கு ஓடி ஓடிச் சென்று, ஆடி ஆடித் திரும்பி வரப்போகின்ருர்கள்!

கே: சென்ற மாதம் கேட்கப்பட்ட கேள்விகளில் யாருக்குப் பரிசு என்பதை நீங்கள் ''கலைச்செல்வி''யில் கூறவேயில்லையே?

ப: பத்திரிகையின் இடவசதியைப் பொறுத்து, பிரசுரமாகும். கேள்வி–பதில்களின் தொகை தீர்மானிக்கப்படுகின்றது. இடமின்மையால் பரிசுக்குரிய கேள்வி–பதில் சென்றமாதம் அச்சாகவில்லை. நிரந்தரமாக எனக்கென்று சில பக்கங்களை ஒதுக்கித் தரும் வரைக்கும், பரிசளிக்கும் விஷயத்தை ஒத்திப் போட்டுள்ளேன்.

மாலா, மாலினி சகோதரிகள், யாழ்ப்பாணம்.

கே: தாண்டவமாடிக் கொண்டிருக்கும் தங்களதும், யாழ் எழுத்தாளர் தேவன், கலைச்செல்வி ஆசிரியர் ஆகியோரதும் மனைவியரின் பெயரை முறையே தருக.

ப. 1. திருமதி தாண்டவக்கோன், 2. பரமேஸ்வரி மகாதேவா; 3. ஆசிரியருடைய மனைவின் பெயரை முன் கூட்டியே சொல்வதற்கு நான் சோதிடம் கற்கவில்லையே!

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி,

கே: பதுளையிலிருந்து முல்லை என்ரெரு பத்திரிகை வெளிவருகின்றதே, நீங்கள் பார்க்கவில்லையா?

ப: முல்லையா? இல்லையே!

கே: ஈழத்தில் தலைசிறந்து விளங்கும் ஐந்து சிறுகதை எழுத்தாளர்களைக் குறிப்பிடுங்கள், பார்க்கலாம்?

ப: ஈழத்திலுள்ள சிறுகதை எழுத்தாளர்கள் ஒவ்வொருதுறையில் தனிச் சிறப்பு அடைந்துள்ளவர்கள் தான். ஆகவே ஐந்துபேரை மட்டும் பிரித்தெடுத்துக் கூறுவது கஷ்டம். சமீப காலமாகச் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க சேவை செய்து வருபவர்களைக் குறிப்பிடுகின்றேன்: உதயணன், வரதர், எஸ். பொன்னுத்துரை பீ. ஏ; செ, கணேசலிங்கன் கே. டானியேல்.

வி. ஜெயராணி, கோப்பாய் மேற்கு,

கே. பிரபல ஈழத்து எழுத்தாளர் இளங்கீரனின் முகவரியைத் தெரிவிக்கின்றீர்களா?

ப: திரு. சுபைர் இளங்கீரன், ''கனகபவனம்,'' ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு எழுதுங்கள். கடிதம் அவர் கைக்குச் செல்லும்.

தெ. இந்திரக்குமார், கோண்டாவில் மேற்கு கோண்டாவில்.

கே: இக்காலப் பெண்கள் இயற்கை அழகையா செயற்கை அழகையா அதிகமாக விரும்புகின்ருர்கள்?

ப: செயற்கை அழகைத்தான். அல்லாவிடில் காப்பும் சோப்பும் சீப்பும் விற்கும் காக்காமார் ஏன் கிராமங்களில் காணப்படுகின்ருர்கள்?

இளவரன், மணி மண்டபம், வட்டுக்கோட்டை.

கே: நம்நாடு மட்டுநகர் ''திமிலைத்துமிலனு''ம் குமுதத்தில் எழுதும் ''துமிலனு''ம் ஒருவரா?

ப: இல்லை. ''திமிலைத்துமிலன்'' மட்டக்களப்பு திமிலைதீவைச் சேர்ந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியர், இயற்பெயர் கிருஷ்ணபிள்ளை. ''மாலதி'' என்ற பெயரில் கதை, கட்டுரைகளும், ''கிருஷ்ணு'' 'என்ற பெயரில் ஓவியங்களும் தீட்டிவருகின்ருர். ''துமிலன்'' சென்னையிலேயே இருக்கின்ருர். ''தினமணிக்கதிர்'' வார இதழின் துணையாசிரியராகப் பல

காலம் பணியாற்றியவர்.

**கே:** வட்டுக்கோட்டையில் தோன்றி "மரதன்" கவிப்போட்டியில் முதற் பரிசு பெற்றமுது தமிழ்ப் புலவர் நல்லதம்பியைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம்...?

**ப:** ஓசை நயம் மிகுந்த பல பாடல்களைத் தமிழ்த்தாய்க்குச் சூட்டி மகிழ்ந்த நல்ல கவிஞர் அவர். ஆனுல் அவருடைய துர் அதிர்ஷ்டம், அவருக்குப் பிறந்தகமும் (வட்டுக்கோட்டை)புக்ககமும் (கொழும்பு சாஹிரா) சரியாக வாய்க்கவில்லை. கவிஞரால் இயற்றப்பட்டு இதுவரை அச்சில் வராதிருக்கும் கவிதைகளை அச்சேற்றவும், ஆண்டு தோறும் அவர் நினைவு நாளைக் கொண்டாடவும் அவர்களில் எவராவது முன்வரவில்லையே!

**சி. சிவரத்தினம்,** கந்தரோடை ரோட், சுன்னுகம்.

**கே:** மேற்கு வல்லரசுகள் செய்மதியையும் ரொக்கெற்றுகளையும் வானவெளியிலே அனுப்புகின்றன. இலங்கை என்ன செய்கிறது?

**ப:** அவைபற்றிய கேள்விகளைப் பரீட்சையில் கேட்டு, மாணவர்களை ஆந்தைகளாக்கி ஆகாசத்திற்கு அனுப்புகின்றதே!

**செல்வி குணரட்ணம்,** கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

**கே:** பரீட்சை முடிந்ததும் இன்றைய மாணவர்களின் நிலை யாது?

**ப:** "கியூ"வில் நிற்கும் நிலைதான்! பரீட்சை முடியுமுன்பு தியேட்டர் "கியூ'வில் நிற்கின்றூர்கள். முடிந்தபின் வேலை தேடிவருவோரின் "கியூ"வில் நிற்கின்றூர்கள்!

**கே:** தற்காலப் படிப்பின் இறுதி இலட்சியம் யாது?

**ப:** சீதனம்! படிப்புயரச் சீதனம் உயரும் -- ஆண்களுக்கு! படிப்புயரச் சீதனம் குறையும் --பெண்களுக்கு!

**ஏ. சுந்தரம்.** ஹல்கிறனேயா.

**கே:** காதலில் தோல்வியடைந்த காளைகள் என்ன செய்கின்றூர்கள்?

**ப:** தோல்விகண்ட மறுமாதமே, பலர் வேறு பெண்ணை விவாகம் செய்து நல்லபடியாக வாழ்கின்றூர்கள். சிலர் சினிமாவிலும் சிகரட்டிலும் சிந்தனையை விடுகின்றூர்கள். சிலர் உலகமே அழிந்துவிட்டது என்று ஒப்பாரி வைக்கின்றூர்கள். சிலர் எழுத்தாளராகின்றூர்கள்!

**தமிழ் வண்ணன்,** வேலணை கிழக்கு, வேலணை.

**கே:** கடமை, கண்ணியம். கட்டுப்பாடு இவை அனைத்தையும் கடைப்பிடித்து நடப்பவர் யார்?

**ப:** ஒருவர் டாக்டர் சுப்பிர

மணியம். மற்றவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்.

**கே:** நான் ஒரு கையெழுத்துப் பத்திரிகை நடத்தப்போகின்றேன். என்ன பெயர் வைக்கலாம்?

ப: "குப்பை" என்று பெயர் வையுங்கள். தரத்தைப் பற்றி எவருமே வாய்திறக்கமுடியாது. குன்றிமணி தோன்றும் இடமும் அதுதானே!

**எ. ஏபி. பூங்குன்றன்,** திருக்கோணமலை.

**கே:** நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளும் என்னை மனதாரக் காதலிக்கிருள். அன்புடையவள்; அறிவுடையவள்; அழகுடையவள். ஆனுல் தீண்டத்தகாதவள். எனவே நான் என்ன செய்ய வேண்டும்?

ப: உமக்கு அவள்மீது காதலுமில்லை, மண்ணுங்கட்டியுமில்லை. ஏதோ ஒரு கவர்ச்சி. அவ்வளவுதான். உண்மையான காதலென்ருல், அவளைத் திருமணம் செய்துவிட்டுத் திருமணப் படத்தை எனக்கு அனுப்பி வைத்திருக்க மாட்டீரா?

**செல்வி அ. லூசியா,** கச்சாய் ரோட், சாவகச்சேரி

**கே:** புகைவண்டியில் பாவையர் புன்சிரிப்பைச் சிந்திவிட்டால், ஏமாறுபவர் யார்? ஏமாற்றுபவர்யார்?

ப: ஏமாறுப்வர் - புன்சிரிப்பைச் சிந்திய அதே பாவையர்தான். ஏமாற்றுபவர்-அவர்களை ஏறெடுத்தும் பார்க்காத "போட்டர்" கள்?

**ஏச். காஸீம்,** மன்னுர்.

**கே:** வாழ்க்கையை ஏன் வண்டிக்கு ஒப்பிடுகின்ருர்கள்?

ப: அடிக்கடி சில்லெடுக்க வேண்டியிருப்பதால்!

**குறிப்பு:** என் பதிலை எதிர் பார்ப்பவர்கள், தங்கள் கேள்விகளை அஞ்சலட்டையில் எழுதி, இங்குள்ள அச்சிட்ட முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும். கையடையாளம் அனுப்ப விரும்புபவர்கள், கையின் உட்புறத்திலும், விரல்களிலும் மையைத் தடவி, சித்திரம்வரையும் தாளில் அதைப் பதித்து அனுப்பவேண்டும். ரேகைகள் எல்லாம் தெளிவாகப் பதிய வேண்டும். இம்மாதம் கிடைத்த கைரேகைப் படங்கள் தெளிவற்று இருந்தமையால் பதில் அளிக்கப்படவில்லை.

—தாண்டவக்கோன்.

**தாண்டவக்கோன்.**
மே/பா கலைச்செல்வி,
**சுன்னுகம்.**

# வளருந்தமிழ்.

**"மொழியும் நாடும்"** எழுதியவர்: "புத்தொளி" விலை சதம் 25. கிடைக்குமிடம்: மூவேந்தர் பதிப்பகம், 24/1, மணிக்கூண்டு வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

"மொழியும் நாடும்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட இச் சிறு நூல் இன்றைய மொழிப் பிரச்சினையையும், அது தீர்க்கப் படுவதற்கான வழியினையும், மொழி விடயத்தில் தமிழரசு இயக்கம் நடத்திவரும் போராட்டங்களையும் அழகுற விளக்குகிறது. யதார்த்த வாதக் கண்ணோட்டத்தின்படி தமிழ்ப் பேசும் சமுதாயம் இன்றுள்ள உண்மை நிலையினைக்காண ஓரளவு உதவுகிறது. மொழிப் பற்றும், அரசியல் ஆர்வமும் மிக்க அனைவரும் படிக்க வேண்டிய சிறு நூலாக மிளிருகிறது.

-"நாவேந்தன்"

**ஏன் தமிழரசு?** ஆசிரியர். க. செல்வநாயகம். தமிழரசிப் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே ஈழத்தில். தமிழினம் வாழ்ந்து வருகின்றது என்பதை எடுத்துக்காட்டி, நாட்டின் இன ஒற்றுமைக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் இணைப் பாட்சி இன்றியமையாதது என்பதை ஆணித்தரமாக விளக்குகின்றார் ஆசிரியர். சிலாபம், நீர்கொழும்பு ஆகிய தமிழ்ப் பெயர்களையே முறையே Chilaw, Negombo என்று ஆங்கிலேயன் மாற்றினான் என்பதிலிருந்து இவை முன்பு தமிழ்ப் பிரதேசமாக இருந்தன என்பதை நாம் மறக்கக்கூடாது என்றுஆசிரியர் கூறுகின்றார்.இச் சிறு நூலின் விலை குறிப்பிடப்படவில்லை. அன்பளிப்புகள் 'இன முழக்கம்' பத்திரிகையின் வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படும் என அறிகின்றோம்.

-ச

# கனகி புராணம்

வித்துவான் F. X. C. நடராசா

கலைச்செல்வி ஆனி மலரில் அச்சேருத அருங்கவிதைகள் என்ற தலையங்கத்தில் கனகி புராணத்திலிருந்து சிலபாடல்கள் தரப்பட்டிருந்தன.

கனகி புராணம்பற்றி சிவத்தம்பு அவர்களால் வீரகேசரியில் ஓர் கட்டுரை எழுதப்பட்டிருந்தது. பின்னர் எம்மால் தினகரனில் இதே விடயம் பற்றி எழுதப்பட்டது.

காரைநகர் முத்தையா அவர்கள் இப்புராணத்துப் பாடல்கள் பலவற்றையும் இது போன்ற வேறு புராணப் பாடல்களையும் எமக்குத் தந்து உதவினர்.

கனகி புராணம் பற்றி கலைச்செல்வி ஆனி இதழில் திரு. கனக செந்திநாதன் எழுதிய கட்டுரையும், அவர் தந்துள்ள பாடல்களும் பலரின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. புராணத்தைப் பாராட்டி வந்த கடிதங்களுள் இந்திய அன்பர்கள் எழுதியவை பல. மேலும் சில கவிதைகளை இங்கு தருகின்றார்.

வித்துவான் திரு. நடராசா

திருக்கோணமலை அகிலேசபிள்ளை அளகைக்கோன் அவர்கள் இதே புராணத்து வேறுசிலபாடல்கள் தந்து உதவினர். இவ்வகையாகப் பல பாடல்கள் வந்து சேர்ந்தன இவையெல்லாம் எமது "ஈழமுந்தமிழும்" என்ற நூலில் வெளிவரவிருக்கின்றன, எனினும் நண்பர் கனக செந்திநாதன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ஒரு சில பாடல்களைக் காட்டுவாம். அதற்கு முன்னர் கனகி புராண ஆசிரியரைப்பற்றியும் ஒரு சிறிது கூறுதல் மிகையாகாது.

நட்டுவச் சுப்பையா என்ருல் பலருக்கு ஞாபகம் வரும். குறித்த கனகியோ வண்ணார்பண்ணைச் சிவன் கோவில் எழுத்துத்தாசி. சுப்பையாவே நித்தியபடி மேளத்திற்கு ஒத்து ஊதுபவர். ஒத்தூதா நேரங்களில் நூல்களோதுவர். யாரிடம்? நாவலர் பெருமானிடம். நாவலரின் அன்புக்குரிய நன்மாணக்கர். நாவலருக்குச் சீடன்; அன்றியும் சேவகன். நாவலரின் சிவ பூசா பாத்திரங்களை அவரின் நேத்திரானந்த பூரிப்புக்கிணங்க விளக்கிச் சுத்தஞ் செய்வர் ஆகவே நாவலரின் பேரன்புக்காளானர்.

நாவலர் இருந்த சந்திக்குக் கிழக்கே இன்னேர் சந்தியுண்டு. அச் சந்தியிலேதான் வாழ்ந்தாள் கனகி, ஆகவே நாவலர் தெருவில் ஆட்புழக்கம் அதிகம். ஞானத்திருவுரு ஒரு புறம், விலைமானத்திருவுரு மறுபுறம். நாவலரிடம் கல்விகற்க ஆவலாய் வருவாரின் அமளியை தேவ தாசியை இரவு பகல் என்ற வேளைகளுக்கு குத்தகை கொள்ள விலைபேசி வருவார் ஓதை அடக்கும்.

நாவலர் பெருந்தகைக்கு இது பிடிக்கவில்லை. சொந்த மருமகனே கனகியை நிந்தமாக வைத்திருக்கும் செய்தியும் அவர் அறிந்ததே. இதற்கு ஒரு முடிவுகட்ட விரும்பினர். வெளியரங்கமாக எது வேனுஞ் செய்தால் பெரும்பான்மை ஆதிக்கத்தினுற் தாக்கப்படுவார் என்பதுந் தெரியும். ஆகவே நட்டுவச் சுப்பையாவை,

கனகியின் கொட்டத்தையடக்கக் கட்டியங்காரனுக்க கொள்ளலாமென்று நினைத்தார். அழைத்தார் சுப்பையாவை, அன்பர் பிரசன்னமானுர்; சொன்னுர்; கேட்டார்; சென்றுவிட்டார்.

சென்ற சுப்பையா நின்ற ஒரு கிழமையாகக் குரவர் பக்கமே திரும்பவில்லை, ஏன்? கனகி புராணம் தினந்தோறும் உருவாகிக் கொண்டு வருகின்றது, தமிழ் மொழியிலே புராணமென்ருற் காவியம் போலத்தான். நாட்டுப்படலம் நகரப்படலம், தன்னேரில்லாத் தலைவி, தலைவர் பலர் இவையெல்லாம் வைத்துப் புனைந்தார் கனகி புராணத்தை.

புராணம் முற்றுப்பெற்றது; நாவலர் பெருமானிடம் வந்தார். ஏட்டைக் கொடுத்தார். நாவலரின் ஆசியைப்பெற்ருர் தெருத் தெருவாகப் பாடித்திரிந்தார். கனகி தெருவினேரத்தே ஒரு பெருங்கல், விருந்துண்டு நொந்து வருவோரைச் செல்விருந்து நோக்கிக் கொண்டிருப்பதற்கும் இக்கல்லுதவியது,

"தெருவிற் சனிபோலிருந்து நினைத்தேடித்தேடித் தியங்கும் சிவப்
பிரகாசப் பேர் படைத்தவன்"

என்ற அடிகள் இதனை நினைவுறுத்துகின்றன.

நியூற்றன் போதகர் கன்னங்கரேலின்றிருப்பவர். போதகர் எனினும் மாதர் மேற்கொண்ட நேசம் விட்டாரல்லர். இவரையும் சுப்பையர் தீட்டிவிட்டார் பாடலொன்றில், ஒருநாள்; நியூற்றன் போதகர் குதிரையிற் சவாரி செய்து கொண்டுவந்தார். சுப்பையா எக்கச்சக்கமாக அகப்பட்டுக்கொண்டார். போதகர் சவுக்கினுற் தீட்டிவிட்டார். சுப்பையா வாங்கிக் கொண்டு மெல்ல நழுவிவிட்டார். தீயினுற் சுட்ட புண் உள்ளாறும்; என்றும் ஆருதிருக்க நாவினுற் சுட்டுவிட்டார். ஆகவேதான் நியூற்றனுக்கு இரண்டுபாட்டு.

இது சுப்பையாப் புலவரின் கதை; இதுமட்டுமல்ல; இன்னுமிருக்கிறது. வேருேர் தருணம், ஆவகாசமிருந்தாற் பார்ப்போம், நிற்க.
எமக்குக்கிடைத்த வேறுபாடல்கள். கடைசிப்பாட்டிலிருந்து வருவோம். நீலமாறுலகம் இதுவன்ருே.

(1) ஆயும் மாதர் அரிபுலர
முன்னம்
காயும் மத்தாற் கடைந்திடும்
மோரென்ன
பாயும் வெட்டையைப்
பார்த்திடுமாடவர்
தூயசிந்தை துறக்க
முற்றனரோ.

(2) காலைப்பொழுதிவனெழுந்து
கையாற் கறந்துண்டெறிந்த
விதை
மாலைப்பொழுது வருமளவும்
மற்ருேருண்ணக்கற்ருர்கள்
சேலைப்பழித்த விழியனைய
தேனேமானே கனகமின்னே
வாலைப்பருவத்தினுல்
வந்தான்காண்டி ம[illegible]மையிலே

(3) பனங்கிழங்கொடியல்
கூழ் பனுட்டுநொங்கொடு
தினங் கருப்பனீர்நுகர்
தெரியல் மார்பினுன்
தனங்குழை அணங்குனைத்
தழுவ உன்னியே
இனம்பிரி முசுவென
இவண் வந்தெய்தினுன்

(4) மானினைக்கயலை வனத்தினிற்
துரத்தி
மறலிக்குக் கொலைத்தொழில்
காட்டி
பானலை யோட்டிவடு
வினைவாட்டி
பருத்தசேல் வேலையும் பழித்து
கூனல் வாழ் நஞ்சின்
அமுதினேடுறவு

கொண்டிருக்கும் விழியுடைக்
கனகே
தேனினம் நீங்காமலர்
அணிபுயத்தோன்
செல்வநாயகன் என்னுந்தேவே.


கனகிபுராணத்தில் அச்சேறிய செய்யுள் தொகை ......31
கலைச்செல்வியிற் கண்டது ......13
இத்துடன் ......04
—
48


தமிழ் நாட்டில் தயாராகும்
மில்க் வைட்
நீல சோப்
என்று கேட்டு வாங்குங்கள்
தயாரிப்பாளர்கள்:
மில்க் வைற் சோப் தொழிற்சாலை
527, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

இன்பம் தரும் இனிய உணவு வகைகட்கு
இன்ப நிலையம்
சுவை நிறைந்த
விலை குறைந்த
சிற்றுண்டிகட்கு,
இன்ப நிலையம்
நறுமணம் மிகுந்த காப்பி,
தேநீர் பானங்கட்கு,
இன்ப நிலையம்
உங்கள் திருப்தியே எங்கள் மகிழ்ச்சி.

கல்யாண வைபவங்கட்கும் மற்றும் விசேடவிழாக்களுக்கும் ஓடர் பலகாரங்கள் செய்து கொடுக்கப்படும்.

இன்ப நிலையம்
ஸ்டேசன் வீதி, : : சுன்னுகம்.




(சென்ற இதழ் 43ம் பக்கத் தொடர்ச்சி)

“தசாவதாரம்” என்ன என்பதை ஆராய்ந்தவிடத்து பரிணாமக்கொள்கையே என அறிந்தோம். “பராபரத்தில் பரம்தோன்றி பரத்தில் சிவம் தோன்றி......” என்னும் பாடலிலிருந்து மனிதன் பிரபஞ்ச உற்பத்தியை நன்கு அறிந்திருந்தான் என அறியக்கிடக்கிறது. இதைக்கொண்டு பஞ்ச பூதங்களையும் அறிந்தான். சூரியனும் நீரும் நெருப்பும் மும்மூர்த்திகளாவர் என எண்ணினான்.

கலைஞனும் இவர்களின் ஆராய்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டு பஞ்சபூதங்களையும் அவற்றின் தன்மைக்கேற்ப உருவம் செய்து பாமரரும் படித்தவரும் போற்ற ஓவியங்களாகவும் சிலைகளாகவும் வடித்தான். புலவனே இன்னும் ஒரு படி உயர்ந்தவனாய் எல்லாவற்றையும் ஒன்றாய் கலந்துவிட்டான்.

மலையையும் மலையைச் சார்ந்த இடங்களிலும் உள்ளவர்கள் சூரியனை முருகனாகச் சித்தரித்து வணங்கினார்கள். மலைமேல் தோன்றி வானவெளியில் வந்து மலையின் முகட்டில் மறைவதனால் மலை உச்சியில் அவன் வதிவதாகக் கற்பனை செய்து அவனுக்கு மலை முகட்டில் கோவிலும் கட்டினார்கள். வானம் நீலமானதால் மயில் எனக் கற்பனை செய்தனர். காலையில் இளஞாயிற்றின் கதிர்கள் மலையின் முகட்டை உருக்குவது போல் பாய்வதனால் “குன்றுருக வேல் வாங்கி நின்றான்” என்றனர். காலையில் சமநிலத்திலிருப்பவர்கள் சூரியன் தோற்றுவதற்கு முன் வானம் நீலமாவதையும் சேவல் கூவுவதையும் கண்டும் கேட்டும் வந்தார்கள். முருகனுக்கு சேவலும் மயிலும் உண்டென்று கூறினார்கள். எப்படியெனில் மாயை (இருள்) யாகிய அசுரன் மயிலாகவும் (நீலவானம்), சேவலாகவும், வந்து முருகனுக்கு (சூரியனுக்கு) மயில் வாகனமாகவும் சேவல் கூவுவதாகவும் கூறினர். அதாவது சேவல்

கூவ இருள் அகல நீலவானில் சூரியன் தோற்றினன் என்பதே யாகும்.

மேலும் தினைவயலில் கதிரினங்கள் தலை குனிந்தவாறே நிற்பதை பருவ மங்கை எனவும் இளமை பொருந்திய ஞாயிறு தன் கரங்களாகிய கிரணங்களால் அப்பருவமங்கையை தழுவி பக்குவம் அடையச் செய்கிறான் என்பதைக் குறிக்க முருகன் வள்ளி தொடர்பை உண்டுபண்ணினார்கள். இதுவே பிற்காலத்தில் முருகன் மனிதக் கடவுளெனப் புலவரால் திரிக்கப்பட்டது.

இப்படியிருக்கக் கடலையடுத்த இடங்களில் வசிப்பவர்கள் "நீர்" தான் காத்தற் கடவுள் (திருமால்) எனவும் கடலின் அடிவயிற்றிலிருந்து சூரியன் தோற்றுவதால் திருமாலின் உந்தியிலிருந்து சூரியனாகிய பிரமன் பிறந்து படைத்தல் தொழிலைச் செய்கிறான் என்றார்கள். கலைஞனுக்கு அலைகளெல்லாம் கருநாகம் போல் காட்சியளித்திருக்க திருமால் நெடிதுறங்குகிறான் என வர்ணித்து விட்டான்.

நீரினால் செல்வம் கிடைக்கிறது என்பதைக் காட்டவே திருமாலுக்கு இலக்குமி மனைவியாகிறாள். அதாவது கடலில் முத்து பவளம் உப்பு என்பனவும் ஆற்றில் இரத்தினம் போன்றனவும் நீரினால் பயிர் முதலியவைகளைச் செய்கை பண்ணி வாணிபமீட்டல் என்பதாலும் அறியக்கிடக்கிறது. திருமால் எங்கே இருக்கிறான்? மலைமீதிருந்தும் வானில் தவழ்ந்தும் கடலில் கிடந்தும் என்னும் கூற்று:- இது திருமாலின் மூன்றுவகைத் தோற்றத்தைக் குறிக்கிறது. மலை மீது இருந்தும் (பனி உறைந்து); கடலில் கிடந்தும் (நீராக); வானில் தவழ்ந்தும் (நீராவியாக); என விளங்குகிறது. நீர் எங்குமுள்ளது தானே. திருமால் வயிற்றினுள் உலகத்தை அடக்கினான் என்னும் பொழுது உலகத்தைச் சூழ்ந்து மூன்றிலிரண்டு பங்கு நீராய் இருக்கிறதென்றும் இன்னும் இந்த முழு உலகையும் சுற்றி வான மண்டலத்தில் நீராவி இருக்கிறதென்றும் தெரிகிறதல்லவா. சூரியன் இருளைப் போக்குவதனால் அஞ்ஞான இருளைப்போக்கி ஞானத்தைக் கொடுக்கிறான் எனக் கற்பனை செய்து ஞானத்திற்கு சரஸ்வதி துணை செய்கிறாள் என்பதைக் காட்ட பிரமனுக்குச் சரஸ்வதி மனைவி என வர்ணித்து விட்டான்.

கலைவாணியை யெடுப்போம். வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு வெள்ளைக் கமலாசனத்தில் வீற்றிருப்பாள் என்பது:- வெள்ளை குற்றமற்றது. அப்படி ஒன்று உண்டானால் சர்வகலைகளும் வளரும்— வெள்ளைக் கமலாசனத்தில்:- அஃதாவது இதயக்கமலம் மிகத் தூய்மையாக இருந்தாற்றான் அதில் கலாதேவி அமருவாள்.

அகத்தூய்மை அற்றவனுக்கு கலை எங்ஙனம் வரும்? குற்றம் கண்டவிடத்து, வெள்ளை எக் குற்றத்தையும் தாங்காதது போல், வெறுப்பான் உண்மைக் கலைஞன்.

இலக்குமி:- கஷ்டப்பட்டு இரத்தம் சிந்தி உழைத்தால் தான் செல்வம் சேரும் என் பதைக் காட்டவே சிவப்பு நிற மாக்கி விட்டான் கலைஞன்.

இப்படியாக சிலரிடையே அபிப்பிராய பேதங்கள் இருக் கும் பொழுது அவர்கள் ஒன்று கூடினால் விவாதம் நடைபெற் றிருக்கும். இவை போன்றது தான் சிவமோ, சக்தியோ, முந் தியது என்பது. சிலர் சிவனே முத்தொழிலையும் செய்கிறான் எனவும் சிலர் திருமாலே எல் லாவற்றிற்கும் முழு முதற் கர்த்தா எனவும் எண்ணியிருந் தனர். இதில் சிலர் சிவமும் சக் தியும் ஒன்று, ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்கமுடியாது என்று அதற்கு "அர்த்தநாரீஸ் வரன்" என்னும் உருவத்தைக் கொடுத்தனர்.

இதில் நாம் அறியக்கிடப் பது என்ன? சிவம் - சூடு (Heat) சக்தி (Energy) இந்த இரண் டில் ஒன்றிலிருந்து மற்றதைப் பிரிக்க முடியாதுதானே. அல் லது எது முந்தியது என்றும் அறிய இயலாதுதானே. இப் படி ஆதிக் கலைஞன் செய்த ஓவி யங்களெல்லாம் ஏதோஒருதத்து வத்தையுடையதாகவே இருக் கும். அக்காலத்தில் சித்திரக் கலையை அறிவு வளர்ச்சிக் காகவே பயன் படுத்தினார்கள். இவ்வொழுங்கே சமயம் எனப் பட்டு பின் சமயம் கலையை கட்டுப்படுத்தத் தொடங்கியது. இது கலைஞரைச் சற்று சோம் பேறிகளாக்கியதால் தத்துவங் கள், அவற்றின் உட்கருத்து முதலியன மறைந்து கடவுள் ஒரு மனிதனிலும் சற்றுக் கூடிய தன்மையுடையவன் என வந்து இப்போ கடவுள்க ளெல்லாம் கலக்கொலைஞர் கைப்பட்டு சினிமா நட்சத்தி ரங்களைப்போல் விகார உணர் வைத் தருவது போன்றன வாகிவிட்டனவே. இது மாத் திரமா சொறிச் சவர்க்காரம், எண்ணெய், பீடி போன்ற கீழ்த் தர விளம்பரங்கட்கும் பாவிக் கப்படுகிறதே.

இந்தியாவில் மிகப்பழைய காலத்திலிருந்து இந்தியக் கலைக்கு ஆறு கட்டுப்பாடுகளி ருந்தது வந்தன. அக்கட்டுப் பாடுகள் பின் வருமாறு:- ரூப பேதம், பிரமாணம், பாவம், லாவண்ய யோஜனம், சதிர் சியம் வர்ணிக்கபாங்க என்பன வாம். இக்கட்டுப்பாடுகளுக்குள் அமையாத ஓவியமோ சிற்பமோ சிறந்ததென அனுமதிக்கப்பட மாட்டாது. இவற்றை ஒவ் வொன்றாய் ஆராய்வோம்.

**ரூபபேதம்:-** இது இயற்கைக் காட்சி, மனித உருவங்கள்

வீடு, கோபுரம் முதலியவற்றின் ரூப வித்தியாசத்தைப் பற்றிய அறிவாகும்.

**பிரமாணம்:-** இது அங்காதி பாதம், முற்குறுக்கம் முதலிய வற்றின் அளவு பேதங்களை அறிதல்.

**பாவம்:-** இது சாந்தம், குரோதம், கோபம், சந்தோஷம், அதிசயம் முதலிய குணங்களை அதாவது உடலுக்கும் மனத்திற்கும் உள்ள தொடர்பைக் காட்டுவது.

**லாவண்யயோஜனம்:-** இது அழகும் அருளும்.

**சதிர்சியம்:-** உண்மை (அதாவது உண்மையான அழகு).

**வர்ணிக்கபாங்க:-** இது கலைஞன் எப்படித் தனது தூரிகை, வர்ணம், மற்றும் தேவையான பொருட்களைச் சரியான முறையில் பாவிக்கவேண்டும் என்பதை உறுதிப் படுத்துவது. இந்த ஆறு கட்டளைகளும் பிற்காலத்தில் அஜாந்தாவிலுள்ள சித்திரங்களில் ஒருவிதமாற்றமுமின்றி அனுஷ்டித்திருப்பதைப் பார்க்கலாம். அஜாந்தாவிற்குப் பிற்காலத்தில் இந்தியக்கலை தேய்வடைந்த பொழுதும் இக் கட்டளைகள் அவைகளை விட்டு விலகவில்லை என்பது அறியத் தக்கது.

இக் கட்டளைகளின் தன்மை சிற்பத்தில் எப்படி அமைந்திருக்கிறது என்பதை ஆராய்வோம். மதுரை மீனாட்சி அம்பாளின் விக்கிரகத்தைப் பாருங்கள்; செங்கல் பட்டிலிருக்கும் கோதண்ட ராமன், சீதை விக்கிரகத்தைப் பாருங்கள். மற்றும் நடராஜ விக்கிரகம் போன்ற இந்தியச் சிற்பத் திருவுருவங்களைப் பாருங்கள், எல்லாம் இக் கட்டுப்பாட்டிற்கு அமைந்திருப்பதைப் பார்க்கலாம். பார்த்தவுடன் எம்மை அறியாமலே எமது கை கூப்பும். ஏன்? அவ்வளவு கலைஞனின் கைத்திறன் எமது உணர்வை அக்கலை வடிவத்தின் வயத்தே இழுக்கிறது. இப்பொழுது ஒரு சந்தேகம். கலை கடவுளா? கடவுள் கலையா? இதை வாசகர்களுக்கே விட்டு விடுவோம். இதைத்தான் ஆத்மீகக்கலை (Spritual) என அழைக்கிறோம். ஆனால் மேல் நாட்டுக் கலை சடசம்பந்தமானது (Physical).

சிற்பக்கலை கட்டடக்கலை ஆதியன ஓவியத்தின் தாய் தந்தை என எண்ணுகிறார்கள். எனவே அவற்றையும் சேர்த்தே ஆராய்தல் வேண்டும். இந்தியச்சிற்ப அறிவையடைய வேண்டுமேயாயின் நாம் கல்கியில் உள்ள "வேங்கடம் முதல் குமரிவரை" என்னும் பகுதியை உன்னிப்பாய் படித்தால் போதும். —தொடரும்

# நகைச் சுவைக் கட்டுரைப் போட்

**1-ம் பரிசு ரூபா 30.　　　2-ம் பரிசு ரூபா 20.**

1. இலங்கையில் நகைச்சுவை எழுத்தாளர்கள் குறைவு. ஆகவே இத் துறையில் பல எழுத்தாளர்களை ஈடுபடச் செய்வதற்காகவும் சிறுகதை, கவிதை முதலியவற்றில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் போல் இப் புதிய துறையில் வளர்ச்சி ஏற்படுவதற்கு அடிகோலு வதற்காகவும் நடாத்தப்படும் இப் போட்டியில் ஈழத்து எழுத் தாளர்களும் எழுத்தார்வ முடையவர்களும் உற்சாகமுடன் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

2. கட்டுரைகள், ''கலைச்செல்வி'' அளவில் நான்கு பக்கங்களுக்கு குறையாமலும் ஏழு பக்கங்கட்கு மேற்படாமலும் இருக்க வேண் டும்.

3. எழுத்தாளருடைய சொந்தக் கற்பனைத் திறனைக் கொண்டு கட்டுரைகள் எழுதப்பட வேண்டும். திருட்டு எழுத்தும், தழுவல் களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. எழுத்தாளர்கள் தங்கள் பெயரைத் தனியாக ஒரு தாளில் குறித்தனுப்ப வேண்டும்.

4. எந்த ஒரு மதத்தினரையோ, இனத்தினரையோ, சாதியின ரையோ, மொழியினரையோ கட்டுரையாளர் வெளிப்படையாக அவர்கள் மனம் புண்படும்படி கண்டிக்கக் கூடாது.

5. கீழ்க்கண்ட தலைப்புகளில் ஒன்றையோ, அல்லது இவை போன்ற வேறு தலைப்பையோ தெரிவு செய்து, கட்டுரை எழுத லாம்: (1) நான் ஒரு அபேட்சகர். (2) பந்தம் பிடித்த... (3) ரயில் பிரயாணம். (4) என் மாஜி காதலிக்கு! (5) தலை... தாங்குதல். (6) காக்கை விடு தூது. (7) நான் ஒரு பஸ் சா... (8) அகில இலங்கைப் பாதசாரிகள் சங்கம்.

6. கீழ்க்கண்டோர் நீதிபதிகளாகக் கடமையாற்றுவ...

1. திருவாளர். குயுக்தியார்.
2. திரு. தேவன்- யாழ்ப்பாணம்.
3. ஆசிரியர், கலைச் செல்வி.

7. கட்டுரைகள் கிடைக்க வேண்டிய கடைசித்திகதி: 20-8-1960.

8. அனுப்ப வேண்டிய முகவரி:

நகைச் சுவைக் கட்டுரைப் போட்டி,
''கலைச் செல்வி''
கந்தரோடை: :சுன்னுகம்.

# காரப்பு

'பவானி'

உயர்தர அரசாங்க அதிகாரி ஒருவரின் மகள் பவானி ுள்வாப்பிள்ளை. "அர்ப்பணம்" என்ற கதை பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கத்தில் மூன்றாவது பரிசு பெற்றது. வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு, திரைக்கலை ஆகியவற்றில் எழுதியுள்ளார்.

அழகின் அருமையை அறி றுத்தவே என் போன்றவரையும் ரம்மதேவன் படைத்தான் போலும்! பண்ணென்ற உணர்வு எனக்குத் தோன்றிய நாள்தொட்டு புகைந்து பாருமத் தொடங்கிய என் உள்ளம் ானும் வடியவில்லை. நான் மட் டு ஏன் இத்தனை குருபியாக அ கவேண்டும்? எனக்கு மட்டு திற் அநீதி? இளமைத் துடிப்போடு இ பக் கனவுகள் னும் உள்ளத்தை ட்டும் அள்ளிக் காடுத்த ஆண்டவன் புவற்றை நினைவாக்கிக் கொள்ள என் தோற்றத்தில் ஒரு சிறிது கவர்ச்சியை அளித்திருக்கக்கூடாதா? என் ரிடமில்லாத கவர்ச் யை என் தந்தையின் ணப் பெட்டியிலடங் ய ஆயிரங்களில் கண் ஒருவன் எனக்கு லையிட்டான்; மனைவி க்கிக் கொண்டான்!



வாழ்க்கை ஏதோ செல்கிறது; நிறைவுதான் இல்லை! பிளாட்பாரத்தில் நின்ற என் தந்தை ஏதோ சொல்லிக்கொண்டேயிருந்தார்...... 'உம்' கொட்டினேனே தவிர என் கண்கள் பெட்டியின் மறுமூலையில் இருந்த இளைஞனை நோக்கிற்று. அத்தனை அழகென்று சொல்லமுடியாது; இருந்தும் என் கண்களுக்கு அனங்கன் போல் தோன்றினான். நாமிருவர் மட்டுமே இருந்தோம். என் பார்வையை உணர்ந்தவன் போல் திரும்பினான். அருவருப்பும் வெறுப்பும் தெறித்து விழ முகத்தைச் சுளித்தவன் ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டினான். எனக்குச் 'சுருக்' கென்றது......

முதல் மணி அடித்துவிட்டது. ஒரு சிறுவன் ஓடிவந்து எங்கள் பெட்டியின் கதவைத் திறந்துவிட்டுத் திரும்பிச், "சீக்கிரம் வா அக்கா! இங்குஇடமிருக்கிறது" என்று கத்தினான். நானும் மெல்லப் பார்த்தேன். என் முகம் கறுத்ததோ என்னவோ, என் உள்ளத்தீ மூண்டெழுந்தது. என் வரண்டமனம்கூட அப் பெண்ணின் அழகை மறுக்கத் துணியவில்லை, ஓடிவந்தவள் கைப்பெட்டியோடுஉள்ளேஏறி எனக்கு எதிரே அமர்ந்து கொண்டாள். பின்னால் வந்த 'போட்டர்' பெரிய 'ஸூட்கேஸை' உள்ளே தள்ளினான். என்னையறியாமல் என் கண்கள்

வாலிபனை நோக்கின, அவன் கண்கள் கக்கிய உணர்ச்சி என்னைக் குத்தியெடுத்தது. என்னையும் ஒருவன் ஆசையின் வேகத்தோடு பார்க்க வேண்டும், அடையத் துடிக்கவேண்டும் என்று ஏங்கிய நாட்கள் முடிந்துவிடவில்லை! இங்கு இவள் அவனைப் பார்க்கக்கூடவில்லை! இருந்தும் அவன்... ஹூம்! மதுமலர் தானே வண்டைக் கவரும். காகிதப் பூவிற்கு அந்தத் திறன் இல்லையே!...

அப்பா ஏதோ சொல்கிறாரே!... "நல்லது உனக்கும் துணையாய்ப் போச்சு. போனதும் கடிதம்போடு!..." வண்டி புறப்பட்டு விட்டதா? அடடா! தலையை வேகமாக ஆட்டினேன். "போய் வருகிறேனப்பா" என்றேன். ரயில் ஸ்டேஷனை விட்டு நகர்ந்தது...

அவள் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள். நான் கவனியாததுபோல் வெளியே பார்த்தேன். பெரிய 'ஸூட்கேஸை' ஸீட்டின் கீழே தள்ளியவள் சிறிய கைப்பெட்டியை மேலே தட்டில் வைக்க முயன்றாள். அவளுக்கு எட்டவில்லை. அதனோடு ரயிலின் ஆட்டத்திற்கு நிலை தடுமாறினாள். மூலையிலிருந்த இளைஞன் துள்ளிப் பாய்ந்து அவளருகே வந்தான் "இப்படிக் கொடுங்கள்! நான் வைத்து விடுகிறேன்." அவள் கையிலிருந்து பெட்டியை வலிந்து வாங்கினான். அவள் மறுக்கவுமில்லை; தடுக்கவுமில்லை. மாறுதலில்லாத அதே புன்னகையைச் செலுத்திவிட்டுக் கைப்பெட்டியை அவனிடம் கொடுத்துவிட்டு மீண்டும் ஜன்னலருகே எனக்கெதிரில் அமர்ந்தாள். அவனும் அவளுக்கருகில் அமர்ந்து கொண்டான். அவள் பார்வை ஜன்னலுக்கு வெளியே நிலைத்திருந்தது. இரண்டு மூன்று தடவை அவளைக் கடைக் கண்ணால் பார்த்தான்.—

"நீங்கள் எதுவரைக்கும் போகிறீர்கள்?" அவன் கேட்டான். அவள் மெல்லப் பார்வையைப் பெயர்த்து அவனைப் பார்த்தாள். நெட்டுயிர்த்தவள், "கொழும்புவரை" என்றாள். அடுத்து நான் எதிர்பார்க்கவில்லை!— அவன் திரும்பி என்னைப்பார்த்து, "நீங்கள்?" என்று கேட்டான். ஹூம்! என்னைப் பார்க்கச் சகியாது முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டிருந்தவன் இப்பொழுது அவளுடைய புண்ணியத்தால் என்னுடன் பேசவும் செய்துவிட்டானே! எனக்கு அவமானம் தாங்கவில்லை! ஆத்திரம் கொதித்துப் பொங்கியது! அவனைச் சுட்டெரித்து விடுவது போல் வெறித்துப் பார்த்தேனேயொழிய ஒன்றும் சொல்லவில்லை. அவனுடைய முகம் கறுத்து அதில் புன்னகை அப்படியே உறைந்துவிட்டது. அதன்பின் அவன் என் பக்கம் திரும்பவேயில்லை...

வெளியே நிரை நிரையாய் நின்ற மரங்களெல்லாம் காந்தத்தால் கவரப்பட்டவை போல் ரயிலைச் சந்திக்க விரைந்து ஓடி மின்வெட்டென மறைந்தன. வாழ்க்கையும் இப்படித்தானே என்று நினைத்துக்கொண்டேன். வாழ்க்கையிலும் நம்மை, நம் மனதை ஏதேதோ வெல்லாம் ஆகர்ஷிக்கின்றன. அவையெல்லாம் ஒரு கணத்தோற்றமாய்த் தம் பிடிப்பை இழந்து மறைந்து விடுகின்றன. வெளியே ஓடி மறையும் மரங்களிலே என் பார்வை பெயர்க்க முடியாது கட்டுண்டு கிடந்தது. ஆனால் அவளை அவன் கேட்ட கேள்விகள் அவளோடு பேசிய பேச்சுக்கள், யாவும் என் காதில் வந்து விழுந்தன. அவளைப் பேசவைக்க அவன் கையாண்ட தந்திரங்கள், அவனுடைய பேச்சுச் சாதுரியம் கைதேர்ந்த அரசியல் வாதியையே தோற்கடிப்பதாயிருந்தது. அவனது குரலைக் கேட்கக் கேட்க காரணமில்லாத ஆத்திரம் என் மனதில் குமைந்தெழுந்தது. அவளிடத்து எனக்கெழுந்த பெருமையெல்லாம் ஏளனமாக மாறியது. ஆமாம்! மானங்கெட்ட சிறுக்கி! அவன் தான் நிலைதவறி நடந்து கொண்டானென்றால், அவனோடு பல்சுளுக்கும்படி அவளே இளித்து

இளித்துப் பேசச் சொல்லிக் கிடக்குதா என்ன? பண்பு தெரியாதவள்!' என்றெல்லாம் அவளைத் தூற்றி மகிழ்ந்தது என் இதயம். எவள் அழகை, வசீகரத்தை எண்ணிப் பெருமைப் பட்டேனோ, எவள் நிலையில் இருக்க ஏங்கினேனோ அவளை ஒழுக்கமற்றவள் என்று ஏசி மகிழ்ந்தேன். சந்தர்ப்பமின்மை என்மேல் சுமத்திவிட்ட நிலையைக் கற்பின் திண்மை என என் மனதோடு கூறிக் கொண்டேன்! —சீச்சீ இந்தப் பழம் என்றதாம் நரி! என் மனதின் பித்தலாட்டத்தை நினைத்து எனக்கே சிரிப்பும் வெறுப்பும் வந்தது. இந்த மனோவாதையும் வேதனை இதயமும் கடவுள் எனக்கென உவந்தளித்த செல்வமா?...

வெளியே மெல்ல இருள் கவிந்து கொண்டிருந்தது. அந்த இருள் படலம் ஜன்னல் வழியே உள்ளே புகுந்து படர்ந்து தங்கிற்று.—அது என் உள்ளத்தின் புகையிருளை மறைக்க முயன்றதோ என எண்ணினேன். என் பார்வையை உள்ளுக்கிழுத்து அவனுடைய உருவத்தில் நிலைக்க விட்டேன். திடீரென மின் விளக்குகள் எல்லாம் பிரகாசித்தன. நான் அவனையே பார்த்திருந்தேன். அவள் அழகைக் கண்களால் அள்ளிப் பருகிக் கொண்டிருந்தவன் திடுக்கிட்டுத் 'திருதிரு'வென்று என்னைப் பார்த்து விழித்தான். அவன் முகத்தில் வழிந்த அசடைக்காண எனக்குச் சிறிது திருப்தியாக இருந்தது. என்னை ஏளனம் செய்த அவனிடத்து இது நான் ஈட்டிய சிறு வெற்றிபோல் எனக்கு ஆறுதல் அளித்தது. கடகடத்தவாறு ஆரவாரத்தோடு புகையிரதம் நிலையத்திற்குள் புகுந்தது.

"காப்பி, டிபன் வாங்கி வருகிறேன். நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று அவளைப் பார்த்துக் கேட்டுவிட்டுஎழுந்தான். அகலவிரிந்த கண்களால் அவள் நிதானமாக அவனைப் பார்த்தாள்—அழகான கண்கள் அவை! உணர்ச்சியின் சுவடில்லாத பற்றற்ற தன்மையையே பிரதிபலித்தன. இருந்தும் அது கூடக் கண்களை அழகு படுத்தியதாகவே தோன்றியது.

"பரவாயில்லை; நீங்கள் சிரமப் படாதீர்கள். நான் டிபன் கொண்டு வந்து விட்டேன்" சொல்லிவிட்டு என்னை ஒரு கணம் பார்த்தாள். அந்தக் கணப்பார்வை என்னை ஏதோ செய்தது...என் உதவியை யாசித்தாளா? ஆதரவைக் கேட்டாளா? மீண்டும் அவளைக் கூர்ந்து பார்த்தேன். ஆனால் என்னைப் பார்க்க அஞ்சியவள் போல் அவள் என் பக்கம் திரும்பவேயில்லை,

"அப்படியென்றால் நீங்கள் கட்டாயம் காப்பியாவது சாப்பிடவேண்டும்" அவன் சிரித்துக்கொண்டே வற்புறுத்தினான்,

"இல்லையில்லை. உங்களுக்கு வீண் தொல்லை!" அவள் முகத்தில் அலுப்புத் தட்டியது. அவன் வெற்றிப் புன்னகை உதிர்த்தான். சந்திர மண்டலத்திற்கு வழி கண்டவன் கூட அத்தனை எக்களிப்பு அடைந்திருக்கமாட்டான். "இதென்ன தொல்லை? ஐந்து நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள்—" என்னை ஏதோ ஒன்று பேச வைத்தது.

"என்னிடம் காப்பி இருக்கிறது. இருவருக்கும் அது போதும். நீங்கள் சிரமப் படாது போய்ச் சாப்பிடுங்கள்"

அவன் என்னைப் பார்வையால் கொன்றுவிட்டு "ரெஸ்டாரன்ட் காரரை" நோக்கி நடந்தான். அவள் நன்றி தெரிவிக்கவில்லை; என்னைப் பார்த்துச் சிரிக்கவுமில்லை. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருந்தாள். நான் சாப்பிடத்தொடங்கி

னேன். அவள் சாப்பிடவில்லை. நானும் கேட்கவில்லை. சாப்பிட்டு முடிந்ததும் காப்பியை ஊற்றி நீட்டினேன். அவள் பேசாமல் வாங்கிக் குடித்தாள். ரயில் மீண்டும் புறப்பட்டுவிட்டது ... போர்த்தியிருந்த சேலைத் தலையின் நுனியை இறுகப் பற்றியவாறு ஜன்னல் சட்டத்தில் தலையைச் சாய்த்து வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் அவன் திரும்பி விட்டான். நான் அவனை எதிர்பார்த்துத் தானிருந்தேன். மீண்டும் பழைய இடத்திலேயே அமர்ந்தான்.

"நான் புகைபிடிப்பது உங்களுக்கு சிரமமாய் இருக்குமா?"

அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவன் ஸிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான். சுருள் சுருளாக மேலெழுந்த புகையை ரசித்துக் கொண்டிருந்தான். நான் ஜன்னலில் கையை ஊன்றி அதில் தலையைத் தாங்கிக்கொண்டேன். கண்களையும் மூடிக்கொண்டேன் என்று தான் நினைக்கிறேன். என் நினைவெல்லாம் அந்தப் பெண்ணைச் சுற்றிப் படர்ந்தது. அவளை நினைத்துப் புழுங்குகின்றேன், பொருமைப்படுகின்றேன். அவளைப் போல வேண்டாம்; ஆனாலும் அதில் ஒரு சிறிய பங்கு அழகு என்னுடையதாய் இருந்து, இவனைப் போல் இளைஞனொருவன் என் புருஷனாய் இருந்தால் வாழ்வே எனக்குப் பெரும் விழாவாயிருக்கும். ஆனால் என் கணவரின் கற்பனையோ வியாபாரத்திலும் பணத்திலும் பின்னிக் கிடந்தது. புகையிரதத்தின் போக்கைப்போல் என் சிந்தனைத்தொடரும் நீண்டு கொண்டே சென்றது. யோசனையில் ஆழ்ந்திருந்தேனோ அன்றி தூங்கித் தான் விட்டேனோ தெரியாது; திடீரென உணர்வு எனக்கு விழிப்பூட்டியது. தலையை அசைக்காது, இறக்கிய இமைகளூடே அவனைப் 'பார்த்தேன், அவனையே பார்த்துக்கொண்டிருந்தேன். கட்டிப் பாலைப் பார்த்துப் பார்த்து வாயூறும் கள்ளப் பூனையைப் போலிருந்தது அவனைப் பார்க்க! என்னைப் பார்த்துப் பார்த்து அணுவணுவாக அவளருகே நெருங்கிக் கொண்டிருந்தான். அவள் உட்கார்ந்த படியே தூங்கிக் கொண்டிருந்தாள்...தோளும் தோளும் உராயும் படி அவளருகே நெருங்கிவிட்டான். ரயிலின் ஆட்டத்தோடு ஆடி ஆடி அவள் தலை மெல்ல அவன் தோளில் சாய்ந்தது—பாவம்! தன்னை மறந்து தூங்கினாள். சற்று நிதானித்தவன் துவண்டு கிடந்த அவளுடைய மெல்லிய நீண்ட விரல்களைப் பற்ற நீட்டினான். என் இதயம் படபடத்தது; உடலெல்லாம் நடுங்கியது. ஆமாம்! அவளுக்காக, அந்த அழகிக்காக, என் நெஞ்சு துடித்தது! அவளைப் எழுப்பவா? அவனை அதட்டவா?— என் அருகில், ஸீட்டில் இருந்த பால் செம்பு பளபளத்து மின்னிற்று.—எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது—நான் தூங்கி விழுந்தேன். ஜன்னல் சட்டத்தில் ஊன்றிய என் கை நழுவிக் கீழே பால் செம்பில் பட்டு அதைத்தட்டி விழுத்தியது. பெருஞ்சத்தத்தோடு கீழே விழுந்த செம்பு கலகலத்து உருண்டோடியது.!—அவள் விழித்துக் கொண்டு பதறினாள் ...ஒரு கணம் செயலற்று நின்றவன் அவள் நிதானித்துக் கொள்வதற்குள் வெளியே பாய்ந்தோடினான்......

நான் அவளைப் பார்த்தேன். நன்ருகப் பார்த்தேன். என் பார்வையை ஒரு வினாடி சந்தித்தாள். அந்தக் கண்களில் ஒரு கணம், மின்னிய உணர்ச்சி—உள்ளத்தின் வேதனையா? நன்றிப் பெருக்கா?—அதற்குள் இமைகள் துடித்துக் கண்களைத் திரையிட்டன. அவள் என் செம்பை எடுக்கக் குனிந்தாள். போர்த்திருந்த சேலைத் தலைப்பு நழுவிச் சரிந்தது... தாழ வெட்டிய ஜாக்கெட் கழுத்து... அதிலிருந்து எழுந்த வெண்மையான மிருதுவான சங்குக் கழுத்து—கழுத்தை அணைத்துப் புரண்டு ஒளி வீசியது—மாங்கலியம்!

இதுவரை நான் ஒரு அழகான பெண்ணைப் பார்த்து உணர்ந்திராத உணர்ச்சி என் உள்ளத்தில் ஊறிப் பெருகியது. அந்தப் பெருக்கிலே என் பொருமையும் வெறுப்பும் அடித்துச் செல்லப்பட்டன. பரிதாபத்தோடு, அனுதாபத்தோடு அவளைப் பார்த்தேன். அழகிருந்தது அவளிடம். ஆயினும் அவளுக்கு அது அவலத்தையே அளித்தது. அந்தக் கண்களின் சூனியம் அவள் உள்ளத்தின் கசப்பை உணர்த்திற்று. பாவம்! கணவன் என்ற ஒருவனல் கூட அவளுக்கு அளிக்க முடியாத காப்பினை என் குருபம் எனக்கு அளித்துவிட்டதே!

## கலைச்செல்வி விற்பனையாளர்கள்


பரமேஸ்வரி ஸ்டோர்ஸ்.
1, திரிகோணமலை வீதி,
மட்டக்களப்பு.

சரஸ்வதி புத்தகசாலை,
7, நடுக்கணக்கு பஸார்,
ஹல்கிறனேயா.

N. S. இராஜா,
64, நுவரெலியா ரோட்,
கம்பளை.


# புதிர்!

மண்டுக்கிழார்

ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸில் நின்று கொண்டிருக்கும் பெண் மணிக்கு எந்தக் கால்சட்டைக்காரராவது எழுந்து இடங்கொடாவிடில் ...................... அவள் அழகில்லாதவளாக இருப்பாள்.

எழுத்தாளர் பல புனைப்பெயர்கள் வைத்துக் கொள்வது............ .........தங்களைத் தாங்களே தூற்றிப் போற்றிக் கொள்ளுவதற்கு.

உங்களை எங்கு கண்டாலும் ஓடி வந்து சிரித்துப் பேசும் நண்பன் திடீரென ஒரு நாள் புன்சிரிப்போடு மாத்திரம் சென்றுவிட்டால் கிஞ்சித்தேனும் கவலைப்படாதீர்கள்......... ...........அவருக்குக் கொழும்பில் வேலை கிடைத்துவிட்டது.

தெருவென்றும் பாராது பீச்சென்றும்பாராது சிரித்துக் கும்மாளமடித்துச் செல்லும் காதலர் திடீரென ஒரு நாள் ஒருவருக்குப்பின் னெருவராக ஆளுக்கொரு திசையைப் பார்த்துக் கொண்டு சென்றல்...........அவர்களுக்குத் திருமணமாகி விட்டது.

பஸ்ஸில் முன்வரிசையில் உட்கார்ந்திருப்பவர் தனக்குப் பின்னல் இருப்பவருடன் அடிக்கடி பேசமுற்பட்டால்..................கடைசி வரிசையில் உட்காந்திருப்பவள் பெண்.

மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருக்கும் பேச்சாளர் அடிக்கடி நெற்றியை வழித்தெறிவது வேர்வை தாங்கமுடியாமல் அல்ல ........................இன்னெரு கிளாஸ் ஒரெஞ்பார்லி கேட்டு.

# வளருந்தமிழ்!

**எழுத்தாளன் காதலி :** இயற்றியவர். தமிழோவியன்; கண்ணதாசன் நூலகம்,தெளிவத்தை, பதுளை.

எழுத்தாளன் காதலி ஏற்ற கவிதை
எழுத்தாளர் காதலனை ஏற்றுப்—பழுத்த
பயன் மரமாய்ப் பண்புற்றுள் பாடற் சுவையின்
நயமுரைக்க வேண்டுமுயர் நாக்கு

---

தொடையழகும் பொருளழகும் தோய்ந்து தோன்றும்
சொல்லழகும் பாத்திரத்தின் சுவைக்குத்தக்க
நடையழகும் பாடுபவர் நல்வாழ்க்கைக்கண்
நன்மைதர எழுத்தாளன் காதலிக்கு
உடையழகு பொலிவதென உணர்ச்சி பொங்கும்
உயர்கவிகள் தருகவிஞன், உலகமாதின்
கொடையழகின் திறமென்றும், குலவு மின்பம்
கொஞ்சுதமிழ்க் குழந்தை யென்றும் கூறலாமே.

---

பாடல்கள் மெச்சத்தக்கவை; உணர்ச்சி மிக்கவை; பொருத்தமான அமைப்பும் சுவையும் பொருந்தியவை; படிப்பவர்க்கு உடனுக்குடன் உணர்ச்சி கொடுப்பதோடு வாழ்க்கையை இலட்சியப் பாதையில் செலுத்தக்கூடியவை இத்தகைய பாடல்கள், செந்தமிழ்த்தாயின் திருப்பணிச் சொத்துக்கள்' என்பது மிகையாகாது.

—சஞ்சீவி

---

# FANCY PALACE

## THE HAPPY PALACE

WITH

# HAPPY GIFTS

- ரேயல் தலைமுடிகள்
- ரேயல் சுவர்க்கடிகாரங்கள்
- ஷெவ்வேர்ஸ் பவுண்டன் பேனுக்கள்

ஆகியவற்றிற்கு

## யாழ்ப்பாணத்தில்

ஏக விநியோகஸ்தர்கள்

கண்ணைக் கவர்ந்து மனதை மயக்கும்

பலவிதமான

## பரிசுப் பொருட்களை

விசேட தினங்களில்

உங்கள் உற்றுர் உறவினருக்கும், நண்பர்களுக்கும், பேனு நண்பர்களுக்கும்

## வாங்கிக் கொடுங்கள்

தந்தி : Fancyware

போன் : 239

# பான்ஸி பலஸ்,


27, மெயின் வீதி : : யாழ்ப்பாணம்

# பிராயச்சித்தம்

"உமா"

| மல்லிகா |

மேசைமேலிருக்கும் சாமன்களெல்லாம், செந்தில் வந்து விட்டுப் போனதை எனக்கு அறிவித்துக் கொண்டிருக்கின்றன. முன்பு நான் 'நீலம்' 'நீலம்' என்று உயிர் விடுவதை இன்னும் அவர் மறக்கவில்லை. அதுவே போதும்! சேலை, சட்டை, ரிபன், எல்லாம் நீலமாக வாங்கியிருக்கிறார்.



இவையெல்லாம் இப்போதப் பெண்களுக்குத்தான் எத்தனை ஆசை" என்று தானும் பெண் என்பதை ஒரு கணம் மறந்து சொல்வாளே! ஆனால் இப்பொழுது?

நான் எதை நினைக்கக் கூடாது என்று, மறக்கத் தெண்டித்துக் கொண்டிருக்கிறேனோ, அதையே நினைவுபடுத்துகிறது அவர் வரவும் இந்தச் சாமான்களும்.

❁ ❁ ❁

அப்பாவையோ வேறெந்த

**"உமா" என்ற புனைபெயருள் மறைந்திருக்கும் செல்வி. கௌரி சிவம்; பொகவந்தலாவை தபால் நிலைய அதிபரின் செல்வப் புதல்வி. யாழ்ப்பாணக் கல்லூரி மாணவி. "உறுதி பிறந்தது" என்ற கதை ஏற்கனவே "கலைச்செல்வி"யில் வெளியாகியுள்ளது.**

யாருக்குவேண்டும்? ஐந்து வருஷத்துக்கு முன்னென்றால், எவ்வளவு சந்தோஷத்துடன் குதித்தோடிப்போய், வாங்கி ஒவ்வொன்றாகப் போட்டுக்கொண்டு கண்ணாடியிற் பார்ப்பேன். அப்பொழுது அம்மாகூட "இந்

விதமான உறவினரையோ அறியாத எனக்கு அம்மா ஒரு குறையும் வைக்கவில்லை. அப்பா பொலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்தவர். 'ட்யூட்டியில்' இருக்கும்போது திடீரென்று மாரடைப்பால் இறந்தபடியால் அம்

மாவுக்கு அரசாங்கத்தால் விசேஷ சலுகைகள் செய்யப்பட்டன. பணமிருந்தும் உதவிதான் இல்லை. அம்மாதான் எல்லாம் பார்க்க வேண்டியிருந்தது.

ஒரு நாள் காய்ச்சலென்று படுத்த அம்மாவுக்குக் கடுமையாக்கிவிட்டது. டாக்டர் எழுதித் தந்த மருந்தை நானே போய் வாங்கி வரவேண்டியிருந்தது. எப்படியும் அன்றே அந்த மருந்து கொடுத்தாக வேண்டுமென்றார். அம்மா அறிவில்லாமலிருக்கும் போது அடுத்த வீட்டுப் பையனை அவளுக்கருகிலிருத்திவிட்டு நானே போனேன்.

திரும்பி வரும்போது பஸ்ஸில் ஒரே கூட்டம். பெண்கள் வௌவால்கள் போற் தூங்கும் போது எழுந்து இடங்கொடுக்கத் தான் தெரிவதில்லை இந்த ஆண்களுக்கு. வாயையாவது மூடி வைக்கத் தெரிகிறதா? "ஆண்களோடு சரிநிகர் சமானமாக நிற்க வேண்டியவர்கள் முதலில் பஸ்ஸில் நின்று பழகட்டுமே!" என்றார் ஓர் ஆசாமி.

அவருடைய ஹாஸ்யத்தை ரசித்ததற்கு அடையாளமாக 'விழுந்து விழுந்து' சிரித்தவரொருவர் என் கையைத் தட்ட, போத்தல் உடைந்து மருந்து கீழே கொட்டுப்பட்டது.

எனக்கு அழுகையழுகையாய் வந்தது. வருத்தத்தில் அறிவின்றிப் படுத்திருக்கும் அம்மாவின் முகமும், உதவியற்ற என் நிலையும்தான் கண்முன் தோன்றியது.

"என்ன அவசரமோ, யாருக்கு வருத்தமென்று மருந்து வாங்கினாளோ? பாவம்!"

"போத்தலைக் கொஞ்சம் இறுக்கிப் பிடித்தால் பூக் கை சுண்டிப் போய் விடுமோ?"

"ஏனம்மா அழுதால் கொட்டின மருந்து வந்து விடுமா என்ன?"

இருந்துகொண்டே வாய்ச் சம்பிரதாயம் போடும் இவர்களின் கேலி அனுதாப வார்த்தைகளையும், புத்திமதிகளையும் என்னால் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. அதிலேயே இறங்கி விட்டேன். எப்படியாவது மருந்து வாங்கிவிட வேண்டுமென்றிருந்தது. இறங்கியபொழுது எனக்குப் பின்னால் இறங்கினார் அவர் - செந்தில் நாதன். பெயர் பின்பு தான் தெரிந்தது.

என் வாழ்க்கையில் முதல் முதல் உண்மையான அனுதாபத்தோடு என்னை விசாரித்தது இவர் ஒருவர் தான். எங்கள் வீட்டுக்குக் கிட்ட வசிக்கும் கலாசாலை மாணவரென்றார். தானே போய் மருந்து வாங்கி வீட்டுக்கு வருவதாகச் சொல்லி என்னை வீட்டுக்கு அனுப்பினார். அன்று பின்னேரம் மருந்துடன் வந்தார். அவருடைய கண்ணியமான பேச்சும் அடக்கமான சுபாவமும் அம்மா

வுக்கு அப்படியே பிடித்துவிட்டது.

அம்மா, எங்கள் வீட்டுக்கு வந்து போகும்படி கேட்டுக் கொண்டாள். பலமுறை வந்தார். நளாக நாளாக அவரும எங்களில் ஒருவராகி விட்டார். அவர் அவ்வப்போது செய்த உதவிகள் உதவியற்ற எங்களுக்குத் தேவையாகத்தான் இருந்தன. அம்மா எப்படியோ சுற்றி வளைத்து அவரை எங்களுறவினராக்கி விட்டாள். அவரை மருமகனுக்கினுல் நான் வீட்டோடே இருப்பேன் என்று அம்மாவுக்கு ஒரே சநதோஷம். இதைஅவரிடம் கேட்டபொழுது ஒரு ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. தனக்கு இருப்பது ஆக ஒரே தங்கைதானென்றும், தன் விருப்பத்திற்கு எதிர்ப்பு ஒன்றுமில்லை என்றும் சொன்னுர். அம்மா நம்பினுள்.

இறுதியாண்டுப் பரீட்சை முடிந்து தன் ஊருக்குப்போய்க் கல்யாணத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து கொண்டு தன் தங்கையையும் கூட்டிக் கொண்டு வருகிறேன் என்று போனவர் பின்பு வரவேயில்லை.

ஒரு பத்திரிகையில் அவருடைய திருமணப் படம் தான் இருந்தது. அத்துடன் அவர் தங்கை நீலாவின் கல்யாணப் படமும் இருந்தது. இதை நான் முதல் நம்ப விரும்பவில்லை. விரும்பாவிட்டாலும் நம்ப வேண்டியிருந்தது. அம்மாவுக்குக் காட்டியபொழுது அவள் முகத்திலேற்பட்ட அதிர்ச்சி? அப்படியேதிடுக்கிட்டு இருந்துவிட்டாள். ஏற்கெனவேவருத்தத் தாற் பலஹீன மடைந்திருந்த உடம் பாற் தாங்கமுடியவில்லை இந்தஅதிர்ச்சியை. அதுவே அம்மாவிற்கு எமனுகிற்று.

ஒருவருமில்லாமற் தனியே விடப்பட்ட எனக்கு அண்டை அயலார்தான் துணையாக இருந்தார்கள். அம்மாவை இழந்த துக்கமும், காதலில் ஏற்பட்ட ஏமாற்றமும் ஒருவருமற்ற என் நிலையும் மனதில் ஒரு வைராக்கியத்தை ஏற்படுத்தியது. நான் நானுக வாழ வேண்டுமென்ற எண்ணமும், ஒருவரிலும் தங்காமல் வாழ முடியும் என்பதையும் மற்றவர் அறியவேண்டும் என்ற பிடிவாதமும் என்னைப் படிக்கத் தூண்டியது- ஏற்கெனவே எஸ். எஸ். சி. பாஸ் பண்ணியிருந்த நான் ஆசிரியர் கலாசாலையிற் சோந்து இரண்டு வருடங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியையாகியும் விட்டேன். என் வாழ்க்கைக்கு நானே வழிவகுத்துக் கொண்டிருக்கிறேன். அதற்கும் தடைபோடுவது போலல்லவா இருக்கிறது செந்திலின் பேச்சு! ஒருமுறை ஏமாந்தநான் இன்னுமொருமுறை ஏமாறப் போகிறேனு, என்ன?

தன் தங்கை நீலாவுக்கு ஒரு காலில் ஏதோ சுகமில்லாமல் வந்தபடியால் ஒரு மாதிரி நடப்பதால் ஒருவரும அவ

ளைக் கல்யாணம் செய்யச் சம்மதிக்கவில்லையாம். கடைசியில் நீலாவை ஏற்ற ராஜுவின் வேண்டுகோளின்படி அவர் தங்கை கோமதியை மணக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாம். இதை நான் என்னைப் போலொரு பெண்ணுக்காகச் செய்யப்பட்ட தியாகம் என்று திருப்தி அடைய வேண்டுமென்கிறார். இருபதாம் நூற்றாண்டுப் பெண்ணாகிய என்னால் எப்படித் திருப்தியடைய முடியும்?

இப்பொழுது கோமதி இறந்துவிட்டாளாம். இறக்கும் போது அவள் குழந்தை பானுவிற்கு என்னையே தாயாக்கும்படி கேட்டுக்கொண்டதன் பேரில், அவள் ஆத்மா சாந்தியடைவதற்காக இன்று என்னிடம் வந்தாராம். நான் இவ்வளவு காலமும் அடக்கி வைத்திருந்த ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துவிட்டேன். அவரும் அறியட்டும் நான் பட்ட அவஸ்தைகளை.

அவர் நிலை பார்க்கப் பரிதாபமாகத்தான் இருந்தது. நான் இவ்வளவு பேசியும்அவர் வாய் திறக்கவில்லை. தனியே இருக்கும் எனக்கு எப்படியும் ஒரு துணை தேவைதானே! அதனால்தான் பானுவை வளர்க்கச் சம்மதித்தேன். கடைசியாக, “பானுவை என்னிடம் ஒப்படைத்தபின் உங்களுக்கும் அவளுக்கும் ஒரு தொடர்பும் இருக்கக்கூடாது. நீங்கள் அவளைப் பார்க்கக் கூட வரக் கூடாது இதுவே நீங்கள் செய்த குற்றத்திற்கு ஏற்ற பிராயச்சித்தம் என்றபொழுது ‘யோசித்துச் சொல்லுகிறேன்’ என்றார்.

இனி அவர் விருப்பம்......

**செந்தில்நாதன்:**

நீலாவின் தொந்தரவு பொறுக்கமுடியாமற்தான் இன்று மல்லிகாவிடம் போனேன். ‘என்ன அண்ணா? அண்ணி, சொன்னதைச் செய்ய மறந்துவிட்டாயா?’’ என்றாள்.

நான் எந்த முகத்தோடு போய் அவளைப் பார்ப்பது என்றிருந்தேன். அவள் ஓர் ஆசிரியையாகி இருக்கிறாள் என்று கேள்விப்பட்டிருந்தேன்.

இன்று நேரிற் போய்ப் பார்த்தபோதுதான் எல்லாம் விளங்கியது. கொஞ்சம் படித்ததும் எத்தனை மாறிவிடுகிறார்கள்? ஒரு பேச்சுக்கு மறுபேச்சுப் பேசத் தெரியாமலிருந்தவள் இந்த ஐந்து வருஷத்துக்குள் எவ்வளவு பேசக் கற்றுவிட்டாள். எந்தக் கலாசாலையிற்றான் இதைக் கற்றாளோ?

பெண்கள் கெதியில் உணர்ச்சி வசப்படுவார்கள் என்று எத்தனையோ கதைகளிற் படித்திருக்கிறேன். ஆனால் இன்றுதான் நேரிற் கண்டேன். எதற்கும் ஓர் அந்

திரத்தில் இத்தனையும் பொரிந்து தள்ளிவிட்டு நான் வந்ததும் மன வருத்தப் பட்டிருப்பாள். பெண்புத்தி பின்புத்திதானே!

ஐந்து வருஷங்களுக்கு முன் மல்லிகா எனக்கு எதிர்பாராத வித மாக பழக்கமானள். அவளுக்கும் எனக்கும் எத்தனையோ வருடங் களாக உறவு இருப்பதாக என் உள் ளுணர்வு கூறிற்று. இதனுற்ருன் அவள் தாய் "மல்லிகாவை ஏற்றுக் கொள்ளுகிருயா" என்ற போதும் நான் மகிழ்ச்சியுடன் சம்மதித்தேன். இப்படியெல்லாம் நடக்குமென்று அப்போது கண்டேனு?

பரீட்சைமுடிந்து ஊர் போகும் பொழுது ஆகவேண்டிய ஏற்பாடு கள் செய்து வரத்தான் எண்ணிப் போனேன். தாய்தகப்பனற்ற எனக்கு இருந்த ஒரே தங்கை நீலா மாமா வுடன் இருந்தாள். நான் மணம் முடிக்குமுன் தங்கைக்கு செய்து வைக்க வேண்டாமா? செயலில் இறங் கியபொழுதுதான் அதன் கஷ்டம் விளங்கியது. சிறுவயதில் வாதம் வந்ததன் காரணமாக நீலா நடக் கும்போது ஒருபக்கம் சரிந்துதான் நடப்பாள், எத்தனை ஆயிரம் ரூபா வாலும் இதை மறைக்கமுடியவில்லை. சீதனத்திற்காக வந்தவர்கள் அவள் நடப்பதைப் பார்த்து 'சொத்தி' என்று ஒதுக்கினர்கள். இப்படிச் செய்வதறியாது திரிந்தபோது வந் தான் என் நண்பன் ராஜு. நான் தன் தங்கை கோமதியை ஏற்ருல் தானும் நீலாவைக் கல்யாணம் செய் கிறேன் என்ருன். எல்லோராலும் ஒதுக்கப்பட்ட நீலாவை ஏற்றதற் காகவாவது அவன் சொல்லைக் கேட் கவேண்டாமா?

திருமணம் நடந்தது. மண வாழ்க்கை சுவையற்றதாகவே இருந் தது. என்ருலும் கோமதிக்கு செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றையே

கோமதி......எத்தனை நல்லவ ளாக முதலில் இருந்தாள்! அவளுக்கு யாரோ என் கதையைச் சொல்லிவிட் டார்கள். கொஞ்சநாட்களுக்குப் பின் நான்செய்யும் செயலுக்கும் சொல்லும் சொல்லிற்கும் ஒவ்வொரு அர்த்தம் ஏற்படுத்திக்கொண்டு வருந்தினள்; என்னேடு அடிக்கடி சண்டைசெய் தாள். வீணை இல்லாதவற்றைக் கற் பனை செய்யாதே என்று எத்த னையோ தடவைகள் சொல்லியும் அவள் கேட்கவில்லை. குழந்தை பானு பிறக்கும்பொழுதே தாய்க்கு வருத் தத்தை கொடுத்துக் கொண்டு தான் பிறந்தாள். வருத்தம் வைத்தியத் திற்குக் கட்டுப்படாமற் போயிற்று. இனித் தான் பிழைக்கமாட்டேன் என்று அவளுக்கே தெரிந்துவிட்டது மரணத்தறுவாயிற் கட்டிலருகே நின்ற என்னைப் பார்த்து, "பானுவுக்கு உங் கள் மல்லிகாவைத் தாயாக்கி விடுங் கள். என்ன......என் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்களா......?" என்ருள் சோர்ந்த முகத்துடன். அந் நிலையிற் கூட "உங்கள்" என்பதை கொஞ் சம் அழுத்தியே சொன்னள்.

அப்போதைக்குத் தலையை ஆட்டி வைத்தேன்.

ஆனல் இப்பொழுது நீலா சும்மா இருக்க விடுகிருளா...? அவளுக்கு என்மேல் ஒரே பக்தி. தன் நல்வாழ் வுக்காக என் சுயநலத்தையும்துறந்து விட்டேன் என்று அவள் என்னைப் பற்றிச் சொல்லும் போது நானும் பெருமைப் படுகிறேன். நான் இப் படித் தனிமையாய் இருப்பது அவ ளுக்கு பிடிக்கவில்லையாம். "போய்க் கேள் கேள்" என்ருள். போனேன். நடந்தது என்ன?

நான் வாங்கிப் போன சாமான் களைக்கூட அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. நான்தான் முதலிற் கதையைத் தொடக்கினேன், சுத்தி வளைக்காமல்.

என் வார்த்தைகள் ஒவ்வொன்

நிற்கும் மாறு சொல்லி விவாதித்தாள். "மல்லிகா! நான் உனக்குக் குற்றம் செய்ய வேண்டுமென்று செய்யவில்லை. என் விதி அப்படி இருந்தது. நடந்தது நடந்துவிட்டது" என்று சொன்னபோது, "நன்றாயிருக்கிறது. செய்வதெல்லாவற்றையும் செய்துவிட்டு விதியின் தலையிற் பாரத்தை போட்டிடலாமே அப்போ மதி எங்கே போயிற்றும்? நீங்கள் குற்றமென்று செய்யாவிட்டாலும், அதன் பலன் என்னைத் தானே சூழ்ந்தது? நீங்கள் அப்படிப் பிழை செய்திராவிட்டால், எனக்கொரு கடிதமூலமாவது உங்கள் மாற்றத்தை தெரிவித்திருக்க மாட்டீர்களா?" என்று விவாதித்தாள்.

கடைசியாக தன்னால் பானுவை வளர்க்கமுடியும் என்றாள். எனக்கும் என் மகளுக்கும் ஒரு தொடர்பும் இல்லாவிட்டாற் தான் அவளை நல்ல முறையில் வளர்க்கிறேன் என்கிறாள், யோசித்துச் சொல்லுகிறேன் என்று வந்தேன்.

ஒற்றைக் கண் வைத்தியத்திற்குப் போனவன் பின் மற்றக் கண்ணையும் இழந்ததைப் போன்ற நிலை தான் என்னுடையதும். அவள் குற்றமென்று சொல்வதற்காக, அவள் என்னை மன்னிக்கும் படியாகவாவது அவள் சொன்ன அந்தப் பிராயச்சித்தத்தை செய்தாகத்தான் வேண்டும். இனி பானுவுக்கும் எனக்கும் ஒரு தொடர்பும் இருக்காது. இதை நினைக்க என் மனத்தை என்னவோ செய்கிறது. கண்களில் கண்ணீர் கசிகிறது. என்ன செய்வது? பானுவைத் தூக்கிக்கொண்டு நடந்தேன், அவள் சொல்லும் அந்தப் பிராயச்சித்தத்திற்காக!


சகலவிதமான கட்டிடத்துக்குரிய
உத்தரவாதம் பெற்ற பொருட்கள்
குறைந்த விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம்
ஒருமுறை பரீட்சிக்கவும்

**என். வைத்திலிங்கம் அன்ட் கொம்பனி லிமிரெட்**

கொழும்பு
38, மூன்றும் குறுக்குத்தெரு,
ரெலிபோன், 2029.

யாழ்ப்பாணம்
ரெலிபோன்,
530.

# நல்லமுத்து

"புதுமைப்பிரியை"

அதிகாலை ஐந்தரை மணியாகியும் இன்னும் கிழக்கு வெளிக்கவில்லை! மப்பும் மந்தாரமும் முட்டி நின்று ஒரே இருளாக இருந்தது. வாடைக்காற்று சுருதிகூட்டிப் பேயிரைச்சல் போட்டது.

உதயகாலப் பூசை அறிவிக்கும் பிள்ளையார் கோவில் மணியின் டங்கார ஓசைகேட்டு நல்லமுத்துக் கிழவி துடித்துக்கொண்டு எழுந்தாள். பாவம்! வயது போன உடம்பு-குளிரிலும் துக்கத்திலும் நைந்து கொஞ்சம் அதிகமாகவே அன்று தூங்கிப்போய்விட்டாள்.

"அப்பனே! விக்கின விநாயகா, வெல்லனிற் செல்லா! நீதான் துணை" வழமைப்படியே அவள் வாய் உருப் போட்டுக் கொண்டது.

"பிள்ளை முத்தழகீ! ...... எடி மேனே!"

கிழவியின் குரல் கேட்டும் கண்களை விழிக்காமலே காலைக்குளிரின்

கொண்டே "உம்......ம்" கொட்டினாள் கிழவியின் மகள் முத்தழகி.

"நான் தண்ணிக்குப் போட்டு வாறன் மேனை. நீ கனநேரம் நித்திரை கொள்ளாமல் எழும்பி வீட்டைக் கூட்டி அடுப்பை மூட்டு"— நல்லமுத்துக்கிழவி பானையையும் குடத்தையும் தூக்கித் தலையிலும் இடுப்பிலும வைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டாள்.

நல்லமுத்து என்ற பெதும்பை, மங்கையாக, மடந்தையாக பேரிளம் பெண்ணாக, வெவ்வேறு கட்டங்களைத் தாண்டிவிட்டாலும், அவள் விருத்தையாகிவிட்ட போதும இன்னமும் குடங்களைச் சுமந்து கொண்டுபோய் ஒரு கட்டைக்கப்பாலிருந்து தண்ணீர் அள்ளிக்கொண்டு வருவது அவளுடைய வாழ்க்கையுடன் ஒட்டிக் கொண்டுவிட்ட அன்றாட நிகழ்ச்சி ஆகிவிட்டது. அந்த ஊர்ப்பெண்களுக்கு அவள் ஒன்றும் விதிவிலக்கல்ல. அவ்வூரிலுள்ளவர்களின் அதிர்ஷ்டக்குறைவோ, இயற்கையின்

---

எழுத்துலகில் தனியிடம் வகிக்கும் பெண் எழுத்தாளர் திருமதி பத்மா சோமகாந்தன். "சுதந்திரன்" சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவர். நல்ல பேச்சாளர். நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். தாய்க்குலத்தின் தனிப்பெரும் பண்பை "நல்லமுத்து" ஆக்கியிருக்கின்றார்.

றுகளில் கிடைப்பது உவர் நீர்தான்! அவ்வப்போது தேர்தல் வரும் போது காளான் போல தலையைக் காட்டும் அபேட்சகர்கள் தாம் குழாய் மூலம் நல்ல தண்ணீர் தர ஏற்பாடு செய் வோமென வாக்குறுதிகள் கொடுத் தாலும், அந்த ஊரைப் பொறுத்த வரை இன்னும் எந்தப் 'பகீரதனும்' அதைச் செய்யவில்லை. ஊர்ப்புறத் தேயுள்ள பிள்ளையார் கோவிலில் கிணற்று நீர் உவரற்றது. அதுதான் அவர்களுக்கெல்லாம் தஞ்சம். ஊரி லுள்ள பெண்களெல்லாரும் விடிவ தற்கு முன்பே குடங்களைத் தூக்கிக் கொண்டு பிள்ளையார் கோவில் கிணற்றை நோக்கிப் புறப்பட்டுவிடு வார்கள்.

தெருப்படலையைக் கொழுவி விட்டு நல்லமுத்துக்கிழவி தெருவில் தன் குச்சுக் காலை ஊன்றி நடை போட்டுக் கொண்டிருந்தாள் அவள் மனமும் எங்கோ போய்க் கொண்டிருந்தது.

''ஹூ......ம் ம்!'' ஒரு நெடுமூச்சு! நாள் தொடங்கும் வேளையில், அந்த அதிகாலையில் கூட வேதனை பார மாக கிழவியின் இதயத்தை நெரித் தது. இளஞாயிறுக்கு மணமாகி அன் றோடு சரியாக இரண்டு வாரங்களாகி விட்டன. இளஞாயிறு அப்படிச் செய்வாரென்று கிழவி கனவில்கூட நினைக்கவில்லை......இனி முத்தழகி யின் கதி?—

''வெல்லனிற் பிள்ளையாரே! என்ரை மேளுக்கு ஏன் இப்படிச்செய் தாய்?'' கிழவி வாய்விட்டு நொந்து கொண்டாள்

பிள்ளையார் கோவில் மணி யோசை இன்னும் ஒலித்துக் கொண் டிருந்தது.

(2)

இளஞாயிறு கிழவிக்கு ஒன்றும் உறவல்ல; முத்தழகிக்கு மச்சான் முறையுமல்ல; அவர் ஒரு ஆசிரியர்.

அந்த ஊரிலுள்ள அரசாங்கப் பாடசாலை அந்தக் கிராமத்துக்கு எப்படி முக்கியமாக இருந்ததோ அதேபோலவே கிழவி நல்லமுத்து வும் அந்தப் பாடசாலை ஆசிரியர் களுக்கும் முக்கியமானவளாக— மிக வும் வேண்டியவளாக இருந்தாள். அந்த ஊரில் ஹோட்டல்களோ, உணவுச் சாலைகளோ இல்லை. அந்த அரசாங்க பாடசாலையில் கல்வி போதிப்பவர்கள் பெரும்பாலும் வெளி யூர் ஆசிரியர்கள்; கிழவியிடமே மத் தியானச் சாப்பாட்டை ஒழுங்கு செய்து சாப்பிடுவார்கள். கிழவியின் கைராசியோ என்னவோ, அவள் போடும் சாப்பாடு அவர்களுக்கு வெகுவாகப் பிடித்துப்போய் அவர் கள் மத்தியில் அவள் மிகவும் அறி முகமாகிவிட்டாள். மத்திம வயதைத் தாண்டுமுன்னரே கணவனைப் பறி கொடுத்துவிட்ட நல்லமுத்துக் கிழ விக்கு தன் ஒரே மகளையும் தன்னை யும் காப்பாற்ற — வாழ்க்கையைக் கஷ்டமின்றி ஓட்ட அத்தொழில் போதுமானதாயிருந்தது. சாப்பாட் டைச் சமைத்து மத்தியானம் பாட சாலையில் கொடுத்துவிட்டு வருவது அவளுக்கு பெரிய சிரமமாயிருக்க வில்லை.

கடந்த ஆண்டு அந்தப் பாட சாலைக்குப் புதிதாக நியமனமாகி வந்த இளஞாயிறு மற்ற ஆசிரியர் களைப் போலத் தினமும் வீட்டுக்கும் பாடசாலைக்கும் பிரயாணம் செய்ய வில்லை. அவரது சொந்த ஊரும் பலமைல்களுக்கப்பால், கடல் கடந்த தீவுப்பகுதியிலிருந்தது. அவர் ஒண் டிப் பிரமச்சாரி. அதனால் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பாடசாலைக்கு அருகிலேயே இருந்துகொண்டார்.

வேறு உறவு முறையான தெரிந் தவர்கள் அவர் தொழிலாற்றும் இடத்தில் இல்லை. அவரோ ஊருக்குப்

புதிசு, இளம் பையன் என்பதால், சாப்பாட்டுக்குக் கஷ்டப்படவிடாமல் காலே, இரவு வேளைச் சாப்பாடுகளை யும் அவருக்கு நல்லமுத்துக்கிழவி செய்து கொடுக்க உடன்பட்டாள்.

ஆசிரியர் இளஞாயிறின் அடக் கமான சுபாவம், பணிவு, மேன்மை யான குணம் யாவும் கிழவிக்கு நன்கு பிடித்துப்போய், அவர்மீது பரிவையும் மதிப்பையும் ஏற்படுத் தியது.

கிழவியின் ருசியான சாப்பாடு, அன்பு சேர்ந்த அக்கறை, ஒழுங்கு, எல்லாம் சேர்ந்து இளஞாயிறுக்கும் நல்லமுத்து மீது வாஞ்சை வளரச் செய்தது. 'ஆச்சி!' என அன்பாகக் கிழவியை அழைப்பார் ஆசிரியர்.

ஒருநாளைக்கு அவருக்குத் தலே யிடித்துவிட்டாலும் கிழவி தாங்கமுடி யாமல், குடிநீரும் மருந்துமாக அக் கறையுடன் அவருக் கருகிலிருந்து 'மாஸ்டர், மாஸ்டர்' என ஒத்தாசை புரிவாள்.

நல்லமுத்துக் கிழவிக்கு ஒரு வாரம் நல்ல, காய்ச்சல் புளுஜுரம்; படுத்த படுக்கையாகிவிட்டாள். பெற் றதாயின் வருத்தம் போலத் துடி துடித்து விட்டார், இளஞாயிறு. கிழவி ஒன்றும் பயப்படவில்லே. உழைத்து உழைத்து உரமாக இருந்த ஒடியல் பிட்டில் வளர்ந்த உடம்புதானே? கிழவி வேதனைப்பட்டதெல்லாம் 'மாஸ்ட'ருடைய சாப்பாட்டு ஒழுங்கு குலேந்துவிட்டதே என்றுதான். நல்ல முத்துக்கிழவி மாஸ்டரைத்தனது குடிசைக்கு அழைத்துச் சொன்னாள்.

"மாஸ்டர்! என்ரை மகனைப் போல நீங்கள். இந்த ஓட்டைக்குடி சைக்கு வந்து சாப்பிடுங்கோ என்று நான் சொல்லக்கூடாதுதான். ஆனு லும் உங்கடை உடம்பு பட்டினிதாங் காது. இஞ்சை பிள்ளை முத்தழகியைக் கொண்டு சமைப்பிக்கிறன். வந்து சாப்பிடுங்கோ மாஸ்டர்."

அன்பைக் கொட்டித் தாயின் அக்கறையோடு அழைக்கும் கிழவி யின் கோரிக்கையை மாஸ்டர் தட் டிக் கழிக்கமுடியவில்லே. ஆசிரியர் இளஞாயிறு கிழவியின் வீட்டுக்கு வருவது அன்று முதல் வழக்கமாகி விட்டது.

ஊர் குசு குசுத்தது!

முத்தழகி பருவப்பெண். போலிச் சரக்குகளின் உதவியோ, பவுடர்ப் பூச்சோ இல்லாமல் இயற்கை அன்னையே அப்பெண்ணுக்கு எழிற் கோலம் தீட்டி அழகு பார்த்தாள்- அந்தக் குடிசை என்னும் சிப்பிக்குள் ஒளிவிடும் முத்துத்தான் முத்தழகி.

இளஞாயிறுக்கும் முத்தழகிக்கும் உறவு பூட்டி ஊர்ப்பெண்கள் கதை வளர்த்தார்கள்.

கிழவியின் செவிகள் செவிடாக வில்லே; ஆனுலும் அவள் பதறவில்லே. தனது மகள் மீது அவளுக்கு நல்ல நம்பிக்கை. மாஸ்டரின் பண்பு, உயர்ந்த குணம், பழக்கவழக்கம் யாவற்றிலும் ஓராண்டாக நல்ல ஈடு பாடும் மதிப்பும் அவளுக்கிருந்தது.

(3)

தூரத்து உறவுக்காரர் ஒருவர் நல்லமுத்துக் கிழவியிடம் வந்து முத் தழகிக்குத் திருமணம் பேசினர். கிழ விக்கு விருப்பம்தான். எத்தனை காலத்துக்குத் தொய்ந்து, சுருக்கு விழுந்த சடலத்தைப் போட்டு அடிப் பது? இன்னும் எவ்வளவு காலத்துக் தான் அது ஈடுகொடுக்கும்? மகளு டன் கலந்து கதைத்து முற்றுத் தெரிவிப்பதாகச் சொல்லி அவரை அனுப்பிவிட்டாள். முத்தழகி அத் திருமணம் வேண்டாமென ஒரேயடி யாக மறுத்துவிட்டாள். கிழவிக்குத் திகைப்பாக இருந்தது. ஆனுலும்

மகளை நெருங்கவில்லை. குடும்பத்தி லொருவராகப் பழகும் மாஸ்டரைக் கொண்டு மகளுக்குப் புத்திசொல்லி வித்தால் சரிவரும் என எண்ணிக் கொண்டு அவள் வெளியே போய் விட்டாள்.

அன்று காய்கறிகள் வாங்கிக் கொண்டு கிழவி வீடு திரும்பும் போது இருள் மன்னன் மாலை மங் கையைத் தழுவிக் கொண்டிருந்தான். கிழவி படலையைத் திறந்துகொண்டு வீட்டுக்குள் நுழைந்தபோது—

முற்றத்து வெளியில் இளஞாயி றும் முத்தழகியும் நெருங்கி அணைந் திருந்து பேசிக் கொண்டிருந்தார்கள் மணமக்கள் போல!

திண்ணையில் எரிந்துகொண் டிருந்த விளக்கொளியில் பொரித்து இளகிய அப்பளம் போன்ற கன்னங் கள் பொருந்திய கிழவியின் முகத் தில் இலங்கும் மங்கலான கண்க ளுக்கு இக்காட்சிநன்கு தெரிந்தது.

கிழவியின் கண்கள் கூசின. "சீ! மகள் நடத்தை கெட்டவளா? மதிப்பு வைத்திருக்கும் மாஸ்டர் குடிகெடுப் பவனு?" அவள் உள்ளம் சீறியது.

இரவு; சாப்பாட்டு நேரம். கிழவி வழமை போலஇல்லை. கலகலப்பாக அன்போடு அக்கறையாக வழக்கத்தில் உணவு கொடுக்கும் நல்லமுத்துக் கிழவி அன்று வெறுப்பாக, மௌன மாக இருந்தது இளஞாயிறின் உள் ளத்தில் உறுத்தியது.

அவர் தான் வாய் திறந்தார்; சொற்கள் உதிர்ந்தன.

"ஆச்சீ ...! என்ன இண்டைக்கு ஒரு மாதிரி"

"——" பதிலில்லை.

"ஆச்சி...என்ன சுகமில்லையே" இளஞாயிறு.

"ம் ... ம்"

"என்ன ஆச்சி? கலியாண விஷ யந்தானே? எல்லாம் முத்தழகி சொல் லிச்சுது......அது சரி ஏன் அவசரப் படுகிறியள் ஆச்சி?"

"வீட்டுக்குள்ளை குமர்ப்பிள்ளையை வைத்துக் கொண்டிருக்கிற அபாயம் பெற்றவர்களுக்குத்தான் தெரியும் மாஸ்டர். எல்லாம் அந்தந்த வயசிலை செய்ய வேணும்."

"ஆச்சி! நான்... நான்... ஒன்று சொல்லுறன். என்ன நினைப்பியளோ தெரியாது ... நான் ... அதுதான் ... நான்...முத்தழகியை..." வசனத்தை வெட்டி வார்த்தைகளை விழுங்கினுர் இளஞாயிறு.

ஆனுலும் கிழவிக்கு விளங்கிவிட் டது. அவளுக்குத் திகைப்பாகவும் வியப்பாகவுமிருந்தது.

"என்ன மாஸ்டர் பேசிறியள்...? இதுக்கு உங்கடை ஆட்கள் ஒத்துவரு வினமே...... நாங்கள் உங்கடை சாதி, மரபே, எங்களிட்டை பணமிருக்கே ......உதெல்லாம் வெறுங்கதை; இரத் தத்துடிப்பிலை சொல்லுகிற கதை ... உது சரிவருமே மாஸ்டர்? வாழ்க்கை வெறும் புத்தகப் படிப்பல்ல மாஸ்டர்" அநுபவத்தில் முற்றிப் பழுத்த வார்த்தைகள் வெடித்துத் தெறித்தன

இளஞாயிறு சிறிது நேரம் வாய டைத்து மௌனமாக இருந்தார்.

'ஆச்சி! என்னை நம்புங்கோ— உங்கடை பிள்ளைபோல நான். நீங் கள் பெற்ற தாய்க்குச்சரி. உங்கடை தலையில் அடிச்சுச் சத்தியம் பண் ணுறன். நான் மணம் முடிப்பதா யிருந்தால் முத்தழகியைத்தான் செய் வேன். அல்லது இல்லை. இது சத்தி யம்!—இளஞாயிறின் குரல் கரகரத் தது; சிந்தனை தொழில் புரிந்தது.

கிழவி பேசவில்லை. மாஸ்டரின் வாக்கில் அத்தனை உறுதி தொனித்தது கண்டு அவள் மௌனமாகி விட்டாள்.

'சமுத்திரத்தின் அடித்தளத்திலே சிப்பியின் பாதுகாப்பில் இருக்கும் முத்துக்களை ஒத்தவர்கள் பெண்கள்!' இளஞாயிறின் வாய் இப்படி ஒரு முறை முணுமுணுத்து ஓய்ந்தது.

'கலீர்' என்ற கைவளைகளின் ஒலிகேட்டு இளஞாயிறின் சிந்தனைத் தொடர் அறுந்தது. முத்தாக ஒளி வீசி முகப் பொலிவுடன் முத்தழகி அவர் கண் எதிரே நின்ருள். இளஞாயிறுக்கு அன்றிரவுச் சாப்பாட்டை முத்தழகியே பரிமாறினுள். அது சாப்பாடாகவல்ல, அமிர்தமாக அவருக்கு இனித்தது. அந்தச் சோடிகளின் கலகலப்பை பார்த்துக் கிழவி பூரித்துக்கொண்டாள்.

(4)

நல்லமுத்துக் கிழவி மதவடிச் சந்தியைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தாள்; தெருவில் கிடந்த கல்லொன்று காலில் இடறியது. தலையிலிருந்து பானை தொப்பென்று விழுந்தது. கிழவி குனிந்து பார்த்தாள். கண்களில் நீர் துளிர்த்துக் கொண்டு வந்தது—அந்தப் பானை நொறுங்கி, சுக்கு நூருகச் சிதறிப் போய்க்கிடந்தது.

''சே! காலம்பற வெள்ளென இது என்ன முழிவியளம் கடவுளே! ஏனிந்த அநியாயம்?'' அவள் கண்ணீரைத்துடைத்துக்கொண்டு, குடத்தைத் தலையில் வைத்தபடி தொடர்ந்து நடந்தாள். பானை உடைந்த துயரத்தை மறக்க மீண்டும் நினைவுக் குகைக்குள்தான் எட்டிப் பார்த்தாள். யாவும் வேதனையும் விம்மலுமாகத் தான் தெரிந்தது. அந்தப் பானையைப் போலவே அவளுடைய எண்ணங்கள், ஆசைகள், கனவுகள்யாவும் நொருங்கிப்போய் பதினைந்து நாட்களாகின்றனவே!— விடுமுறைக்கு ஊர்சென்ற இளஞாயிறு வேருெரு பெண்ணை முடித்துக்கொண்டுவிட்டார்!

கிணற்றடிக்குக் கிழவி சென்ற போது அன்னப்பிள்ளையும் தங்கம்மாவும் அருகேயுள்ள குளத்தில் குளித்துக்கொண்டிருந்தனர். அன்னப்பிள்ளையைக் கண்டாலே கிழவிக்குப் பிடிக்காது. ஊர்ச்செய்திகளையெல்லாம் பூதக்கண்ணுடி மூலம் பார்ப்பவள் அவள். கிழவியைக் கண்டதும் தங்கம்மா கேட்டாள்;

''ஏனணை ஆச்சி, இண்டைக்குச் செண்டு போச்சு......முகமும் வாடிக் கிடக்கு......ஏதும் சுகமில்லையோ?''

''இல்லைத் தங்கம்... எழும்பக் கொஞ்சம் சுணங்கிப்போச்சுது?'' கிழவி சொல்லிக் கொண்டே, மூக்கைப் பொத்திக்கொண்டு அக்குளத்து நீருள் தலையைத் தாழ்த்தினுள்.

''என்ன தங்கம்மா தெரியாதே ......இளஞாயிறு மாஸ்டரும் பெண் சாதியும் நேற்று ஊரிலிருந்து வந்திருக்கினம். நல்லமுத்து ஆச்சியிட்டை ராத்திரி விருந்துக்கு வந்திருப்பினம். அவ நித்திரை முழிச்சிருப்பா......அந்தப் பொம்பிளை கிளி போல நல்ல வடிவாம். போய்ப்பார்த்தியே.'' அன்னப்பிள்ளை கிழவியின் உள்ளத்தை உறுத்தும் நோக்கமாகப் பேச்சைக் கிளறினுள்.

''ஓமெண்டுதான் கேள்விப்பட்டன். நான் போகேல்லை-'' தங்கம்மா.

''எல்லாம் அவையவைக்குக் குடுத்துவைக்கவேணும், சும்மா பெரிய இடத்துப் பெடியளுக்கு ஆசைப்பட்டு வலை விரிச்சாச்சரி வருமே...?'' கிழவியின் இதயத்தைக்

குடைந்து செல்லும்படி சொல்லம்பு களை வீசினள் அன்னப்பிள்ளை.

"என்னை முத்தழகிக்கு ஆசை காட்டி மோசஞ்செய்துவிட்டு புதிய பெண்ணையுங் கூட்டிக் கொண்டு வந்து ஊரில் விளம்பரம் செய்ய வந்துவிட்டார் மாஸ்டர். எங்களை நிம்மதியாக வாழவிடமாட்டாரா?" வேதனையால் நைந்த கிழவியின் உள் ளம் பழிதீர்த்துக் கொள்ளத்துடித் தது.

"அந்தப் பெண் பாவம்" அப்பி ராணி. உண்மை தெரியாமல் ஏமாந் திருக்கும். முத்தழகியோடு இருந்த 'தொடுசலை' மாஸ்டர் மறைத்திருப் பார். உண்மை தெரிந்தால் அந்தப் பெண் அவர் மீது சீறும்......சீறட் டும் நாம் துடிப்பதுபோல மாஸ்டரும் துடிக்கட்டும்" கிழவி தன்னைமறந்து விட்டாள்; தாய்மையை மறந்துவிட் டாள்—கோபம் கொப்பளிக்கும் கண் களுடன் மதுரையை நோக்கிக் கடு நடை போட்ட கண்ணகியைப்போல -ஆத்திரம் பொங்க இளஞாயிறு குடி வந்திருக்கும் வீட்டை நோக்கிப் போனாள்.

மாஸ்டர் வீட்டில் இல்லை. அந் தப் பெண்தான் இருந்தாள். அவள் அழகின் இருக்கை; அந்தி வானத்து நிலவின் எழில் காட்டி, ஆடும் மயி லின் அழகு ஊட்டி அடக்கமாக வெளியே வந்தாள்.

"அவர் இருக்கிறாரே?"—கிழவி யின் குரலில் இன்னும் கோபம் தணி யவில்லை.

"இல்லையெணை......... என்ன வேணும்?" பணிவாகப் பரிவுடன் கேட்டாள். கிழவி அவள் முகத் தைப் பார்த்தாள்.

வீட்டுத் தொழுவத்திலே கட் டப்பட்டிருக்கும் கள்ளங்கபடமற்ற பசுக்கன்றின் முகம் போலக் கிழ விக்குத் தெரிந்தது. அவள் முகத் தில் சலனமோ கவலையோ இல்லை. துன்பவாடையே அணுகாத புதுமலர். நெற்றியின் நடுவில் குங்குமத்திலகம் சிவப்பாக பளிச்சிட்டுக்கொண்டிருந் தது.

"என்னணை பேத்தி வேணும்?" மீண்டும் அவள் கனிவாகக் கேட் டாள். அடித்து வீசிக்கொண்டிருந்த காற்று அவள் தாவணிச் சேலையை ஒருபுறம் ஒதுக்கியது.

வைத்தகண் வாங்காமல் கிழவி அவளைப் பார்த்தாள்—அவள் கபட மற்ற முகத்தை, நெற்றித்திலகத்தை கழுத்தில் மின்னும் தாலியைப் பார்த் தபடியே நின்றாள்!

'தாலி!" அதை வெறும் அழகுப் பொருளாக, சாதாரண நகைகளி லொன்றாகக் கருதும் இன்றைய பெண்ணுலகத்தைச் சேர்ந்தவளல் லவே நல்லமுத்துக்கிழவி— அது நகையாகப், பொருளாகத் தெரிந் ததைவிட, ஒரு பெண்ணின் அழகு, எழில், அந்தஸ்து, சிறப்பு இன்பம், வாழ்வு ஏன் எல்லாமே அந்தத் தாலியில்தான் தங்கியிருப்பதாக அந் தத் தாயுள்ளம் உணர அதிகநேரஞ் செல்லவில்லை.

"பசியாயிருக்கிறதா.....ஏதாவது தரட்டுமா பேத்தி?" மென் மொழி கேட்டுக் கிழவி வாய்திறந்தாள்;

"வேண்டாம் பிள்ளை. சும்மா தான் வந்தேன்......நீ சந்தோஷ மாய், சுமங்கலியாய், வீட்டுக்கு லெட் சுமியாய் வாழவேணும்!" அவள் குர லில் கோபம் இல்லை; குளிர்மை படர்ந்திருந்தது.

'சடா'ரெனத் திரும்பி நடந்தாள் நல்லமுத்துக்கிழவி.

அவள் கண்களில் துளிர்த்த நீர் கன்னத்தில் பட்டு மார்புச்சேலையை முத்தமிட்டது.


வானத்தில் மப்பையும் மந்தா ரத்தையும் விரட்டி அடித்துவிட்டுக் கதிரவன் கம்பீரமாக எழுந்து கொண்டிருந்தான்.

* * *

# எது அழகு?

"யாழ்நங்கை"

"பெண்ணொருத்தி உயர்ந்த லட்சியங்களுக்காகப் போராடலாம். பெருமைதரும் அறிவுச் செல்வத்தினால் புகழடையலாம். போற்றப்படலாம். ஆனால் இவற்றினால் பெறப்படும் வாழ்வு நிறைவாழ்வென்று அவளே ஏற்றுக் கொண்ட போதும், உலகம் ஒப்புக்கொள்வதில்லை. காலக்கிரமத்திலே எது எது நடைபெற வேண்டுமோ அதுஅது ஒழுங்காக நடைபெற்று, நிறைவெய்திய பொழுது தான் அவளை முழுமையான பெண்ணாக ஊரும் உலகமும்மதிக்கிறது. இல்லையென்றால் மற்றையவரின் அனுதாபத்திற்கோ, கேலிக்கோ ஆளாகவேண்டி ஏற்படுகிறது".



கள் என் இதயத்தில் நிறைந்திருந்த வேதனைப் புண்ணை மேலும் தாக்கியது, அந்த வேதனையை என்னால் தாங்கவே முடியவில்லை.

அப்படியென்றால் இதில் நான் எதிலே சேர்ப்பு? நான் பிரமாதமாக ஏதும் படித்துக் கொட்டவில்லை. ஆக படித்தது எஸ். எஸ். ஸி. தான். உயர்வான லட்சியம் ஏதாவதற்கு உழைக்கிறேன் என்றால் அதுவுமில்லை. நிறைவான வாழ்வை அடைந்திருக்கிறேனா? ஊஹூம்! அதுவும் கிடையாது! இந் நிலையில் நான் ஊராரின் கண்களிலே எத்தனை அனுதாபத்துக்குரியவள்...?

---

இலண்டன் பல்கலைக்கழக பீ. ஏ. தேர்விற்குப் படித்துக்கொண்டிருக்கும் "யாழ் நங்கை"யின் இயற்பெயர் செல்வி. அன்னலட்சுமி இராசையா. இவருடைய படைப்புகள் ஏற்கனவே "கலைச் செல்வி"யில் வெளியாகியுள்ளன. எழுத்துத் துறையில் நல்ல எதிர்காலம் உண்டு என்பதற்கு "எது அழகு" எடுத்துக்காட்டு.

---

ஆமாம். உண்மைதான். என் இருபது வயது கொண்ட வாழ்க்கை ஏடு கற்றுத்தந்த பாடமும் இதுதான். நான் வாசித்துக் கொண்டிருந்த நாவலிலே எழுதப்பட்டிருந்த அந்த அடி

எங்களிலே ஐந்து பெண்கள். நான் மூன்றாவது பெண். 'ஐந்து பெண் பெற்றால் அரசனும் ஆண்டி, என்றொரு பழமொழிகூட உண்டு. அப்படியென்றால் சாதாரண தொழி

லாளியான என் தந்தையின் நிலைமையைப் பற்றிக் கூறத்தேவையில்லை. எங்களை வளர்த்தெடுக்க அவர் பட்ட பாடு கொஞ்சநஞ்சமல்ல. அத்துடன் காரியம் முடிந்து விட்டதா? கல்யாணம் என்ற கரைக்கு நாம் ஏற்றப்பட வேண்டுமே! என் மூத்த சகோதரிகள் இருவரையும் என் தந்தை எப்படியோ இல்லறத்தில் ஈடுபடுத்தி விட்டார். ஆனால் நான்?...... நான்?

புரட்சி ஏதும் செய்ய எனக்குத் தெரியாது. துணிவுமில்லை. ஊராரின் அனுதாபத்தையோ அன்றி கேலியையோ பொறுத்துக் கொள்ளவும் என்னால் இனி முடியாது. நாலுபேர் என்னைப் பெண்ணாக மதிக்க, நான் இல்லறம் என்ற போர்வைக்குள் மறைந்துவிடவேண்டும். ஆனால் அது எனக்குக் கிட்டுமா? நான் வாழ்வு பெறுவேனா?

* * *

அப்பொழுது நான் எஸ். எஸ். ஸி. சித்தியடைந்துவிட்டு வீட்டில் இருந்தேன். வயது சரியாகப் பதினேழு. என் தந்தை எனக்கு மாப்பிள்ளை தேட வாரம்பித்தார். நாங்கள் என்ன செல்வத்தில் பிறந்தவர்களா வரன் நீ நான் என்று போட்டியிட?

அன்று வெள்ளிக்கிழமை என்றுதான் நினைக்கிறேன். என் சகோதரிகளான கிரிஜாவும் சுந்தரியும் பாடசாலைக்குப் போய்விட்டார்கள். நானும் ஏதோ வேலையாக இருந்தேன். அப்பா அவசரம் அவசரமாக வந்தார், அம்மாவுடன் ஏதேதோ பேசினார். 'ராஜி! ராஜி!' என்று என்னைக் கூப்பிட்டார். ஓடிவந்த என்னிடம் ஒரு கடிதத்தை தந்தார். யாரோ சங்கரம்பிள்ளையும் அவர் குடும்பத்தினரும் என்னைப் பெண் பார்க்க வருவதாக அதில் எழுதியிருந்தது. உடலில் ஏதோ பரபரப்பு உள்ளத்தில் இனந்தெரியாத மகிழ்ச்சிக் கிளுகிளுப்பு. இதனால் எனக்கும் என் பெற்றோருக்கும் ஓரளவாகினும் நிம்மதி கிடைக்குமல்லவா?

கடவுளே! அந்த நாளை நினைத்தால் இன்றுகூட எத்தனை திகைப்பாகவும் வேதனையாகவும் இருக்கிறது; தெரியுமா? அன்று என்னிடம் பரவிநின்ற உணர்ச்சிகளை, ஆசைகளை, இன்பக் கற்பனைகளை நினைக்க நினைக்க எனக்கு என் மேலேயே வெறுப்புத் தோன்றுகிறது. சே! அற்பம்! இந்த மானிடஜன்மம்!

மாப்பிள்ளை வீட்டினர் எல்லோரும் வந்துவிட்டனர். உபசாரம் எல்லாம் பலமாக நடந்தது. கல்யாணச் சந்தையிலே பேரம்பேசப்படும் ஒரு பொருளாக சங்கரம்பிள்ளை குடும்பத்தின் முன்பு நான் நிறுத்தப்பட்டேன். மாப்பிள்ளையாக வந்த அந்தஆஜானுபாகுவான இளைஞரை நான் கடைக்கண்ணால் நோக்கினேன். என் உள்ளம் பூரித்தது. நாணமே உருக்கொள்ள நான் நின்று கொண்டிந்தபோது—

அவர் 'சடக்'கென்று எழுந்துவிட்டார். எல்லோரும் என்ன ஏது என்று தெரியாது விழித்தபோது, "இந்தக் கண்ராவியையா என் தலையில் கட்டப்பார்க்கிறீர்கள்? அதெல்லாம் முடியாது!" என்று கூறியவன், 'விருக்'கென்று வெளியே போய்விட்டான் பாவி!

நான் மரமானேன். சிலையானேன் பின்பு என்ன நடந்தது என்று எனக்குத்தெரியாது. தெரிந்துதான் என்ன ஆகவேண்டும்?

எம்மில் ஏற்பட்ட குறைக்காக நாம் படும் வேதனையிலும் பார்க்க, பிறர் அதைச் சுட்டிக்காட்டும்போதுதான் தாக்கம் கூடுகின்றது. ஆமாம்! நான் அழகற்றவள். வனப்பில்லாதவள். குரூபி! தெய்வம் ஏன் என்னை இப்படிப் படைக்கவேண்டும்? அழகற்றவளான எனக்கு ஆசாபாசங்கள் ஒன்றுமே இல்லையா? அழகில்லாதவர்கள் வாழ்வதற்கே அருகதையற்றவர்களா? ஆண்கள் எல்

லோருமே அழகர்களோ அன்றி நல்லவர்களோ அல்லவே!

வருடங்களும் ஒவ்வொன்ருக நகர்ந்தன. பெண்ணைப்பெற்ற பாபியான என் அப்பா மேலும் மாப்பிள்ளை வேட்டையில் இறங்கினர். எனக்குப் பின் குதிராக வளர்ந்து நிற்கும் என் சகோதரிகளுக்கு ஒரு வழி தேடவேண்டுமல்லவா? ஆனல் பலன் என்னவோ பூஜ்யம்தான். அழகின்மையைக் காரணமாக வைத்து வேறு சிலர் ஆயிரக்கணக்காகச் சீதனம் கேட்டார்கள். அது இருந்தால் இந்தப் பிரச்சினையெல்லாம் ஏன் வரப்போகிறது?

இந்நிலையில் ஊரார் பலரின் அனுதாபத்திற்கும், கேலிக்கும் ஆளாகிக் கொண்டிருந்தேன். 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்ற வாக்கு என் வரையில் பூர்த்தியாக மறுத்தபோது, விரக்தியே என்னிடம் மேலோங்கி நின்றது.

என் தாயாருக்கு ஒன்றுவிட்ட சகோதரர் ஒருவர் இருக்கிருர். அவருடைய மகன் சதானந்தன் கம்பனி யொன்றில் வேலைபார்க்கிருர். அவருக்கும் என் தங்கை கிரிஜாவுக்கும் சிறுவயது முதற்கொண்டே மணம் செய்வதற்காக யோசித்திருக்கிருர்கள். தம்முடைய மகனுக்கு வயது வந்துவிட்டதாயும் விவாக முடிவைப்பற்றியும் கேட்க வந்தார் என் மாமனர். ஆனல் என்னைப் பற்றிய பிரச்சனையல்லவா குறுக்கே நிற்கிறது. பாவம் அப்பா! அவர் என்ன செய்வார்? அம்மாவின் முகத்தைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை.

வேதனைச் சுமை இதயத்தை அழுத்தியது. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்ணீர் விழிகளை மறைத்தது. அல்லலுறும் மனித இதயத்திற்குச் சாந்தி கொடுப்பது தெய்வசிந்தனை ஒன்றுதான். எங்கள் வீட்டிற்குச் சமீபமாகவுள்ள கண்ணகை அம்மன் கோவிலுக்கு விரைந்தேன்.

பொழுது சாயத்தொடங்கியது. நான் வீடு திரும்பிக் கொண்டிருந்தேன். யாரோ என்னைப் பின்தொடர்வதுபோல் உணரவே திரும்பினேன். யார் வருகிறது? சதானந்தன்! அவர் ஏன் என்பின்னல் வர வேண்டும்? அவர் எதற்காக வந்தார் எப்பொழுது வந்தார் என்று நான் திகைத்து நின்றபோது—

'ராஜி! நான் உன்னுடன் ஒரு விஷயம் பேசவேண்டும் கொஞ்சம் நிற்கிருயா?' என்ருர். நான் பதில் கூருது மௌனமாக நின்றேன். அவரே மேலும் தொடர்ந்தார். 'உன் மணவிஷயத்தைப் பற்றியெல்லாம் அம்மா சொன்ஞ ராஜி. கேட்க எவ்வளவு வருத்தமாக இருந்தது தெரியுமா? போலியைக்கண்டு மயங்கும் முட்டாள்கள் உன்னைப் புண்படுத்தி விட்டார்கள். அப்படித்தானே?'

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்.......?" நான் ஆச்சரியத்துடன் வினவினேன்.

"உன் பண்பான குணம் எனக்கு நன்ருகப் பிடிக்கிறது. நீ விரும்பினல் நானே உன்னை மணந்து கொள்ளத் தயாராயிருக்கிறேன்!

"என்ன? நீங்களா? என்னையா?"

"ஆமாம் உன்னைத்தான் ராஜி! வெறும் அழகுத் தோற்றத்தினல் மட்டும் இன்பமாக வாழ்ந்துவிட முடியாது. வாழ்க்கைக்கு இன்றியமையாதது அன்பும், பண்பும், பொறுமையுந்தான். அது உன்னிடம் நிரம்பஇருக்கிறது. அதுவே போதும்" என்ருர் அவர். நான் பிரமிப்பிலிருந்து விடுபடவில்லை. புற அழகில் மயங்கும் முட்டாள்களுக்கு ஒரு பாடம் கற்பித்துக் தரப்போருரா என் அத்தான்?

அன்று இரவு அத்தான் சதானந்தனும், அவர் நண்பரும், அவர்களுக்கென ஒதுக்கிக் கொடுக்கப் பட்ட அறையிலிருந்து பேசியது என் காதில் விழுந்தது.

"குமார்! நான் கிரிஜாவைக் கல்யாணம் செய்யவே இங்கு வந்தேன். ஆனல் ராஜியைக் கண்டவுடன் என் மனம் மாறிவிட்டது. இயற்கை தன்னை வஞ்சித்துவிட்டதற்காக அவள் படும் கஷ்டமும் துக்கமும் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தத் துக்க உணர்ச்சியே அவள் முகத்திற்கு ஒரு தனிக் களையை ஏற்படுத்திவிட்டது. சோகம் கவிந்த அவள் முகத்தை என்னல் மறக்கவே முடியவில்லை, குமார் அவளை நானே கல்யாணம் செய்வதாகத் தீர்மானித்துவிட்டேன். —என்ருர் அத்தான்.

ஆயிரத்தில் ஒருவரான அந்த மனிதரை என் கண்கள் நன்றியுடன் நோக்கின. உள்ளத்திலிருந்து பொங்கியெழுந்த இன்பக் கற்பனைகளுடன் நான் வானவெளியில் உலாவத் தொடங்கிவிட்டேன். இனி, நான் யாருடைய அனுதாபத்திக்கும் ஆளாகவேண்டிய அவசியமே இருக்காதல்லவா?

---


ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் பாராட்டப்பட்ட

அருமையான புத்தகங்கள்

சுண்டிக்குழி ஆசிரியர் ஆசீர்வாதம்

அவர்களால் இயற்றப் பட்டவை

படிமுறைக்கணிதம் :- 2-ம் வகுப்பு துவக்கம்

8-ம் வகுப்பு வரை தனித்தனிப் புத்தகங்கள்

பயிலுந் தமிழ் :- இரண்டு பாகங்கள்

**இலக்கண விளக்கமும் பயிற்சியும்**

வியாபாரம் செய்வோருக்கு 20 வீதம் கழிவு உண்டு

**ஆசீர்வாத அச்சகம்**

32, கண்டி வீதி யாழ்ப்பாணம்.

# சிறுவர்களும் திரைப்படமும்

திருமதி. எம். ஏ. மக்கான்

**இன்றைய நவ நாகரிக உலகில் திரைப்படம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றது. சிறுவர்களுக்கு இதனால் ஏற்படும் தீமைகளை விளக்குகின்றார் அக்கரைப்பற்றைச் சேர்ந்த இம் முஸ்லிம் பெண்மணி.**

“கடவுள் எங்கேயும் இருக்க முடியாது என்றுதான் தாயைப்படைத்தான்” என்பது முதுமொழி. ஆனால் நாகரீக வளர்ச்சியின் காரணமாக தெய்வமாக இருக்கவேண்டிய தாய்மார்களிலே சிலர் தற்போதெல்லாம் பேயாகப்போய் கொண்டிருக்கிறார்கள். பெற்ற குழந்தைக்குப் பால்கொடுத்தால் கூட எங்கே தங்கள் அழகு கெட்டுவிடுமோ இளமை மறைந்து விடுமோ என்றஞ்சி தம்போக்கிலேயே குழந்தைகளை விட்டுவிடுகிறார்கள். இப்படியாக விடப்பட்ட குழந்தைகள்தான் கேட்பாரற்ற நிலையிலே தங்கள் இஷ்டம்போல் நடக்கிறார்கள். சினிமாக்கொட்டகைகளுக்குக் கூட தன் தாய் தந்தையர்களை அவர்களே அழைத்துச் செல்கின்றனர்.

குழந்தைகள் ரோஜாமலர்கள். அவர்கள் பெற்றோர்களின் அன்பு இதயத்திலே நீங்கமுடியாத இடம் பெற்றுவிட்ட இன்ப மழலைகள். அவ்வின்ப மழலைகளைப் போற்றி வளர்க்க வேண்டிய கடமை பெற்றோர்களுடையதே. முக்கியமாகத் தாயின் தலையாயகடன்.

“தாயின் இதயந்தான் குழந்தையின்பள்ளி என்றார் பீர்ச்சர். “நல்லெண்ணக் குவியல்களையும்-நற்புகளின் சாயல்களையும் குழந்தைகளுக்கு நாட்டின் எதிர்காலச் செல்வங்களுக்கு-தொட்டிலிலிருந்தே பழக்கிவையுங்கள்- அவர்களைத் துன்புறுத்தாமல் நயம்பட எதனையும் எடுத்துரைத்து அவர்களின் தவறுதலைத் திருத்துங்கள்” என்றார் இங்கர்சால்.

எனவே அவர்களை நாம் வளர்க்கும் விதம் சரிதானா என்பதை நம்போன்ற தாய்மார்கள் சரிபார்த்துக் கொள்ளவேண்டும். “குழந்தையின் எதிர்காலம் தாய்மார்களின் அன்புக்கரங்களிலேதான் தஞ்சம் புகுந்து கிடக்கிறது,” என்றார் பெர்னாட் டுஷா. ஆனால் இன்றோ $3\frac{1}{2}$ வயதைத் தாண்டுமுன்பே சினிமாக் கொட்டகையையே தங்களின் பள்ளியாகவும் விளையாட்டிடங்களாகவும் ஆக்கிக்கொண்டனர் சிறுவர்கள். இன்றையக் கால வேகமும் அதைத்தான் குழந்தைகளுக்கு இலகுவாகக் கற்றுக் கொடுக்கின்றது. எனவே இந்த நேரத்தில்தான் நாம் மிகவும் ஜாக்கிரதையாக

இருக்கவேண்டும். எதையும் எளிதில் ஈர்த்துக்கொள்ளும் சக்திபடைத்த அவர்களுக்கு நல்லதைச் சொல்லிக் கொடுத்து; அவர்களை ஒழுக்க முள்ள பிரஜைகளாக ஆக்கு வது நமது நீங்காத கடமை யாகிறது. குழந்தைகளைச் சினி மாவிற்கு அழைத்துச் செல்கின் ரோம். அதிலேவரும் திருட்டுக் காட்சிகள்; பொய்சொல்லித் தப்பித்துக்கொள்ளும் சம்பவங் கள், வஞ்சிக்கவும் ஏமாற்றவும் முயலும் சம்பவங்கள், இளமை யிலேயே காதல்புரியும் சம்ப வங்கள் ஆகியவைகளை அவர் கள் பார்க்கும்போது அவர்கள் மனம் எப்படி இருக்கும் என் பதை நாம் ஒரு கணம் எண் ணிப்பார்க்கவேண்டும். இளம் குழந்தைகள் இதைக்கற்பதால் அவர்கள் ஒழுக்கம் என்ன ஆகும்? அவர்களின் கடமை உணர்ச்சியும் நேர்மையுள்ளமும் என்ன ஆகும்? இதிலிருந்து தான் திருடர்கள்-வஞ்சகர்கள் காமுகர்கள் போன்றோர்கள் ஒரு சமுதாயத்திலே தோன்றுகிறார் கள். எனவேதான் பெற்றோர்கள் ஆரம்ப முதலே குழந்தை களுக்கு நல்லபாடங்களை பக் தியுள்ளவைகளை கடமை உணர்ச்சி உள்ள விடயங்களைக் காட்ட முயற்சிசெய்யவேண் டும். படமுதலாளிகளும் பொறுப்புணர்ச்சியுடன் - நம் குழந்தைகள் நல்லவைகளைக் கொண்டு-நற்குண சீலராக வாழ்வார்; சிந்தனைச் செல்வங் களாக மாறுவர்.

குடிசையில் வாழும் சிறார் களை எளிதாக ஏளனம் செய்து விடுவோரும் நம்மில் அனேகரு ளர். ஆனால் அந்தக் குடிசை யில் வாழும் பெற்றோரும், அவர்களது நிறையுழைப்புத் தோள்களால் விளைந்த நெல் லும், கரும்பும், நெற்றி வியர் வை நிலத்தில் விழ விளைந்த பயிர்வகைகளும் இல்லை என் றால் அச்சிறுவர்களில் வாழ்க் கையே வேறுதிசை நோக்கி இருக்கும். எனவே குடிசையில் வாழ்ந்தாலென்ன? கோபுர வாசியாக இருந்தாலென்ன? குழந்தைச் செல்வங்களை உரிய முறைப்படி போற்றிவளர்க்க வேண்டியது தானே பெற்றோர் களின் கடமை! அதற்கான வழி வகைகளைப் பொறுப்புணர்ச்சி யுடன் பெற்றோர்கள் மேற் கொள்ளவேண்டும். "அறிவுள்ள ஒருதாய் நூறு ஆசிரியர்களுச் சமம்" என்பதை ஒவ்வொரு தாய்மாரும் மனதில் கொண்டு தங்கள் பணியை மேற் கொள்ள வேண்டும். ஆகவேதான் முத லில் சிறுவர்களைச் சினிமாக் கொட்டகைகளுக்கு அழைத்துச் செல்லக்கூடாது என்கிறேன். சினிமாவைத் தவிர்த்து நடந்து கொள்ளுதலே நம் குழந்தை களுக்கு நாம்செய்யும் பெரும் பணிகளில் ஒன்று.

# கண்ணம்மா -- பொன்னம்மா

கண்ணம்மா: உன்னை நான் கன நாளாய்க் கேக்க வேணு மெண்டு நினைச்சனுன். இண்டைக்குத்தான் வாய் விட்டுக் கேக்கிறன். குறை நினையாதை பொன்னம்மா, உன்ரை புருஷனுக்குச் சம்பளம் குறைவு. ஆனுல் நீ நல்ல சீலை கட்டுருய், நகை நட்டெல்லாம் போடுருய்...

பொன்னம்மா: நானும் உன்னை ஒண்டு கேக்க நினைச்சனுன். 350 ரூபாவரை உன்ரை 'அவரு'க்குக் கிடைக்குது. ஆனுல் உன்னைப் பாத்தா பிச்சைக்காரன் பெண்சாதி மாதிரித் தான் கிடக்குது. உன்னை நான் பகிடி பண்ணேல்லை. கொஞ்சக் காசெண்டாலும் உன்னுலை மிச்சம் பிடிக்க முடியாதோ?

கண்ணம்மா: என்னத்தைப் பிடிக்கிறது. சம்பளம் வந்த அடுத்த நாளே கையிலை காசு கிடவாது.

பொன்னம்மா: அப்பிடியெண்டா, நான் ஒரு வழி சொல்லிறன், கேக்கிறியோ?

கண்ணம்மா: எங்கையாவது கடன் கிடன் எடுக்கிற வழியோ?

பொன்னம்மா: கடனுமில்லை ஒண்டுமில்லை. மாதம் மாதம் பத்து ரூவா எடுத்து **இலங்கா நிதி லிமிற்றெட்** கொம்பனியிலை கட்டு. ஆறு மாதத்துக்குப் பிறகு கொம்பனிக்காறர் போடுற லொத்தரிலை உன்ரை பேரையும் சேர்ப்பினம். உனக்கு அதிட்டமிருந்தால், நீ கட்டின **அறுவது ரூவாய்க்குத் தொண்ணூறு ரூவா** தருவினம்.

கண்ணம்மா: லொத்தர் எனக்கு விழாட்டால்?

பொன்னம்மா: பத்துப் பத்து ரூவாயாத் தொடர்ந்து கட்ட வேணும். எந்த மாதத்திலை லொத்தர் விழுகுதோ அதுவரை நீ கட்டின காசைப்போலை ஒண்டரை மடங்கு காசு உனக்கு வரும்.

கண்ணம்மா: என்ரை அதிட்டம்தானே உனக்குத் தெரியும். ஒருக்காலும் லொத்தர் விழாட்டா என்னசெய்யிறது?

பொன்னம்மா: நூறு மாசத்துக்குக் கட்டவேணும். ஆயிரம் ரூவாயெல்லே கட்டியிருப்பாய்? ஆனுல் உனக்கு ஆயிரத்து மூன்னூறு ரூவா திருப்பித் தருவினம்.

கண்ணம்மா: கட்டாயம் தருவினமோ?

பொன்னம்மா: கட்டாயம். தற்செயலாக, இடையிலே காசு கட்ட முடியாட்டால், நீ உடனே கொம்பனிக்கு எழுதலாம். அதுவரை நீ கட்டிய காசையும் அதற்குரிய வட்டி யையும் சேர்த்து உனக்குத் தருவினம்.

கண்ணம்மா: அப்ப எந்த விதத்திலே பாத்தாலும், இதிலே காசு கட்டிறதிலே நட்டமில்லை. அது சரி இன்னு மொண்டு கேக்கிறன், கோவிக்காதை. கொம்பனி முறியாதோ?

பொன்னம்மா: எத்தினையோ லட்சம் ரூபா பிணையாகக் காட்டி, கவுண்மேந்திலே கொம்பனி பதியப்பட்டிருக்குது. தற்செயலாய், கொம்பனி முறிஞ்சாலும், கவுண்மேந்து காசைக் கொடுக்கும்.

கண்ணம்மா: அப்ப நீ இதில்லை சேரேல்லையோ?


பொன்னம்மா: நான் சேர்ந்து இரண்டு வரியமாச்சுது. 240 ரூவா கட்டினனுன். போன மாசம் எனக்கு லொத்தர் விழுந்துது. 360 ரூவா தந்தினம். இப்ப புதிசாக ஒரு பத்து ரூவா கட்டிக்கொண்டு வாறன்.

கண்ணம்மா: உன்ரை பேரைப்போலை நீ பொன்னம்மாவாக வாழுற இரகசியம் இப்பவெல்லோ எனக்குத் தெரிஞ்சுது. சரி, அந்தக் கொம்பனியின்ரை விலாசம் என்ன?

பொன்னம்மா: இலங்கா நிதி லிமிற்றெட், திருநெல்வேலி யாழ்ப்பாணம். பட்டணத்திலே, காங்கேசன்துறை றேட்டிலே, 284ம் நம்பரிலே ஒரு கிளையும் இருக்குது.

கண்ணம்மா: இந்த நல்ல வழியைக் காட்டிய உனக்கு மெத்தப் பெரிய உபகாரம். நான் இப்பவே போய் காசைக் கட்டப் போறன்.

Advt




உங்கள் நினைவிற்கு:

மட்டக்களப்பு பாரதி கல்லூரியின் ஆசிரியர் சண்முகம் பீ. ஏ. சாவித்திரி என்ற சக ஆசிரியையுடன் நெருங்கிப் பழகுகின்றான். அவர்கள் தொடர்பில் யாரோ களங்கம் கற்பித்துவிடுகின்றார்கள் என்ற செய்தியை ஆசிரியர் பத்மநாதன் மூலம் அறிந்ததும், பயந்து கல்லூரியை விட்டுப் புறப்பட்டுக் கொழும்பை அடைகின்றான். பரமேஸ்வரன்—ரூபமதி ஆகியோரின் தொடர்பு அவனைப் புதிய மனிதனாக்குகின்றது. மட்டக்களப்பிற்குத் திரும்பிச்சென்று சாவித்திரியுடன் மனம் விட்டுப் பேசுகின்றான். ஊரில் தந்தை இறந்ததால் ஏற்பட்ட கடன் பிரச்சினையையும் கல்யாணப் பிரச்சினையையும், தன் சொந்த வீட்டை விற்பதன் மூலம் தீர்க்கின்றான். அவனுடைய கவலை தீர்க்கும் மருந்தாகிய சாவித்திரியுடன் மனம் கலந்து பேசிக்கொண்டிருந்தபோது, யாரோ வெளிக்கதவில் தட்டிவிட்டு, இருளில் மறைகின்றனர். அடுத்தநாள், சாவித்திரி மாசுடையவள் என்ற செய்தியைத் தாங்கிய அநாமதேயக் கடிதம் ஒன்று சண்முகத்திற்கு கிடைக்கின்றது. அந்தச் செய்தியை ருசுப்படுத்தும் வகையில் சாவித்திரி பேசியது, சண்முகத்தின் ஆத்திரத்தை தூண்டுகிறது, அவளை ஏசிவிட்டு, அங்கிருந்தே ஓடுகிறான். கொழும்பில் ஒரு தனியறையில் இருந்து நடந்த நிகழ்ச்சிகளைக் கதையாக எழுதுகின்றான். கதைவெளியான பத்திரிகையின் ஆசிரியர் நேரில் வந்து அவனைப் பாராட்டுகின்றார். பத்திரிகையில் தொடர்ந்து எழுத ஒப்புக்கொள்கின்றான். பரமேஸ்வரனுடைய கண்ணில் கூடப்படாது ஒதுங்கி வாழ நினைத்த சண்முகத்திற்குத் தன் நண்பனின் திருமண விஷயம் தெரியவருகின்றது பரம்-ரூபா கல்யாணத்தில் கலந்து கொள்கின்றான். தான் பார்வதியைக் கல்யாணம் செய்யப்போவதாக கூறி நண்பனையும் மனைவியையும் அதிர்ச்சியடையச் செய்கின்றான். இனி, மேலே படியுங்கள்.

*   *   *

## 13 உனக்காக, கண்ணே!

சண்முகத்தின் அறைக்கு வெளியே, அவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள் பரமேஸ்வரனும் ரூபமதியும். பஸ்ஸிலிருந்து இறங்கி, மனதை எங்கோ மேய விட்டு, தள்ளாடியபடி நடந்து சென்ற சண்முகத்திற்கு ஆச்சரியமாகவும் பயமாகவும் இருந்தது.

'முதலிரவை முழுமனத்துடன் எதிர்பார்த்து நிற்கும் புதுமணத் தம்பதிகள் எதற்காக இங்கு வந்து நிற்கின்றார்கள்? இன்பமே நினைவாய், இன்பமே கனவாய், இன்பமே கற்பனையாய்க் கொண்டு இன்ப ஏணியின் எழில் படிகளில் அழகு நடை நடந்து உயரே, உயரே, உயரே சென்று இன்பமே உருவான உலகத்தை அடைய வேண்டியவர்கள் துன்பமே உருவான, இருளே நிறைவான இந்த இடத்திற்கு ஏன் வந்தார்கள்?"

ஆச்சரியம் அவனை உந்தித் தள்ளியது.

'என் புதிய முடிவைப் பற்றிக் கேட்டு குடையப் போகின்றார்கள். சாவித்திரியைக் கைவிட்டதற்காக ஏசப்போகின்றார்கள். நயவஞ்சகன், நம்பிக்கைத்துரோகி, நரி வேடம் போடும் நாசகாரன் என்றெல்லாம் பட்டம் சூட்டித் திட்டப்போகின்றார் கள்'.

பயம் அவனைப் பின்னுக்கிழுத் தது.

சண்முகத்தின் தடுமாற்றத்தை யும் தயக்கத்தையும் கவனித்த பர மேஸ்வரன், தானாகவே முன் சென்று அவனைக் கையில் பிடித்து அழைத் துச் சென்றான். தன் மன நிலையை வெளியே காட்டாது சமாளித்துக் கொண்டு நண்பனுடன் சென்று அறையைத் திறந்து தம்பதிகளை உள் ளே உட்கார வைத்தான் சண்முகம்.

சாவித்திரியைப்பற்றி ஏதாவது கேட்பார்கள், உடனே அவளைப் பற் றிய அந்த இழிவான செய்தியைக் கூறி, தன் எரிச்சலைத் தீர்த்துக் கொள்ளலாம் என சண்முகம் எதிர் பார்த்தான். அது நடக்கவில்லை.

அந்த அசாதாரண வேளையில், அத்தனை அவசரமாக அவனுடைய அறைக்கு வந்ததைப் பற்றிச் சண் முகம் கேட்பான், அப்போது, சாவித் திரியை மறந்ததைப் பற்றிக் கேட்டு, அவனுடைய மனச்சாட்சியையே அவ னுக்கு எதிராகத் தூண்டிவிடலாம் என எதிர்பார்த்தார்கள் பரமேஸ் வரனும் ரூபாவும். அதுவும் நடக்க வில்லை.

மணிக்கூட்டின் கம்பிகள் மட் டும் மெதுவாக நடைபோட்டுக் கொண்டிருந்தன.

யாருமே வாய் திறக்கவில்லை. நீண்ட நேரம் அந்த அறையில் நிலவியதற்குப்பெயர்—அமைதி. அது அங்கிருந்தோரைச் சித்திரவதை செய்து நிமிடங்களை விழுங்கிக் கொண்டிருந்தது.

திடீரென, மின் வெட்டுப்போல், சண்முகத்தின் மனதில் ஓர் எண் ணம் தோன்றியது: 'என்னிடம் எத் தனை அன்பு வைத்திருந்தால், தங் களுக்குள்ள அத்தனை வேலைகளை யும் அப்படியே போட்டுவிட்டு இங்கு ஓடிவந்திருப்பார்கள்? அவர் களை உள்ளன்புடன் வரவேற்று உரிய முறையில் உபசரிப்பது என் கடமையல்லவா?'

இந்த நினைவு வந்ததும், அரு கிலிருந்த ஹோட்டலை நோக்கி அவன் கால்கள் தாமாகவே சென்றன. அங் கிருந்து இனிமையான சிற்றுண்டி யும், நறுமணம் மிகுந்த காப்பியும் வாங்கிக்கொண்டு வந்தான்.

"நானே நேரில் வந்து உங் களை வரவழைத்து, பெரியதொரு விருந்தளிக்கத் திட்டமிட்டிருந்தேன். அதற்குள் திடீரென்று வந்து என் னைத் திணறடித்து விட்டீர்களே" என்று உரிமையுடன் பேசி, அவர் களுக்கு முன்னே பலகாரத்தட்டை வைத்தான். அவனுடைய உள் ளத்தை ஊடுருவுவதுபோல் ஊன் றிப் பார்த்த பரமேஸ்வரன் புன் னகையொன்றை வலிந்து வரவ ழைத்துக்கொண்டு சொன்னான்,

"பெரிய விருந்தெல்லாவற்றை யும் பார்வதி வந்ததன் பின்பு வைத்துக்கொள்ளலாம். இப்போ தைக்கு இதுவே போதும்!"

இடியையும் மின்னலையும் எதிர் பார்த்துத் தன்னைத் தயாராக்கிக் கொண்டிருந்த சண்முகம் இப்போது இந்த இளந் தென்றலிலேயே திண றினான்.

வேண்டுமென்றேதான் அவர்கள் அப்படிப் பேசுகின்றார்களா? அவன் சாவித்திரியை மறந்துவிட்டதையும், பார்வதியை மணக்க நினைத்ததையும் சர்வ சாதாரணமான ஒரு நிகழ்ச்சியாகத்தான் அவர்கள் கருதுகின்றார்களா?

சண்முகத்தினால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. சாவித்திரியைப்பற்றி தன் முடிவை எப்படியாவது வெளியிட்டு அதற்கான காரணத்தையும் விரிவாகச் சொல்ல விரும்பினான்.

"பரம்! சாவித்திரியைப் பற்றி நீ எதுவுமே கேட்காதது என்னைச் சித்திரவதை செய்கின்றதப்பா. தயவு செய்து நான் சொல்வதைக் கேள். என் மனம் கலங்கிய போதெல்லாம் எனக்கு ஆறுதல் கூறி வழிகாட்டியாக இருந்த உன்னைத்தான் நான் இப்போதும் நம்பியிருக்கிறேன்."

பரமேஸ்வரன் இடைமாறித்தான், "நீயாக ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரும்போது நான் அதில் வீணாகத் தலையிடமாட்டேன். சாவித்திரியைப் பற்றிக் கவலைப்படவேண்டியவன் நீ. இப்பொழுது நீயே அவளை மறந்ததன்பின், எனக்கேன் அக்கறை?"

இவை பரமேஸ்வரனின் கேலி வார்த்தைகளா, அல்லது உண்மையான சொற்களா என்பதைத் தீர்மானிப்பது கஷ்டமாக இருந்தது சண்முகத்திற்கு. மௌனமாக இருந்த ரூபமதியைப் பார்த்தான். அவளுடைய கண்கள் கலங்கியிருந்தன.

"காதலிலே தோல்வியடைந்தவர்கள், உடனேயே வேறு கல்யாணம் செய்து கொண்டால், வாழ்க்கை மீண்டும் இனிக்குமாம். இந்த வழியைத்தான் நானும் பின்பற்றப் போகின்றேன்".

"உனக்கு என் வாழ்த்துக்கள்."

சண்முகத்திற்குச் 'சுருக்'கென்யது. ஒன்றுமே தெரியாத அப்பாவி போன்று நடித்து, அவனைக் குத்தியெடுப்பதென்றே கங்கணம் கட்டிக்கொண்டுதான் பரமேஸ்வரன் வந்திருக்கின்றானா?

"உன்னைத்தவிர வேறெவருக்கும் என் உள்ளந்தரங்கங்களை நான் கூறியதில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த என் வாழ்க்கை ஏட்டின் ஒவ்வொரு பக்கமும் உனக்கு மனப்பாடம். என்னைப் பற்றி எல்லாம் அறிந்த நீயே இப்பொழுது வாட்டுகின்றாய்; உன் மனைவியின் முன்னால் நான் வேற்று மனிதன் என்பதைக் காட்டுகின்றாய்..." சண்முகத்தின் பேச்சை, அவன் கண்களிலிருந்து 'பொல பொல' என்று உதிர்ந்த கண்ணீர் நிறுத்தியது. துவாய்த் துண்டொன்றினால் கண்களைத் துடைத்து, முகத்தை மூடியபடி அவன் தேம்பினான்.

பரமேஸ்வரனின் அன்புக் கரம் அவனை அணைத்தது.

"நீ ஆண்மகன் என்பதை அடிக்கடி மறந்து விடுகின்றாய் சண்முகம்! ஒரு பெண்ணை நினைத்து வேறொரு பெண்ணின் முன் இப்படி அழுவது உனக்கு வெட்கமாயில்லையா?"

நண்பர்களைத் தனியே விட்டுவிட்டு ரூபமதி எழுந்து வெளியே சென்றாள்.

பரமேஸ்வரன் தொடர்ந்து பேசினான்' "உன் புதிய முடிவை உன் அம்மாவிற்கு எழுதிவிட்டாயா? வெட்கமாயிருந்தால் சொல், நானே எழுதிவிடுகின்றேன். உன் அம்மா எவ்வளவு சந்தோஷப்படுவாள் தெரியுமா?"

உண்மைதான். பார்வதியைக் கல்யாணம் செய்யப் போகின்றேன்

என்று சண்முகம் முன்பு கூறிய போது, சாவித்திரியின்மீது பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்ற உணர்ச் சியே அவனிடம் நிறைந்திருந்தது. பரமேஸ்வரனின் உற்சாகமூட்டும் வார்த்தைக்குப் பிறகுதான் அவன் தாயைப் பற்றி யோசித்தான். பார் வதியை அவன் கல்யாணம் செய் தல், முன்பு கை மாறிய அவர்கள் வீடு மீண்டும் அவர்களுக்கே கிடைத் துவிடும். சமுதாயத்தில் அவர்களின் அந்தஸ்து இன்னும் ஒரு படி உய ரும். தாயின் மகிழ்ச்சிக்குக் கேட் பானேன்!

'பரமேஸ்வரன் கொடுத்த உற் சாகமும் அளித்த உறுதியும் உண்மையானவைதாஞ?' சண் முகம் தன் நண்பனை நிமிர்ந்து பார்த்தான்; ஏதோ ஒன்றைத் தேடு வதுபோல், வைத்த கண் வாங்காது பார்த்தான்.

''நானும் ரூபாவும் தம்பதி களானவுடன் எடுத்துக்கொண்ட தீர்மானம் இதுதான் :" எழுத்தாளர் சம்புவையும் திருமணக் கோலத்தில் பார்க்க வேண்டும். அதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்வதற்காகத் தான் இருவருமாக இங்கே ஓடிவந் தோம். நீ யாரையாவது விவாகம் செய்யலாம். ஆனல் அதை விரை விலேயே செய்துமுடிக்க வேண்டும்."

''பரம்! இரண்டொரு நாள் தவணை கொடு. என் முடிவைத் தெரிவிக்கின்றேன். அவசரப்பட்டு அம்மாவுக்கு எதையும் எழுதி விடாதே!"

''நல்ல காரியத்தைத் தள்ளிப் போடுவது நல்லதல்ல. உன் மனநிலை எனக்குத் தெரிந்துவிட்டது. இனி நான் வெறும் சணமுகத்தைச் சந் திக்கமாட்டேன். திருவாளர் சண் முகத்தையும் திருமதி சண்முகத்தை யும் ஒன்ருகவே சந்திப்பேன்."

பரமேஸ்வரன் எழுந்து வெளியே வந்தான். சண்முகமும் வந்து இருவரையும் அன்புடன் அனுப்பிவைத்தான்.

சண்முகத்தின் உளப்பாங்கை நன்கு அறிந்துகொண்டு, அதற் கேற்றபடி பரமேஸ்வரன் கையாண்ட புதிய யுக்தி இப்பொழுது தன் பல னைக் கொடுக்க ஆரம்பித்தது,

இரவு பகலாகியது. சண்மு கம் கண்ணேடு கண் மூடவில்லை. பரமேஸ்வரனின் உறுதியான பேச்சு அவன் சிந்தனையைக் கிளறிவிட் டது.

சாவித்திரியைப்பற்றிய அந்தச் செய்தியைக் கேட்ட பின்பு ஏற்பட்ட வீம்பு உணர்ச்சியினல், பார்வதியின் பெயரைச் சொன்னனே தவிர, அவ ளைக் கல்யாணம் செய்வதைப்பற்றி அவன் சிந்திக்கவேயில்லை. பார்வதி என்ற சொல், சாவித்திரியின் மீது தனக்குள்ள அளவுகடந்த வெறுப் பையும் ஆத்திரத்தையும் பரமேஸ் வரனுக்கு எடுத்துக் காட்டும் என்று தான் அவன் நினைத்தான். பரமேஸ் வரனை இப்படி உடனடி நடவடிக்கை எடுக்கத் தூண்டும் என்று கண் டானு?

பரமேஸ்வரன் 'குஷி' பேர்வழி தான். எப்போதும் எதையாவது அலட்டிக் கொண்டிருப்பவன்தான். ஆனல் அவன் தீர்க்கமாக எதையா வது சொன்னனல், அந்த நிறை வேற்றியே தீருவான். இது சண்மு கத்திற்குத் தெரியாமலிருக்க நியாய மில்லை. உரலுக்குள் தலையைக் கொடுத்தபின் உலக்கைக்குப் பயப் பட்டு முடியுமா?

'நானே வலிந்து சென்று கல் யாணத்தில் கலந்துகொண்டு என்னை யல்லவா காட்டிக்கொடுத்து விட் டேன். சேர்ந்தாற்போல் இரண்டு

நாட்களுக்காவது. என்னை நிம்மதியாக இருக்க விடமாட்டான் போல் இருக்கின்றதே! ரூபமதியைக் கல்யாணம் செய்தபடியால், கல்யாணம் என்ற சொல்லே அவனுக்கு இனிக்கின்றது. அதே மன நிலையும், உணர்ச்சியுமா எனக்கும் ஏற்படுகின்றது? இல்லையே!

சண்முகம் மனம் புளுங்கினுன்.

பரமேஸ்வரன் கடிதம் எழுதினுலே போதும், சண்முகம்—பார்வதியின் விவாகம் நிறைவேறியதற்குச் சரி. சண்முகத்தின் தாய்க்கு, பரமேஸ்வரனின் வாக்கு தேவவாக்கு. அதை அவள் மீறவே மாட்டாள்.

இந்த இக்கட்டான நிலையிலிருந்து மீள்வதற்கு வழி என்ன?' சண்முகம் பலவற்றையும் யோசித்துப் பார்த்தான்.

கடைசியில் ஒரே ஒரு வழிதான் நல்லதாகப்பட்டது. பரமேஸ்வரனிடம் கெஞ்சி மன்ருடுவதிலும் பார்க்க, நேரே யாழ்ப்பாணத்திற்கே சென்றுவிடவேண்டும். தபால் நிலையத்திற்குச் சென்று தாயின் முகவரிக்கு வரும் கடிதத்தை வாங்கிக் கிழித்துவிட்டால், பிரச்சினை தீர்ந்துவிடும்.

யாழ்ப்பாணமும் சுற்றுப்புறக் கிராமங்களும் இப்பொழுது எவ்வளவோ முன்னேறிவிட்டன. பெரிய பெரிய கடைகளும், விசாலமான மாடிவீடுகளும் வீதியின் இருமருங்கிலும் அமைந்து குடாநாட்டிற்குத் தனி அழகைக் கொடுத்தன. ஆனுல் அவனுடைய பூர்வீக கிராமமாகிய கொல்லங்கலட்டி, அன்றுகண்ட மேனிக்கு அழியாததாக இன்னும் இருக்கின்றது; அதே ஓட்டைக் குடிசைகள்! உடைந்த மதவுகள் பள்ளமும் திட்டியுமான வீதிகள்! கிராமத்திற்குச் செல்லும் வழியில் இருந்த மஹாஜனக் கல்லூரி மட்டும் வானளாவ வளர்ந்திருந்தது. கம்பீரமான அதன் தோற்றம் அவனிடம் உயர்ந்த எண்ணங்களை உண்டாக்கியது. "கட்டடம் வளர்வதைப் போல் கல்வியும் வளர வேண்டும். மாணவர்களின் உள்ளத்தை உயரப் பறக்கச்செய்தல் வேண்டும்!'

சண்முகம் கிராமத்திற்கு வந்து, விளையாட்டாக, நான்கு நாட்கள் சென்றுவிட்டன. விடிந்ததும் விடியாததுமாக அவன், தாயிடமும் சொல்லிக்கொள்ளாமலே, தபால் நிலையத்திற்குச் சென்றுவிடுவான். அவன் நினைத்ததைப் போன்று தாயின் தபாலை அவனுல் கிழித்தெறிய முடியவில்லை. ஏனெனில் பரமேஸ்வரன் கடிதமே எழுதவில்லை.

சோகத்தின் சேர்ப்பிடமாகிய அவன் உள்ளத்தில், 'தபால் வரவில்லை, என்றவுடன் சிறிது நேரம் சந்தோஷம் நிலவும். அவ்வளவுதான் மீண்டும் சோக இருள் கப்பிவிடும். துன்பச் சுமை அவன் தலையை அழுத்தும்; நெஞ்சைப்பிழியும்.

பற்றற்ற துறவியைப் போல், முற்றும் துறந்து முனிவனைப்போல் எவ்வித உணர்ச்சிக்கும் ஆளாகாது வாழ முயன்ருன். முடியவில்லை. உடலும் உள்ளமும் இருக்கும்வரை இவ்வுலகத்து ஆசாபாசங்களுக்கெல்லாம் அவன் ஆளாக வேண்டியவன்தான். உணர்ச்சிச் சுழியில் அகப்பட்டுத் திணற வேண்டியவன்தான்.

தாயின் நிலை பரிதாபகாக இருந்தது. கந்தசாமி ஆசிரியரும் குடும்பத்தினரும் எவ்வித வேறுபாடுமின்றி அவளுடன் நடந்தார்கள். வேண்டிய பணிவிடைகளை மனம் கோணுது, முகம் கோணுது செய்தார்கள். இருந்தும், முள் மிதியடியில் நடக்கும் உணர்ச்சிதான் அவளுக்கு ஏற்பட்டது. என்ன இருந்தாலும் அவர்கள் வேற்று மனுஷர் தானே! சொந்த வீட்டில் சொந்த மகனுடன் சுதந்திரமாக வாழ்வதைப் போல் ஆகுமா?

இதை நினைத்தோ என்னவோ, அடிக்கடி தனிமையில் இருந்து மௌனக் கண்ணீர் வடிப்பாள். ஊருக்கு வந்த ஒரு சில நாட்களுக்குள் தாயின் தவிப்பை அறிந்து கொண்டான் சண்முகம்.

மருந்து அவன் கையில்தான் இருந்தது. அதை உபயோகித்தால் தாயின் தவிப்பு நிச்சயம் நீங்கும். ஆனால் அது நிரந்தர மகிழ்ச்சியையும் நீடித்த சமாதானத்தையும் ஏற்படுத்துமா?

தாயின் நன்மைக்காக, அவன் தன் நலன்கள் அனைத்தையும் தியாகம் செய்து பார்வதியை மனைவியாக்கலாம். ஆனால் மனமொத்த தம்பதிகளாக வாழமுடியாது. வாழ்நாள் முழுவதும் அவன் சித்திரவதைப்பட வேண்டும். வீடு கிடைத்துவிட்டது என்பதற்காக, மகனுடைய இந்த நரக வாழ்வைச் சகித்துக்கொண்டிருக்க மாட்டாளே அவள்! ஆகவே வாழ்க்கை மீண்டும் போர்க்களமாகும். மின்னுமல் முழங்காமல் மழை பொழியும். அந்தத் துன்பப் பெருவெள்ளம், அவனை மட்டுமல்ல, அவனுடைய அன்புத் தாயையே அடித்துக்கொண்டு போனால்......?

அன்றுமாலை நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சி வேறு சண்முகத்தின் இந்தச் சந்தேகத்தை அதிகரித்தது.

சற்று உலாவி வரலாமென்று, வயற்கரைக்குச் சென்றான் சண்முகம். வயற்கரையிலிருந்த ஏழைக் குடியானவரின் வீடொன்றில் யாரோ அலறும் சத்தம் கேட்டது, எட்டிப் பார்த்தான் சண்முகம். குத்தகைப் பணத்தைக் கொடுக்கவில்லை என்பதற்காக பார்வதியின் தலைமையில், பரமசிவத்தின் ஏவலாட்கள் அக்குடியானவனின் முதுகைப் பதம் பார்த்துக் கொண்டிருந்தனர். அந்த அக்கிரமத்தைச் சகிக்காது, கிழவனுக்கு உதவி செய்யச் சென்ற சண்முகத்தை பார்வதியின் நாலுகால் நாகலிங்கம் "விரட்டியடித்து விட்டது.

மனிதாபிமானமற்ற இவளுடன் வாழ்க்கை முழுவதும் மாரடிக்க முடியுமா?

திரும்பி வீட்டிற்கு வந்தான். பால் நிலவில், ஆசிரியர் வீட்டு முற்றத்தில் நின்ற மல்லிகைச் செடியிலிருந்த பூக்கள் பளிச்சென்று மின்னின, அவற்றிலிருந்து பிறந்த நறுமணம், அவனை எங்கோ சுமந்து சென்றது—

அவனுக்காகவே பிறந்த சாவித்திரியிடம் அவன் செல்கின்றான். மல்லிகைக் காட்டைத் தலையில் சுமந்து கொண்டு, அவள் அவனுக்காகச் சிரிக்கின்றாள்; அவனுக்காக அழுகின்றாள்; அவனுக்காக வாழ்கின்றாள்; மலரைச்சுற்றும் வண்டைப் போல், அவனும் அவளையே சுற்றிச் சுற்றி வருகின்றான். அவளுடைய பின்னல் சடையைக் கையால் இழுத்து, ரோஜாக்கன்னத்தில் தன் முகத்தைப் பதிக்கின்றான்......

விடிந்ததும் அவன் முன்பு இருந்த பிரச்சினை மீண்டும் கிளை விட்டுப் படர்ந்து. தனக்காக எத்தனையோ தியாகங்கள் செய்த தாய்க்கு, தன்னை அடித்தளமாக வைத்துக்கொண்டு எத்தனையோ கற்பனைக் கோட்டைகளை எழுப்பிய தாய்க்கு, ஏதாவது உதவி செய்ய வேண்டுமானல், அதை விரைவிலேயே செய்துவிடவேண்டும் என்று அவனுடைய உள்ளுணர்வு கூறியது. வீட்டைத்தான் மீட்டுக் கொடுக்காவிட்டாலும், மகன் நல்ல மனச் சந்தோஷத்துடன் வாழ்கின்றான் என்பதை உணரச்செய்தால், அதைவிட அவளுக்கு நிம்மதியளிக்கக் கூடிய செயல் வேறெதுவும் இருக்க முடியாதே!

சண்முகம் இத்தனை காலமும்

தன் அனுபவத்திலேயே உணர்ந்து விட்டான். விரட்டி விரட்டி அடித்தாலும், கல்யாணம் என்றவுடனே அவனுக்குச் சாவித்திரியின் நினைவு தான் வந்தது. வலிந்து வலிந்து இழுத்தாலும், வேறெந்தப் பெண்ணையும் தன் நினைவில் சிக்க வைக்க அவனால் முடியவில்லை,

ஏதோ ஓர் அபூர்வ சக்தி தன்னையும் சாவித்திரியையும் பிணைத்து வைப்பதை உணர்ந்தான். முதற் தடவை அவன் மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கு ஓடியபோது, பரமேஸ்வரன் பேச்சு வாக்கில் அவனைப்பற்றிக்கூறியதும் அவன் நினைவில் வந்தன: சண்முகம் ! நீ நல்லவன். ஆனால் உணர்ச்சி வசப்படுபவன். உணர்ச்சிக்கு அடிமைப்படுபவர்களால் உலகில் உருப்படியாக எதையும் சாதித்து விடமுடியாது. உன்னுடைய அவசர முடிவும், சஞ்சல மனோபாவமும், உன் நல்ல பெயரைக் கெடுக்காதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்."

கை தேர்ந்த டாக்டர் ஒருவர், முதற்பார்வையிலேயே நோயை அடையாளம் கண்டுபிடிப்பதுபோல் பரமேஸ்வரன் எவ்வளவு தெளிவாக, சுருக்கமாக, சரியாக அவனைப் பற்றிச் சொல்லிவிட்டான்!

சண்முகத்தின் அவசர முடிவுகள் அவனை எவ்வளவு தூரம் பாதித்துவிட்டன.

'முதற் தடவை வீண் பயத்தை வளர்த்துக் கொண்டு மட்டக்களப்பை விட்டே ஓடினேன். அப்போது நான் சேய்த முடிவு தவறு என்பதை அறிந்ததன் பிறகும், என்னால் ஏன் சரியாக நடந்து கொள்ள முடியவில்லை? நண்பனாக நடித்த பத்மநாதன் நயவஞ்சகனாகமாறிஅனாமதேயக் கடிதத்தை எழுதியதை நன்றாகஅறிந்தபின்பும் நான் ஏன் அந்தச் செய்தியை நம்பினேன்? உள்ளங்கலந்து உயிர்கலந்து பழகிய சாவித்ரிதி என்னைக் கூப்பிட்டதையும் சட்டை செய்யாதுநான் ஏன் ஓடிவந்தேன்?'

'நான் ஆராயாது செய்த அவசர முடிவினால், என் வாழ்க்கையைப் பாழாக்கியதுடன் சாவித்திரியையும் சஞ்சலசத்தில் ஆழ்த்திவிட்டேனே! இதய நோயைத் தாங்கும் சக்தி எனக்கில்லாதபோது, அந்த மென்மலரால் அதைத் தாங்க முடியுமா?

சண்முகத்தின் கண்கள் நீரைக் கக்கின.

''சண்முகம் நீ அழு! உன் தவறினால் இவ்வளவு காலமும் சங்கடப்பட்டவர்களை நினைத்து அழு! உன் கண்ணீர் வெள்ளத்தில் உன்னைக் கழுவிக்கொள்! உன் குற்றங்களைக் கரைத்துக்கொள் இன்றுடன் புதிய சண்முகமாக, நெஞ்சுரம் கொண்ட சண்முகமாக மாறு!"

சண்முகத்தின் மனச்சாட்சி அவனை இடித்தது.

* * *

அன்றிரவு நெடுநேரம் வரை விழித்திருந்தான் சண்முகம். சுற்றுப்புறத்தில் எவ்வித சலனமுமின்றி அமைதி நிலவியது. உலகத்திலுள்ள சகல ஜீவராசிகளும் தம் தொழில் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஆழ்ந்த உறக்கத்தில் ஓய்வுகாணும் அந்த நேரத்திலே, தன் வாழ்க்கையையே பாதிக்கும் அந்த முக்கிய விஷயம் பற்றி ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்தான்.

தன் குலதெய்வமாகிய மாவைக் கந்தனை வணங்கிவிட்டு, தன்னைப்பெற்ற தெய்வமாகிய தாயை வணங்கிவிட்டு, தன் இதயக் கோவிலில் வீற்றிருந்த சாவித்திரியை வணங்கிவிட்டு, பேனாவைக் கையிலெடுத்தான். அருள் பொழியும் தெய்வத்தின் முன்னிலையில் இருந்து புனிதமான தொண்டைச் செய்வதைப்போன்ற உணர்ச்சியுடன், தன் வாழ்க்கையிலே முதன் முதலாக ஒரு காதற்கடிதம், முதன் முதலாக ரவிந்திந தாழிறர்

னதருமைச் சாவித்திரி!

காலம் கடந்து வரும் என் கா

த்தை நீ எப்படி வரவேற்பாயோ என்ற பயத்துடன்தான் நான் எழுதத் தொடங்குகிறேன். கிழித்தெறிய வேண்டும்போல் ஆத்திரம் ஏற்பட்டாலும், இதை முழுவதும் படித்து விட்டுக் கிழித்தெறிந்துவிடு.

என்னுடையவளே!

சில நாட்களுக்குமுன் என் கதையொன்றில் நான் எழுதிய வரிகள் நினைவிற்கு வருகின்றன: காதலிலே தோல்வியடைந்த காளையைத் தன் கணவனாக உவந்தேற்று, காலம் முழுவதும் அவனுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்குப் பெண் தயாராயுள்ளாள். இரண்டு தடவைக்கு மேல் தாரமிழந்தவர்களையே கணவரா வரித்து ஒழுகுவதற்கும் பெண்கள் தயங்குவதில்லை. இதே போல் காதலில் தோல்வியுற்ற கன்னியையோ கணவனை இழந்த பெண்ணையோ மனப்பூர்வமாகத் தன் மனைவியாக ஏற்பதற்கு ஏன் ஆண்கள் முன்வருவதாயில்லை என்று கதாநாயகி ஒருத்தி யாரையோ கேட்கின்ருள்.

இன்று என் மனச்சாட்சி என்னைக் கேட்கின்றது.

அன்புக்குரியவளே!

உன் பழைய வாழ்க்கையை அறிந்துகொள்ள நான் விரும்பவில்லை. அது எனக்குத் தெரியவே வேண்டாம். உன்னிடம் நான் மனதைப் பறித்துக்கொடுத்தபோது, நீ ஒழுக்கத்தில் சிறந்தவள் என்பதோ, அல்லது ஒழுக்கத்தில் குறைந்தவள் என்பதோ எனக்குத்தெரியாது. இருந்தும் நான் உன்னைக் காதலித்தேன்.

நீ அழகிதான். ஆனல் அந்த அழகு என்னை மயக்கவில்லை; உன் குரல் இனிய குரல்தான்; ஆனல் அந்த இனிமை என்னைக் கவர்ந்திழுக்கவில்லை. நீ பணக்காரிதான். ஆனல் அந்தப் பணம் என் கண்களைக் குருடாக்கவில்லை என்ருலும் நான் உன்னைக் காதலித்தேன். மனப்பூர்வமாகக் காதலித்தேன்.

உன்னை உனக்காகக் காதலித்தேன்; எனக்காகக் காதலித்தேன்.

நீ உண்மையிலேயே மாசுடையவளாக இருக்கலாம். நான் கவலைப்படப்போவதில்லை. எனக்கு நீதான் வேண்டும். என் மனைவியாக ஆவதற்கு உனக்குத்தான் உரிமையுண்டு.

அபாயம் நிறைந்த என் வாலிபப் பருவத்தில் உன் அன்புமட்டும் எனக்குக் கிடைத்திராவிட்டால், நான் தவருன வழிகளில் கெட்டொழிந்திருப்பேன். தூய்மை நிறைந்த உன் அன்பு வலைதான் என்னைக் காப்பாற்றியது; நல்லவனுக்கியது.

என் அன்புச் செல்வமே!

காரண காவியங்களையும், பலாபலன்களையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்துவிட்டுத்தான் இந்த முடிவிற்கு வந்திருக்கின்றேன். நான் உனக்கு வாழ்வழிக்கப்போகின்றேன் நீ எனக்கு வாழ்வளிப்பாயா?

நான் எண்ணுவதெல்லாம், ஏங்குவதெல்லாம், எழுதுவதெல்லாம் உனக்காக. நான் ஓடியதெல்லாம் உனக்காக, இன்று வாடுவதும் வாழ்வதும் உனக்காக. நான் காலமெல்லாம் காத்திருப்பது உனக்காக. என் உயிர் துடிப்பதெல்லாம் உனக்காக, கண்ணே, உனக்காக. என்னை உவந்தேற்று, உயிர்ப்பிச்சை அழிப்பாயா

உனக்காக வாடும்,

சண்முகம்.

அடுத்த நாள் காலையில் முதல் வேலையாக அந்தக் கடிதத்தைச் சாவித்திரியின் முகவரிக்கு அனுப்பினன். சாவித்திரியின் அன்புப் பதில் எப்பொழுது கிடைக்கும், எப்பொழுது மட்டக்களப்பிற்குப் பிரயாணமாகலாம் என்று ஏங்கிக்கொண்டிருந்த சண்முகத்திற்கு அன்று மத்தியானமே சாவித்திரியின் கடிதமொன்று கிடைத்தது.

பரபரப்புடன் கடிதத்தைப் பிரித்தான். ஒரு மாதத்திற்கு முன்

எழுதப்பட்ட அந்தக் கடிதம், எத் தனேயோ இடங்கட்குச் சுற்றுப் பிர யாணம் செய்துவிட்டு அன்றுதான் சண்முகத்திடம் வந்தது.

கடிதத்தைக் கண்களில் ஒற்றி விட்டு, ஆசையோடு படிக்க முற் பட்ட அவனேத் தந்திச் சேவகனின் குரல் தடுத்தது. மட்டக்களப்பிலி ருந்து டாக்ரர் மனேகரன் ஓர் அவ சரத் தந்தி அனுப்பியிருந்தான்!

(அடுத்த இதழில் நிறைவுறும்)

# அறிவு வளர்ச்சிப் போட்டி : இல : 3

சரியான விடையும பரிசுபெற்ருேர் விபரங்களும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 இ | ரா | 2 ம | ன் | | 3 கு |
| ஞ் | | 4 த | 5 ரு | ம | ம் |
| 6 சி | 7 வ | ம் | | 8 தீ | றி |
| | ஞ் | | | | |
| 9 பா | ச | ம் | | 10 தி | சை |
| 11 ஆ | ஊ | | 12 அ | ரு | ள் |

இங்கே குறிக்கப்பட்டுள்ள சரி யானவிடை எங்களிடம் ஒப் படைக்கப்பட்டிருந்தது.

For LANKA NITHI LTD.
Sgd. K. N. Eliyathamby
MANAGING DIRECTOR

மிகப் பெருந்தொகையான நேயர்கள் இப் போட்டியில் கலந்துகொண்ட போதிலும், எவருமே சரியானவிடை அனுப்ப வில்லே. ஒரு பிழையுடன் 32 பேர் அனுப்பியிருந்தார்கள். திரு வுளச்சீட்டின்படி கீழ்க்கண்ட இருவருக்கும் பரிசுகள் வழங்கப் படுகின்றன.

**முதலாம் பரிசு**

திரு. மு. வேலாயுதபிள்ளே
அரசாங்க நில அளவையாளர்,
வீரவிலே.

**இரண்டாம் பரிசு**

செல்வி. சி. சத்தியபாமா,
மே/பா. திரு. சின்னேயா,
"சத்தியேஸ்வரிபவன்,"
சன்னதி ரேட்,
இடைக்காடு.

**பரிசுப்பணம் செப்டம்பர் மாதம் 5-ந்திகதிஅனுப்பி வைக்கப்படும்.**

ஒரு பிழையுடன் அனுப்பிய மற்றையோர்: 1. தெ. இந்திரக்குமார், கோண்டாவில் மேற்கு; 2. செல்வி. மு. சற்குணம் புலவர் லேன், நல்லூர்; 3. சி. தம்பிராசா, சண்டிருப்பாய் மேற்கு; 4. சி. சிவரத்தினம் மே/பா. திரு வி. சிவசுப்பிரமணியம், கந்தரோடை றேட்; 5. வி. பூர்ணநந்தேஸ்வரன், "கணேசவாசா," உடுவில்; 6. செல்வி. இராசாத்தி ஆறுமுகம், சுதுமலை கிழக்கு, மானிப்பாய்; 7. K. சங்கரசிவம், ஸ்ரீ இராமகிருஷ்ண இல்லம், புசல்லாவை; 8. தெ. இந்திரக்குமார், கோண்டாவில். மேற்கு; 9. ஆனந்தக்குமாரசாமி, நடுத்தெரு, காரைநகர்; 10. பொ. நாகரத்தினம், தங்கோடை, காரைநகர்; 11. திருமதி நவமலர் பாக்கியநாயகம், 9, அருணகிரி வீதி. மட்டக்களப்பு; 12 செல்வி. ம. அப்புத்துரை. டங்கெல்ட் பாடசாலை, டிக்கோயா; 13. செல்வி. தா. சீதாலட்சுமி. மே/பா. P. W. D. ஓவசியர், பண்டாரவளை; 14. N. சண்முகலிங்கம், புன்னுக்கட்டுவன் வடக்கு, சுன்னுகம்; 15 செ. கேசரத்தினம், வருசப்பிலம், சுன்னுகம்; 16. சி. சிவஞானசுந்தரம், கோட்டைக்காடு, சுன்னுகம்; 17. சு. சிவபாதசுந்தரம், 6-ம் வட்டாரம், புங்குடுதீவு; 18-19- செல்வி. மகாலட்சுமி நடராசா, "நாகமணி வாசம்", நீலிப்பந்தனை, காரைநகர்; 20 செல்வி. அ. கமலாதேவி, 60, ஆனந்தன் வடலி வீதி, அரியாலை; 21. செல்வி. க. பவானி, 205, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி; 22. க. கனகரத்தினம், நீர்ப்பாசன இலாகா, இரத்துமலானை; 23. S. R. கிருஷ்ணபிள்ளை, கணக்குப் பகுதி, கச்சேரி, மட்டக்களப்பு; 24. செல்வி. த. ரஞ்சினி தேவி, சங்கானை கிழக்கு, சண்டிருப்பாய்; 25. த. ரகுரஞ்சன், சங்கானை கிழக்கு, சண்டிருப்பாய்; 26. செல்வி. புவனேஸ்வரி கணபதிப்பிள்ளை, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்; 27. M. T. பறூக், அரசினர் முஸ்லிம் ஆண்கள் பாடசாலை, அக்கரைப்பற்று; 28. அ. பாலசுந்தரம், சாலக்கடவை, தும்பளை றேட், பருத்தித்துறை; 29. செல்வி. க. தங்கம்மா, கலாசாலை வீதி, திருநெல்வேலி; 30. ருக்மணிகாந்தன், பரமேஸ்வரக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

53 நேயர்கள் இரண்டு பிழைகளுடன் விடையனுப்பியிருந்தனர். இடமின்மையால் அவர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படவில்லை. சென்ற இதழில் போட்டிக் குறிப்புகளில் சில தவறுகள் ஏற்பட்டுவிட்டன. அவற்றைச் சுட்டிக்காட்டிய நேயர்களுக்கு நன்றி. தங்கள் ஊகத்தினுல் அந்தப்பிழைகளைத் திருத்தி யனுப்பிய எல்லாரையும் பாராட்டுகின்றோம்.

# அறிவு வளர்ச்சிப் போட்டி இல. 4.

முதற் பரிசு: ரூபா. 15 இரண்டாம் பரிசு ரூபா. 10

முடிவு திகதி: 20—8—60.

நிபந்தனைகள் வழக்கம்போலவேயுள்ளன. மையினுல் தெளிவாக எழுதப்படாத விடைகள், கண்டிப்பாக நிராகரிக்கப்படும். சரியான விடை திருநெல்வேலி இலங்கா நிதி லிமிற்றெட் தலைமை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வி | 2 க | ட | க | 3 வி | ■ |
| 4 | | பு | ■ | | 5 |
| 6 | | ■ | 7 | | ம் |
| | ■ | 8 க | | லை | ■ |
| ■ | 9 | | | ■ | 10 |
| 11 | ற் | | ம் | ■ | ல் |

அனுப்புபவர் பெயர்: ..........................................................

விலாசம்: ..........................................................

..........................

### குறிப்புகள்

**இடமிருந்து வலம்**

1 தென்னுலிராமன் ஒரு .........
4 செய்யுள்.
6 சாபமிடு.
7 சில இசைக்கருவிகளின் இது இனிமையாகவிருக்கும்.
8 சிலர் இதை விரும்பியுண்பார்கள்.
9 அபாயம் நிறைந்த இந்நோய் சிதைந்திருக்கின்றது.
11 குறைவு என்பது பொருள்.

**மேலிருந்து கீழ்**

1 பாரதத்தை எழுதிய முனிவர்.
2 மா அரித்தபின், அரிதட்டில் இருப்பது.
3 எல்லோரும் விரும்புவது.
5 இப்படிச் சொன்னுல் சம்மதம் என்று பொருள்.
7 இந்தத் துறையில் பலர் ஈடுபட்டுள்ளனர்.
8 கம்பம் முறிந்து விட்டதே!
10 பெண்களின் கண்களை இதற்கு ஒப்பிடுவார்கள்.

# வண்ணப் புத்தாடைகள்

வகை

வகையான

சீத்தைகள்

- பங்களூர், மைசூர் பட்டுச் சேலைகள்
- பார்க்கத் தெவிட்டாத பட்டு இரவிக்கைத் துணிகள்.

## ஆண்கள், பெண்கள், குழந்தைகள்

அனைவர்க்குமேற்ற அழகான ஆடைகள் மலிவாகக் கிடைக்கும்.

சூட்கேஸ்களும் சாய்ப்புச் சாமான்களும் விற்பனைக்குண்டு.

## K. K. நடராசா அன் பிரதர்ஸ்,

கே. கே. எஸ். வீதி : : சுன்னாகம்.

# புகைப்பட ரசிகர்களுக்கோர்

## அரிய சந்தர்ப்பம்!

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு

—"நல்லூர் பாலன் ஸ்டுடியோ"வில்

1-8-60 தொடக்கம் 31-8-60 வரை

## அரைச்சலார்

அரிய சந்தர்ப்பத்தை இழந்துவிடாதீர்கள்.

# பாலன் ஸ்டுடியோ

பருத்தித்துறை ரோட் : நல்லூர்

# S. SAVERIMUTTU

73, K. K. S. Road, Grand Bazaar, JAFFNA.

**DEALERS IN :**

Oilmanstores Grocery, Stationery, Glassware, Sandles, Hats, Umbrellas, Socks, Suit-Cases and Ladies Original Hairs.

**சகலவித**

சாய்ப்புச் சாமான்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், குடைகள், மேஸ் வகைகள், சூட்கேஸ்கள், பெண்களின் முடிமயிர்கள் முதலியன விலை சகாயமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

## எஸ். சவிரிமுத்து

73, காங்கேசன்துறை வீதி, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

## ஜொலிக்கும் வைரங்கள்

## அழகிற் சிறந்த ஆபரணங்கள்

இவைகட்கு எம்மிடம் வாருங்கள்!

**நவநாகரிக டிசைன்களில்**

நகைகள் குறித்த காலத்தில்

## ஓடருக்குச் செய்து கொடுக்கப்படும்

## பிரகாசா ஆபரண மாளிகை,

**Prop: S. ஞானப்பிரகாசம்**

83, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

நாடக விமர்சனம்

# வழி தெரிந்தது

யாழ்-ஒறியன்ஸ் கழகம்

சென்ற 7. 7. 60 வியாழனன்று சில மணி நேரங்களைச் சந்தோஷமாகக் கழிப்பதற்கு "வழி தெரிந்தது". யாழ்ப்பாணத்தில் நடிப்புக் கலையை வளரச் செய்வதற்கு "வழி தெரிந்தது". ஒறியன்ஸ் கழகத்தினர் யாழ்-மத்திய கல்லூரி மண்டபத்தில் "வழி தெரிந்தது" என்ற நாடகத்தை அரங்கேற்றினர்.

"நாடகத்திற்கு கதையும் முக்கியமில்லை; விறு விறுப்பும் தேவையில்லை. ஆனால் மூன்றரை மணி நேரத்திற்கு ரசிகர்களை அங்கிங்கு அசையவிடாது நாடகத்தை ரசிக்கச் செய்வோம்" என்று ஒறியன்ஸ் கழகத்தினர் சவால் விட்டிருந்தார்களானல் அதற்குக் காரணம் இந்த மூவராயிருக்கலாம்: கலையரசு சொர்ணலிங்கம், கொமிக் செல்வரத்தினம், ம. சண்முகலிங்கம்! அந்தச் சவாலை வெற்றிகரமாக நிறைவேற்றிய பெருமையும் இவர்களைத்தான் சாரும். அவர்கள் மேடையில் தோன்றிய பொழுதெல்லாம் பார்க்காத கண்கள் பார்த்தன; சிரிக்காத வாய்கள் சிரித்தன; தட்டாத கைகள் தட்டின! முதிர்ந்த அனுபவமும் முதிர்ந்த திறமையும் கொண்ட முதிர்ந்த கலைஞர் சொர்ணலிங்கம் மேடையில் தோன்றி 101 வியாதிகளின் பெயரைக் கட்டவிழ்த்தபோது எங்கள் "தலை கனத்தது; மூக்கு அடைத்தது; பல் வலித்தது; கண் ஒரு மாதிரியாக இருந்தது!" கிழக் கலைஞரே! கலைக் கிழவரே! சபாஷ்! சபாஷ்!! உடையார் காத்தியேசுவின் (செல்வரத்தினம்) 'எடேய்'க்கு ஒரு காதைக் கொடுத்தால் தரகர் முகத்தாரின் (சண்முகலிங்கம்) 'ஓம்'இற்கு மற்றக் காதைக் கொடுக்கவேண்டும். அசல் யாழ்ப்பாணத் தமிழில் அவர்கள் இருவருக்குமிடையில் நடைபெற்ற உரையாடலினல் எழுந்த கைதட்டலும் சிரிப்பொலியும் மண்டபத்தையே ஆட்டி அசைத்திருக்கும்! நல்ல காலம் திறந்த வெளியரங்கில் நாடகத்தை நடத்தினர்களோ, பிழைத்தார்களோ! ரகுநாதன் – மகேஸ்வரன் காதல் காட்சி; "எலும்பெல்லாம் கரைந்து சதையாகிப் போன" வேலைக்காரன்; வெண்கலக் குரலில் பாடிய தெருப்பிச்சைக் காரன்; — இவர்களை மறக்க முடியாது.

குறைகள் இல்லாமல் ஒரு நாடகம் அரங்கேறுவதா? பேசும்போது ரகுநாதன் பிடித்த "அபிநயம்"; ஒலிபெருக்கியில் பேசுவதும், நண்பனுடன் உரையாடுவதும் ஒன்றுதான் என்ற மனேகரனின் 'நினைப்பு', நாடகத்தின் வில்லர்கள் நடிப்புத் துறைக்கே வில்லர்களாக மாற முயன்ற முயற்சி — இந்தக் குறைகளைக் கவனித்தவர்கள் குறைவு.

நாடகம் நன்ருக நடிக்கப்பட்டது; நன்ருக ரசிக்கப்பட்டது. பாராட்டை எடுத்தவர்கள் அவர்கள்; பாராட்டைக் கொடுத்தவர்கள் நாம் - ரசிகர்கள்!

—சிற்பி

* ஆனந்தவிகடன், கலைச்செல்வி. Times of Ceylon Observer Daily News. வீரகேசரி. தினகரன். சுதந்திரன் முதலிய பத்திரிகைகள்.
* பழவகைகள், குளிர்பானங்கள், சுத்தமான வெண்ணெய்.
* பித்தளை, அலுமினிய, எவர்சில்வர், பாத்திரங்கள்.
* தொப்பி சப்பாத்து. செருப்பு, வகைகள்.
* சாய்ப்புச்சாமான்கள்.

இவை எல்லாம் கிடைக்கும்.

# இந்திரபவான் மில்க் பார்,

518, கே, கே, எஸ். வீதி : : சுன்னுகம்.


---

## புதிய தொடர்கதை!

# மனப்பாறை,

**சிவஞானம்**– அறிவும் ஆண்மையும் இலட்சிய வேகமும் நிறைந்த ஆணழகன்.

**சரசு**– விழியாலே மொழிபேசும் எழிலோவியம்.

இவர்களுக்கிடையில் அரும்பியது புனிதமான காதல். அது மொட்டவிழ்த்து மலரவிருந்த நேரத்தில் வந்து குறுக்கிட்டது விதி.

தொடர்ந்தது போராட்டம்.

வென்றது யார்? தோற்றது யார்?

காதல் கட்டவிழ்த்தோட, சோகம் கரை புரண்டு பாய, இன்பமும் துன்பமும் இணைந்துபுரள அழகு தமிழில் எழுதுகின்ருர் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்

**உதயணன்.**

சித்திரம் மாலதி

**விரைவில்**

**ஆரம்பமாகிறது!**

குழந்தைகளின் குறும்புச் சிரிப்பை
பெண்களின் இயற்கை எழிலை
திருமணக் காட்சிகளை

உயிரோவியமாக்கித்
தருகின்றோம்.

# பிறின் பிறின்ஸ்

(அதிபர்: M. நடராஜா)

கே. கே. எஸ். வீதி : : சுன்னாகம்.

Registered at the G.P.O. as a News paper KALAICHEL'

★ உயிரோவியமான
படங்களுக்கு



செல்வம்ஸ்

போன்:436. யாழ்ப்பாணம்.

யாழ். — தமிழ் இலக்கிய மன்றத்திற்காக, சுன்னாகம், கலாதேவி